விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 22 வெள்ளிக்கிழமை (09.10.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 294

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :- 021 222 5392

# நேரடி இணக்கப்பாடுகள் இன்றி புலிகள் சரணடைய முயற்சித்தனர்

## முன்னாள் பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சர்வதேச சமூகத்தின் ஊடாக விடுதலைப்புலிகள் சரணடைய எத்தனித்தனர் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எனினும் சரணடைதல் தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எவ்வித நேரடி இணக்கப்பாடுகளும் எட்டப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்கப்பல் கடற்படை வசம்!

(காலி)

காலியில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் வைத்து இலங்கை கடற்படையினரால் ஆயுதக் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கை கொடியுடன் காணப்பட்ட இந்த ஆயுதக் கப்பலில் 810 துப்பாக்கிகள் இருந்ததாக கடற்படைத் தளபதி வைஸ் அட் மிரல் ரவீந்திர 24ஆம் பக்கம் பார்க்க....

## விசாரணைக்குச் சென்ற கோத்தபாய ராஜபக்ஷ!

(கொழும்பு)

ரக்னா லங்கா நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றினை பெற்று கொள்வதற்காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வாக்குமூலம் பெற்றுகொள்வதற்காக கோத்தபாய உட்பட 09 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் லெசில் டி 24ஆம் பக்கம் பார்க்க....

## பிரதமர் ரணில் நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஐந்து நாட்கள் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்து கொண்டு பிரதமர் மற்றும் பிரதிநிதிகள் குழு நேற்று இலங்கை வந்தடைந்தது.

எமிரேட்ஸ்விமான சேவைககு சொந்தமான ஈ.கே.349 ரக விமானத்தில் அதிகாலை 1.30 மணியளவில் 24ஆம் பக்கம் பார்க்க....

## பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்கவிற்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபராகவே இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு தமிழர் ஒருவர் நியமிக்கப் 23ஆம் பக்கம் பார்க்க....

## தொண்டராசிரியர்களுக்கு 6 மாத காலத்துக்குள் நியமனம்

### கல்வி அமைச்சர் உறுதி



(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆறு மாத காலத்திற்குள் நியமனங்களை பெற்றுதர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உறுதி அளித்தார்.

வன்னிமாவட்ட தொண்டர் ஆசிரியர்களினால் வடமாகாண சபைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது. 23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் உரை



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளை காலத்தை இழுத்தடிக்காது விரைவில் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் 23ஆம் பக்கம் பார்க்க....

## அதிபர் சேவை தரம் - 3 தெரிவுப் பரீட்சை நவ.21

(கொழும்பு)

அதிபர் சேவை தரம் 3 இற்கான தெரிவுப் பரீட்சை நவம்பர் 21 சனிக்கிழமை நடைபெறும் என உத்தியோக பூர்வ தகவல் வெளியானது.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்காக நாளை நாடு முழுவதும் நடத்தப்படவிருந்த தெரிவுப் பரீட்சை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர்சங்கம, இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் என்பவற்றின் கோரிக்கையை அடுத்து எதிர்வரும் நவம்பர் 21-ம் திகதி சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## சில்லில் நசியுண்டு இளைஞன் பலி

(பளை)

உழவு இயந்திரத்தில் இருந்து தவறிவிழுந்த இளைஞர் சில்லினுள் நசியுண்டுஉயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் பளை, சின்னத்தாளையடியில் மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரத்தில் இருந்து தவறி விழுந்த நிலையில், இளைஞன் அவ் இயந்திரத்தின் சில்லில் அகபட்டு 23ஆம் பக்கம் பார்க்க....

## புலி உறுப்பினர் இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இராணுவச் சிப்பாய்கள் எட்டுப்பேரை கொலை செய்த விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் இரண்டு பேருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்பட்டுக் கொண்டிருந்த 2007-ம் ஆண்டு காலகட்டத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அக்காலப்பகுதியில் வில்பத்து வனாந்தரப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ டபிள்கெப் வாகனம் ஒன்றின் மீது குறித்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருவரும் மேற்கொண்ட தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர்.

சம்வம்தொடர்பானவழக்குநேற்று முன்தினம் 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு தூதுவரை அனுப்புகிறது யப்பான்

### உள்நாட்டு பொறிமுறையை கண்காணிக்க

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் தொடர்பிலான செயன்முறைகளை கண்காணிக்க கம்போடியாவில் அமைக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தில் உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய மோட்டூ நுகுசி இம்மாதம் கொழும்பு வரவுள்ளார்.

இது தொடர்பில் ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் 30ஆவது கூட்டத்தொடரில் ஜெனிவாவுக்கான ஜப்பானிய பிரதிநிதி ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜப்பானிய பிரதமர் சின்ஷா அபே ஆகியோர் டோக்கியோவில் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் இனங்களுக்கு இடையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் செயற்படும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்தின் பணிப்பாளர் சபையின் முன்னாள் தலைவரான மோட்டூ நுகுசி ஆராய்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

காணாமற்போனோர் தொடர்பில் விசா 24ஆம் பக்கம் பார்க்க....

## மாவட்ட இணைப்பாளரை அரசு நியமிக்க வேண்டும்!


### வடக்கு மாகாணசபை கடிதம்

(யாழ்ப்பாணம்)

மத்திய அரசினால் மாவட்டங்களிற்கு நியமனம் செய்யப்படும் மாவட்ட அமைச்சர் என்ற பதவியினை நீக்கி மாவட்ட இணைப்பாளர் என்ற பதவியினை வழங்குமாறு வடக்கு மாகாண சபை ஜனாதிபதியிடம் கோரவுள்ளது.

மத்தியால் மாவட்டத்திற்கு அமைச்சர் நியமிக்கப்பட்டால் அது அதிகாரப்பகிர்விற்கு முரணாக அமையும் எனவும் 23ஆம் பக்கம் பார்க்க....

## நாடாளுமன்றில் தனி அறை - மகிந்த



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் தனக்கு தனியான அலுவலக அறை ஒன்றை ஒதுக்கி தரு 24ஆம் பக்கம் பார்க்க....

# மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**



09.10.2015 முதல் 17.10.2015 வரை
9 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(சி-2407)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

## நாதன் இன்

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.


## ஏல விற்பனை

பாவனைக்கு உதவாத புத்தகங்கள், மரமேசை 01, பழுதடைந்த இரும்பு வாளி, பாலர் மேசை 20 போன்ற பொருட்கள் 16.10.2015 அன்று ஏலத்தில் விடப்படும்.
(C-2416)

அதிபர்
யா/ உரும்பிரய் சைவத்தமிழ் வித்தியாலயம்
உரும்பிராய்

## ஏல விற்பனை


யா/கொட்டடி நமசிவாய வித்தியாலய நூலகத்தில் உள்ள பழைய புத்தகங்கள் 2015.10.14 புதன்கிழமை மதியம் 12.00 மணிக்கு ஏல விற்பனைக்கு விடப்பட உள்ளது.
புத்தகங்களின் எண்ணிக்கை (73)
(C-2411)

அதிபர்
யா/ கொட்டடி நமசிவாய
வித்தியாலயம்


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## தென்மராட்சியில் முதன்மை மாணவனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ரவிச்சந்திரன் திலக்சன் - 188 புள்ளிகள்**
**மாவட்ட நிலை - 5**



எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற மாணவர்களில்

**ர. திலக்சன் - 188**

புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலையில் 5 ம் நிலையைப் பெற்றுள்ளார்.

இவரையும் சித்தியடைந்த ஏனைய 40 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

(C-2414)
அன்பொளி கல்வி நிலையம்
சாவகச்சேரி.

## மக்கள் வங்கி அறிவித்தல்

பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் காலை 8.30 மணி தொடக்கம் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்

| கிளைகள் | சேவை நிலையம் | திகதி | ஏலம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| காங்கேசன்துறை | மல்லாகம் | 28.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |
| அச்சுவேலி | புத்தூர் | 28.11.2015 | யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| ஊர்காவற்துறை | – | 29.11.2015 | யாழ் பிராந்திய தலைமைக் காரியாலயம் |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | 29.11.2015 | யாழ். ஸ்ரான்லி வீதி கிளை |
| | மானிப்பாய் | | |
| நெல்லியடி | – | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| | கைதடி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-2413)

## பாராட்டு வாழ்த்தும் பிறந்தநாள் வாழ்த்தும்




கோயில் வீதி,
மல்லாகம்.

**தி.செல்வஞானம்**

கோயில் வீதி மல்லாகத்தினை சேர்ந்த எமது புதல்வன் தி.செல்வஞானம் அவர்கள் 15-09-2015 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பட்டம் பெற்றதையிட்டு வாழ்த்துவதோடு அவர் இன்னும் பல சிறப்புக்கள் பெற வேண்டும் என்றும் அவரது 27 ஆவது பிறந்தநாளில் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
செ.திருஞானம் (அப்பா) (குடும்பத்தினர்)
செ.ஜெகநாதன் (அத்தான்) (குடும்பத்தினர்)
தி.சந்திரஞானம் (அண்ணா) (குடும்பத்தினர்)
தி.ஜெகநாதன் (அண்ணா) (குடும்பத்தினர்)
ஜேம்ஸ் சறோஜினி (குடும்பத்தினர்)
(1999)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை மாணவி

**செல்வி அபிநயா தட்சணாமூர்த்தி**

5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.

திரு/திருமதி தட்சணாமூர்த்தி - மேனகா தம்பதியரின் புதல்வி செல்வி த.அபிநயாவை பல கலைகளையும் பற்பல பட்டங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ்க என பாராட்டி வாழ்த்துகின்றோம்.

C-2415)

சற்கோட்டை,
அல்வாய் வடமத்தி.

பாராட்டி வாழ்த்தும் நல்லுள்ளங்கள்,
ஈழகேசவன் (சித்தப்பா), சந்திரகலா (சித்தி),
சகோதரர்கள் :- வசந்தன், நயாயினி, சஜிந், வர்ஷா (லண்டன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அதிபர்
**திரு. கிருஷ்ணப்பிள்ளை விக்னராஜா**
(SLPS-II)



எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி நாமகள் கஜேந்திரகுமார்**
(SLTS-2-I)

ஆகியோர் 06.10.2015 அன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதிமேதகு ஜனாதிபதியிடம் சிறந்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினை பெற்றுக் கொண்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(c-2417)

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

# தமிழர் தரப்பு எதிர்பார்க்கும் தீர்வை பேச்சுவார்த்தைகள் மூலம் பெறலாம்

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர் தரப்பு எதிர்பார்க்கும் அரசியல் தீர்வை பேச்சுவார்த்தைகளின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். உள்நாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சர்வதேச மன்றத்தில் நிற்க வேண்டிய அவசியம் இனி இல்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் சர்வதேச தரப்புகளிடம் வாக்குறுதி கொடுத்து வரும் நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

## எக்னெலிகொட கிரித்தலே முகாமிலிருந்து வெலிகந்தவிற்கு அழைத்து செல்லப்பட்டார்

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கிரித்தலே இராணுவ முகாமிலிருந்து, வெலிகந்த பிரதேசத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. பிரகீத் எக்னெலிகொட காணாமற போன சம்பவம் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.


இந்த விசாரணைகளின் ஓர் கட்டமாக சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரிகள் உள்ளிட்ட 11 சந்தேக நபர்கள் கிரித்தலே முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

கிரித்தலே முகாமிலிருந்து எக்னெலிகொட வெலிகந்தவிற்கு அழைத்துச் செல்லப்பட்டரா? அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டமைக்கான காரணம் என்ன? அதன் பின்னர் என்ன நேர்ந்தது? என்ற கேள்விகளுக்கு விடை தேடும் வகையில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

2010ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ம் திகதி இராஜகிரிய பிரதேசத்திலிருந்து, கிரித்தலே முகாமிற்கு எக்னெலிகொட அழைத்துச் செல்லப்பட்டமை உறுதியாகியுள்ளது.(இ-10)

## அமைச்சர்களை சுயாதீனமாக இயங்க இடமளிக்கவில்லை

### மகிந்தமீது மைத்திரி குற்றச்சாட்டு



(கொழும்பு)

மகிந்த அரசாங்கத்தில் அமைச்சர்கள் சுயாதீனமாக இயங்க இடமளிக்கப்படவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்று பதினைந்து ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் விளையாட்டுத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு விளையாட்டுத் துறை அமைச்சர்களை நான் குறை சொல்ல மாட்டேன்.

ஏனெனில் நான் சுகாதார அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் எனக்கு சுதந்திரமாக இயங்க இடமளிக்கப்படவில்லை.

எனவே அமைச்சர்கள் கடமைகளை செய்யவில்லை என நான் குற்றம் சுமத்தப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சுசந்திகா ஜயசிங்க தனது சுயசரிதத்தையும் நேற்றையதினம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## காணாமற் போனோர் தொடர்பில் மேலும் சாட்சிகள் விசாரணை



காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் குறித்து மேலும் சாட்சிகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐவர் அடங்கிய விஷேட விசாரணைக் குழு இதற்காக நியமிக்கப்பட்டுள்ளதாக, ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்தார்.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவினர் தற்போது கிளிநொச்சி பகுதியில் சாட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாடுகள் குறித்து மாவட்ட மட்டத்தில் வாய்மொழி மூலம் வாக்குமூலம் பெறும நடவடிக்கைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றன.

இதன்படி அந்த முறைப்பாடுகள் தொடர்பில் அந்தந்தப் பகுதிகளுக்கு சென்று மேலும் சாட்சிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் இந்த ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படவுள்ளதாக, மெக்ஸ்வெல் பரணகம மேலும் தெரிவித்தார். (இ-10)

## 14 உத்தியோகத்தர்கள் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலஞ்சம் பெற்றுக் கொண்ட 14 சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

பாரிய போதைப் பொருள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள வெலே சுதா என்ற போதைப் பொருள் வர்த்தகரிடம் ஈசீ கேஷ் முறையில் பணம் பெற்றுக்கொண்டமை உறுதி செய்யப்பட்ட அதிகாரிகளின் பணியே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் 14 உத்தியோகத்தர்களின் பணி இடைநிறுத்தப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் ரோஹண புஷ்பகுமார அறிவித்துள்ளார். (இ-10)

## குழந்தையை மூன்று முறை நிலத்தில் அடித்துக் கொலை செய்தார் கணவர்

### மனைவி மன்றில் சாட்சி

(கொழும்பு)

தனது ஒரு வயதும் ஒரு மாதமுமேயான பச்சிளம் குழந்தையை தனது கணவர் 3 முறை நிலத்தில் அடித்து கொலை செய்ததாக குழந்தையின் தாய் நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

கடந்த வருடம் மார்ச் 26ஆம் திகதி குறித்த சம்பவம் இடம் பெற்றிருந்ததுடன், இது குறித்தான விசாரணை நேற்று அம்பாறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையிலேயே குறித்த குழந்தையின் தாய் இவ்வாறு வாக்குமூலம் வழங்கினார்.

குறித்த தினத்தில் தானும், கணவரும் குழந்தையும் சந்தைக்குச் சென்றதாகவும் கணவரை குழந்தையை வைத்திருக்கச் சொலலியதாகவும் பின்னர் சந்தையிலிருந்து திரும்பியதாக, குழந்தையின் தாய் தெரிவித்தார்.

அதனை அடுத்து குழந்தையை வைத்திருந்த கணவர், குழந்தை அழ ஆரம்பித்ததால், திடீரென குழந்தையை நிலத்தில் வீசி அடித்ததாக தெரிவித்தார்.

பின்னர், மேலும் இருமுறை இவ்வாறு செய்ததாகவும், குழந்தையை காப்பாற்றச் சென்ற தனக்கு தலையிலும் முதுகிலும் முரட்டுத்தனமாக தாக்கியதாகவும், ஒரு தடவை கீழே இருந்த குழந்தையை தாக்கி கையை திருப்பி மீண்டும் நிலத்தில் போட்டதாகவும் அவர் நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

அம்பாறை, மஹாஓயவை வெகிரிஹேனவைச் சேர்ந்த மிலானி பிரதீகா என்பவரே குறித்த குழந்தையின் தாயாராவார்.

அம்பாறை உயர் நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமசந்திரன் முன்னிலையில் இடம்பெற்ற இவ்விசாரணையில், நீதிபதியின் அனுமதியுடன் பொம்மை ஒன்றை வைத்து தனது கணவர் மேற்கொண்ட தாக்குதலை விளக்கினார்.

இதன்போது, யாரிடமும் இது குறித்து கூறவேண்டாம்என தன்னை பயமுறுத்தியதாகவும் அதன் பின்னரே குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இது குறித்த மேலதிக விசாரணை எதிர்வரும் நவம்பர் 5-ம் திகதி எடுத்துக் கொள்வதாக தெரிவித்து வழக்கு ஒத்திவைக்கப்படுவதாக நீதிபதி அறிவித்தார். (இ-10)

## பிரதமரின் ஜப்பான் பயணம் வெற்றி

### சுசில் கூறுகிறார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பான் பயணம் வெற்றியளித்துள்ளதாக தொழில்நுட்ப அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



பிரதமரின் ஜப்பான் விஜயம் பாரியளவில் நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய வெற்றிகரமான ஓர் வெளிநாட்டு விஜயமாகும்.

அண்மைய வரலாற்றில் இலங்கை அரச தலைவர் ஒருவர் அல்லது பிரதமர் ஒருவர் ஜப்பானுக்கு மேற்கொண்ட மிக வெற்றிகரமான உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் விஜயத்தில் பிரதமருடன் இணைந்து கொண்டிருந்த சுசில் பிரமேஜயந்த, ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் வைத்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இதனைத் தெரிவித்தார். (இ-10)

## கொல்கத்தா இருபது - 20 போட்டி மழையால் இரத்து

# தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது தென்னாபிரிக்கா




கொல்கத்தா இருபது - 20 போட்டி மழையால் கைவிடப்பட தொடர் 2:0 என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி வசமானது.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 3 ஆவது இருபது-20 போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸில் நேற்று நடைபெற இருந்தது.

எனினும் அங்கு பெய்த கன மழையால் மைதானம் முழுவதும் தண்ணீரால் பாதிக்கப்பட்டது.

இதனால் மைதானத்தின் பவுண்டரி கோடு அருகே அதிக அளவு பாதிப்பு ஏற்பட்டது. இதை மைதான ஊழியர்கள் சரிசெய்யும் அளவில் ஈடுபட்டனர்.

இருந்தாலும் போட்டி க்கு ஏற்ற வகையில் தயார் ஆகாததால் ஆட்டம் கைவிடப்பட்டதாக நடுவர்கள் தெரிவித்தனர்.

இப்போட்டித் தொடரின் சிறப்பாட்டக்காராக துடுப்பாட்டத்தில் ஜொலித்த தென்னாபிரிக்காவின் ஜேபி.டுமினி தெரிவானார்.

ஏற்கெனவே நடைபெற்ற இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றதால் 2:0 என தென்னாபிரிக்க அணி தொடரை கைப்பற்றியது.

இத்தொடரை இழந்ததால் இந்திய அணி இருபது-20 தரவரிசையில் 2 இடம் பின்தங்கி 6 ஆவது இடத்தை அடைய, தென்னாபிரிக்க அணி 5ஆவது இடத்துக்கு முன்னேறியது. (க)

## இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து

# கொல்கத்தா - கோவா ஆட்டம் சமநிலை

கொல்கத்தா - கோவா அணிகள் மோதிய ஐ.எஸ்.எல்., தொடரின் 5ஆவது லீக் போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமனிலையானது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) கால்பந்து தொடரின் 2ஆவது பருவகாலத்துக்கான போட்டிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

இதில் கோவாவில் உள்ள படோர்டாவில் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் 'நடப்பு சம்பியன்' கொல்கத்தா அணி, கோவா அணியை சந்தித்தது.

போட்டியின் 13ஆவது நிமிடத்தில் லாரா ஜாவி கொடுத்த பந்தை பெற்ற கோல்கட்டாவின் அராட்டா இஜுமி, அந்தரத்தில் இருந்தபடியே பந்தை அடிக்க, அது அருமையான கோலாக மாறியது. இதை சமன் செய்ய போராடிய கோவாவின் முயற்சிகள் வீணாக, முதல் பாதியில் கொல்கத்தா அணி 1:0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் கொல்கத்தா வீரர்கள் சிறப்பாக ஆடிய போதும், அவ்வப்போது முரட்டுத்தனத்தை வெளிப்படுத்தினர்.

முதல் 'ரெட் கார்ட்

போட்டியின்' 62ஆவது நிமிடத்தில் கொல்கத்தா வீரர் பல்ஜித் சைனி, கோவா வீரர் கிரிகரியை தலையால் முட்ட, 'ரெட் கார்ட்' பெற்றார். இதுவே இந்த தொடரில் காட்டப்பட்ட முதலாவது ரெட் கார்ட்டாக அமைந்தது.

இதையடுத்து கொல்கத்தா அணி 10 வீரர்களுடன் விளையாடும் நிலைக்கு தள்ளப்பட்டது. பந்து பெரும்பாலும் கோவா வீரர்கள் வசம் சென்றது. இதை சரியாக பயன்படுத்திய கோவா வீரர் கீனன் அல்மெய்டா, 81ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடிக்க ஸ்கோர் 1:1 என, சமன் ஆனது.

அடுத்து முன்னிலை பெற இரு அணி வீரர்கள் எடுத்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை. முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் போட்டி சமனிலையானது. (க)




## சீன ஓபன் டென்னிஸ்

# சானியா ஜோடி அரையிறுதியில்



சீன ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா-சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி அரையிறுதிக்கு முன்னேறியது.

பீஜிங்கில் சீன ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்ற வருகிறது.

இதன் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதியில், இந்தியாவின் சானியா மிர்சா, சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் ஜோடி, ஜேர்மனியின் ஜூலியா கோயர்ஜஸ், செக் குடியரசின் கரோலினா பிலிஸ்கோவா ஜோடியை சந்தித்தது.

'டை-பிரேக்கர்' வரை நீடித்த முதல் செட்டை 7:6 எனக் கைப்பற்றிய சானியா ஜோடி, இரண்டாவது செட்டை 6:4 என தம்வசப்படுத்தியது.

ஒரு மணி நேரம், 19 நிமிடம், 47 வினாடி வரை சென்ற காலிறுதியின் முடிவில், சானியா-ஹிங்கிஸ் ஜோடி 7:6, 6:4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது. (க)

# கரீபியனுக்கு எதிரான தொடரை கைப்பற்றுவதே எனது இலக்கு

## அஞ்சலோ மத்யூஸ்



மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றுவதே தனது தற்போதைய இலக்கு என்று இலங்கை அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் கூறியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் இரண்டு இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது. முதல் டெஸ்ட் தொடர் எதிர்வரும் 14ஆம் திகதி தொடங்குகிறது.

இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடரை கைப்பற்றுவதை முதல் இலக்காக வைத்திருப்பதாக இலங்கை அணித் தலைவர் மத்யூஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய மத்யூஸ், "பாகிஸ்தான், இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்த நிலையில், இந்த தொடரில் புதிய யுக்திகளுடன் களமிறங்கவுள்ளோம்.

துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட மந்தமான நிலையை மாற்ற சில பயிற்சிகளை எடுத்துள்ளோம். சுழற்பந்து வீச்சாளர் தரிந்து கௌஷாலின் பந்து வீச்சு முறையற்ற முறையில் உள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இருப்பினும் அவருக்கு ஓப்-ஃபிரேக் பந்து வீச அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் அவரை அணியில் இணைத்துக் கொள்ள ஆலோசிக்கப்படும்.

மேற்கிந்திய தீவுகள் அணியில் அதிரடி ஆட்டக்காரரான கிறிஸ் ஹெய்ல் இல்லாத நிலையிலும், அந்த அணி இளம் வீரர்களால் வலுவான நிலையில் இருக்கிறது. இதனால் கடுமையான சவால் காத்திருக்கிறது.

முன்னாள் வீரர்களான ஜெயவர்த்தன, சங்கக்கார இல்லாமல் களமிறங்கவுள்ளோம். புதிய சவாலாக இருந்தாலும் சிறப்பாக விளையாட ஆவலாக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். (க)

# துப்பாக்கி முனையில் 20 லட்சம் கொள்ளை

(கொழும்பு)

கதிர்காமம் அருகே புத்தள பிரதேசத்தில் சுமார் 20 லட்சம் ரூபா துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புத்தள நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையமொன்றில் நேற்று முன்தினம் இந்தக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

புத்தள, யுதங்கனாவ பிரதேசத்தில் அமைந்திருக்கும் குறித்த எரிபொருள் நிலையத்துக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் துப்பாக்கி முனையில் ஊழியர்களை அச்சுறுத்தி அடிபணிய வைத்த பின்னர் இந்தக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த சுமார் 20 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அதன் உரிமையாளர்கள் பொலிஸிமல் முறைப்பாடு செய்துள்ளனர். (இ-10)


## 45ம் நாள் நினைவும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 26.08.2015 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு

அமரர்

**நாகராசா அகிலன்**

பிறப்பு 22 – 11 – 1991



இறப்பு 26 – 08 – 2015

அவர்களின் வீட்டுக் கிரியைகள் 09.10.2015 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்கேற்று தொடர்ந்து வீட்டில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அளவெட்டி மேற்கு,
விசவெட்டி.

(1992)

இங்ஙனம்
குடும்பத்தினர்.



## 31ம் நாள் நினைவஞ்சலியும் இறை வழிபாட்டு அழைப்பும்

**மண்ணில்**
16-09-1964



**விண்ணில்**
09-09-2015

### அமரர். அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி

(முன்னாள் பருத்தித்துறை நகரசபைத் தலைவர்)

எமது அன்பு மகனின் துயரச்செய்தி கேட்டு நேரடியாக வந்து துயர்தனைப் பகிர்ந்த அன்பு உறவுகளுக்கும், அயலூரில் இருந்து வந்து கருணையுடன் செயற்பட்ட நம் உள்ளங்களுக்கும், வெளி இடங்களில் இருந்து வந்து துயரங்கள் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், எம் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் 09.10.2015 இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் இறைவழிபாட்டில் கலந்து கொண்டு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு எம்மால் நடத்தப்படும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(1983)

சென். அன்ரனீஸ் ஒழுங்கை,
பருத்தித்துறை.

தகவல்
ம.அந்தோனிப்பிள்ளை. (ராசா)
(தந்தை) மற்றும் குடும்பத்தினர்.

(இவ் அறிவித்தலை ஏற்று சகலரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்)


## ராசி பலன்

09.10.2015
(புரட்டாதி 22, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
துவாதசி முன்னிரவு 11.38மணிவரை
மகம் முன்னிரவு 7.08 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
சர்வதேச அஞ்சல் தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திராடம்,திருவோணம் | | |
| | | | குரு, சுக்<br>செவ், சந் |
| | சனி | | சூரி,<br>ராகு<br>புத |

**மீனம்** தேகநலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும்,தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்,சச்சரவை விட்டு சாதிக்கும் எண்ணம் உருவாகும்.

**மேடம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்,வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்,காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்,பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள்,மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கடகம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம்,புதிய பொருட் சேர்க்கையுண்டு,காரிய அனுகூலமுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.



**சிம்மம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், தன்னம்பிக்கையோடு பணியாற்றுவீர்கள், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்,வழிபாடு ஆனந்தம் தரும்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் வெற்றி பெறுவீர்கள்,தொழில் வளர்ச்சி கூடும் நாள்,பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்,பெரிய மனிதர்களின் தொடர்பு அதிகரிக்கும்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கன்னி** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்,காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும்,சுப செலவுகள் கூடும்நாள்,கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.


இந்தியாவில் இருந்து 44 உறுப்பினர்களைக் கொண்ட இளம் வர்த்தகக் குழுவினர் யாழ். மாவட்டத்துக்கு வருகைதந்து வர்த்தக ரீதியான கலந்துரையாடல் ஒன்றினை நேற்றையதினம் யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் மேற்கொண்டிருந்தனர். இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ. நடராஜன், வட மாகாண வர்த்தக வாணிப அமைச்சர். பா. டெனீஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் இக் கலந்துரையாடலில் திண்டுக்கல் மற்றும் மதுரை ஆகிய இடத்தில் இருந்து வருகை தந்திருந்த இளம் வர்த்தகக் குழுவுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள தொழிலதிபர்கள், மகளிர் அமைப்புக்கள், இளைஞர் அமைப்புக்கள், வர்த்தக சங்கம், மற்றும் பொது அமைப்புக்கள் என்பன கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர். (படங்கள்:பொ.சோபிகா)

## வடக்கில் எந்தவொரு பிரதேச செயலகங்களிலும் பிறப்பு,இறப்பு,விவாக சான்றிதழ்களை பெறலாம்

### யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ளவர்களும் வடமாகாணத்திலுள்ள எந்தவொருபிரதேச செயலகங்களிலும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கணனியின் உபயோகத்துடன் பிறப்பு,இறப்பு மற்றும் விவாக சான்றிதழினை வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம்,மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய அனைத்து மாவட்டங்களிற்கும் உரிய கணனிமயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களின் பிரதிகள் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் மூலமும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க வட மாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ளவர்களும் பிறப்பு,இறப்பு மற்றும் விவாக சான்றிதழ்களின் பிரதிகளை யாழ்.மாவட்டத்தின் எந்தவொருபிரதேசசெயலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## ஐ.நா.தீர்மானம் தமிழருக்கு நீதி நியாயத்தை வழங்காது

### மாக்சிச-லெனினிசக் கட்சி அறிக்கை

**சட்டச் சிக்கல்களுக்கும் நடைமுறை பிரயோகங்களுக்கும் வழிவகுத்துநிற்கும் ஐ.நா. தீர்மானம் இழுத்தடிப்புக்களுக்கு உதவலாமேயன்றிப் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் நீதி, நியாயத்தையோ வேறு பலாபலன்களையோ வழங்கப் போவதில்லை என புதிய ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜெனிவா மனிதஉரிமைகள் பேரவையில் அமெரிக்கா நிறைவேற்றிய இலங்கை பற்றிய தீர்மானம், அமெரிக்க மற்றும் மேற்குலக நாடுகளின் நலன்களிற்கும் தேவைகளுக்கும் ஏற்ற வாறும், மைத்திரி, ரணில் அரசாங்கத்தைப் பாதுகாத்துக்கொள்ளும்வகையிலுமே வடிவமைக்கப்பட்டுள்ளது. .

அதேவேளை .மேற்படி தீர்மானத்தைக் தெற்கே பேரினவாதிகளும் வடக்கே தமிழ்த் தேசியவாதிகளும் கையிலெடுத்து இனவாதத்தைத் தூண்டி அதனூடாகத் தத்தமது அரசியல் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள முயல்கிறார்கள்.

இது இனங்களுக்கிடையில் அரசியற்கொதிநிலையை ஊக்குவித்து இனமோதலைத தூண்டும் முயற்சியுமாகும். இத்தகைய இரு தரப்பு முயற்சிகளையும் எமதுபுதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி மிகவன்மையாகக் கண்டிக்கிறது.

அதேவேளை, பாதிக்கப்பட்ட அனைத்துமக்களுக்கும் நீதி, நியாயம், இழப்பீடு வழங்கக் கூடியதும் அந்நியத் தலையீடுகள் அற்றதுமான நேர்மை யான விசாரணையை முன்னெடுப்பதை எமது கட்சி வலியுறுத்துகிறது.

அனைத்து மக்களினதும் நம்பிக்கையைப் பெறுமாறான ஒரு உள்நாட்டு விசாரணையை ஏற்கனவேதமிழ்த் தரப்பில் வற்புறுத்தியிருந்தால் சிங்கள மக்களின் கணிசமானஆதரவைப் பெறமுடிந்திருக்கும். ஆனால் தமிழ்த் தேசியவாதசக்திகள் தமது அந்நியவிசுவாசத்துடன் சர்வதேச விசாரணையை உயர்த்திப் பிடித்து இப்போது அமெரிக்காவால் ஏமாற்றப்பட்டுள்ளனர். தமதுஅரசியல் அவலம் தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படாமல் இருக்கும் பொருட்டு.மக்கள் கவனத்தைத் திசைதிருப்பத் தொடர்ந்தும் சர்வதேசக் குறுக்கீடு பற்றி ஒவ்வொரு விதமாக நாடகமாடு கின்றனர்.

எனவே போர்க்குற்றம், மனிதஉரிமை மீறல்கள் பற்றிய நியாயமான விசாரணையை வற்புறுத்தும் அதே வேளை எமதுகட்சி உறுதியானதும் நின்று நிலைக்கக் கூடியதுமான அரசியல் தீர்வு காண்பதன் தேவையும் அழுத்திக் கூறுகிறது எனஅந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## அறநெறி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பயிற்சி நெறி-2015

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறி ஆசிரியர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தி, சீராக்கும் வகையில் சான்றிதழ் பயிற்சி நெறி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளோம். இப் பயிற்சி நெறி பல்கலைக்கழகங்களுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டு நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறியின் ஆரம்பகட்ட பயிற்சி இம் மாதம் 10,11 ஆம் திகதிகளில் காலை 8.30 தொடக்கம் 4.30 வரை யாழ்ப்பாணம் நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் (சட்டநாதர் ஆலய வீதி) நடைபெறவுள்ளது. இதில் சான்றிதழ் பட்டய கற்கைநெறிகளுக்கான பாடத்திட்டம்,கற்பித்தல் நெறி முறைகள் பற்றிய விளக்கமும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது. இப்பயிற்சி நெறி இருநாள் வதிவிடக்கருத்தரங்காக நடைபெறவுள்ளதால் தங்கள் பாடசாலையில் விண்ணப்பித்த ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப் பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ)

## சொற்பொழிவு

(கரணவாய்)

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரமத்தில்நடத்தப்படும்வாராந்த சமய சொற்பொழிவு நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கந்தபுராண தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச் சொற்பொழிவினை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் இராசசெல்வவடிவேல் நிகழ்துவார். (இ-5-60)




## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான 2016 ஆம் ஆண்டுக்கான காப்புறுதி பத்திரத்தினை வழங்குவதற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக இம்மாதம் 10,11(சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் யாழ். மாவட்டச் செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நடமாடும் சேவையில் அரச உத்தியோகத்தர்கள் தங்களது மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதி தொடர்பான நடவடிக்கைகளினை மேற்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

## போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களுக்கு பின்வரும் கற்கை நெறிகளை கற்பிக்கும் போதனாசிரியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றது.

சமையற்கலை, வெதுப்பாளர், அறை ஒழுங்குபடுத்துநர், மின் மோட்டார் மீள் முறுக்குநர் (வைண்டிங்), உணவுப் பரிசாரகர், நீர்க்குழாய் பொருத்துநர் (பிளம்பிங்), தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர், முன்பள்ளி ஆசிரியர், அழகுக்கலை வல்லுநர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர்,அலுமினியம்பொருத்துநர்.

கல்வித்தகைமை–க.பொ.த (சாதாரண தர) தமிழ், கணிதம்,ஆங்கிலம்உட்பட4திறமைசித்திகளுடன் 6 பாடங்களில்சித்தி.

தொழில்சார் தகைமை– அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் NVQ-3/4 மட்டம் அல்லது அங்கீகரிக் கப்பட்ட நிறுவனத்தில் சம்பந் தப்பட்ட துறையில் 3 வருட காலத்திற்கு மேல் தொழில் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல்.

அனுபவம்– சம்பந்தப் பட்ட துறையில் இரண்டு வருடத்திற்கு மேலான அனுபவம்.

எனவே மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடைய வர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை எதிர்வரும் 30.10. 2015 இற்கு முன்னதாக உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## மீட்டல் வகுப்புக்கள்

இலங்கை நூலகச் சங்கத்தின் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம்2 (2014/2015) மீட்டல் வகுப்புகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படவுள்ள இம்மீட்டல் வகுப்புகளுக்கு நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திருமதி.கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கைநெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் 31ஆம் திகதி மற்றும் நவம்பர் மாதம் 1,7 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

பரீட்சையை முன்னிட்டே கற்கைநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு மீட்டல் வகுப்புக்கள் இடம்பெறவுள்ளன. (இ-5)

## உதவிப் பொருட்களை வழங்கினார் முதல்வர்



வடக்கு மாகாண முதலமைச்சரின் 2015ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து 12 இலட்சத்து 81ஆயிரம் ரூபா செலவில் பயனாளிகளுக்கு உதவிப் பொருட்கள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் யாழிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

அந்த வகையில்யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தை சேர்ந்த விசேட தேவையுடைய பல்கலைக்கழக மாணவர்கள் 6பேருக்கு 6 மடிக்கணனிகள் மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகளும் வருமானம் குறைந்த மற்றும் விசேட தேவையுடைய குடும்பங்களைச் சேர்ந்த 16 பிள்ளைகளுக்கு பாடசாலைசெல்வதற்கான துவிச்சக்கர வண்டிகளும் வருமாணம் குறைந்தவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 2 துவிச்சக்கரவண்டிகளும் 13 தையல் இயந்திரங்களும் கோண்டாவில் மத்தி சனசமூகநிலையத்தில் மாலைநேர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக 50 கதிரைகளும் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினால் நடத்தப்படும் கைத்தொழில் பூங்காவில் விசேட தேவையுடையவர்களின் பயன்பாட்டிற்காக ஒரு மடிக்கணனியும் வழங்கப்பட்டது. (இ-9)

# இனிமேல் சர்வதேசத்தினால் எந்த அச்சுறுத்தலும் இல்லை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

**மகிந்த அரசாங்கம் விட்ட தவறுகளை நிவர்த்தி செய்யும் வகையில் எமது பிரதமர் செயற்பட்டு வருகின்றார். எமது வெளிநாட்டு கொள்கைத்திட்டம் மிகத் தெளிவானது. ஆகவே இனிமேல் சர்வதேசத்தினால் எமக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதாக அரசாங்கம் சர்வதேச தரப்புகளிடம் வாக்குறுதி கொடுத்துவரும் நிலையில் அதுதொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் இடம்பெற்ற செயற்பாடுகள் தொடர்பில் நாமே தீர்வு காணவேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் நிலைப்பாடாகும்.

எனினும் இந்த செயற்பாடுகளுக்கு நாம் சர்வதேச உதவிகளையும் அவர்களது ஆதரவையும் பெற்று செயற்பட தயாராக உள்ளோம். ஆரம்பத்தில் இருந்தே நாம் உள்ளக பொறிமுறைகளை சரியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இன்று எமக்கு எதிரான பிரச்சினைகளை தீர்த்திருக்க முடியும்.

இன்றும் உள்ளக பொறிமுறைகளுக்கு அமைய அனைத்து விசாரணைகளையும் முன்னெடுத்திருந்திருக்க முடியும். ஆனால் மகிந்த ராஜபக்ஷவும் அவரது கூட்டணியும் செய்த அடக்குமுறை செயற்பாடுகள் மற்றும் அவர்களது வெளிநாட்டு கொள்கைகள் என்பனவே இன்று நாம் இவ்வாறானதொரு சிக்கலை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

சர்வதேச விசாரணைகள் நாட்டை பிரிப்பதாக கூறிக்கொண்டு வெளிநாட்டு அமைப்புகள் மற்றும் ஏனைய நாடுகளுடன் மறைமுக ஒப்பந்தங்களை மேற்கொண்டது மகிந்த அணியினரேயாகும்.

இங்கு இனவாதம் பேசிக்கொண்டு வெளிநாடுகளுக்கு கடிதங்களை அனுப்பி அவர்களை ஏமாற்றியதும் இவர்களது வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டுமேயாகும். அவ்வாறு இருக்கையில் எமது அரசாங்கம் அவற்றை நிவர்த்தி செய்து மிகச் சரியான சர்வதேச அரசியல் கொள்கையை கையாண்டு வருகின்றது.

இப்போதும் எமது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது வெளிநாட்டு விஜயங்களின்போது முன்னைய அரசாங்கம் விட்ட தவறுகள் அனைத்தையும் நிவர்த்திசெய்யும் வகையில் செயற்பட்டு வருகின்றார். அதேபோல் சர்வதேச உதவிகளை நாட்டுக்கு கொண்டுவரும் வகையில் எமது வெளிநாட்டு கொள்கையும் அமையப்பெற்றுள்ளதனால் இப்போதிருக்கும் நிலையில் சர்வதேசத்தினால் எமக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை.

அவ்வாறு இருக்கையில் இப்போது நாம் கவனிக்க வேண்டிய பிரதான விடயம் நாட்டில் அரசியல் தீர்வை மேற்கோள்வதேயாகும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

குறிப்பாக கடந்த கால சூழலையும் சம்பவங்களையும் கவனத்திற் கொண்டும் கடந்த ஆட்சியில் அரசாங்கம் விட்ட தவறுகள் மற்றும் மேற்கொண்டிருக்க வேண்டிய செயற்பாடுகளை முக்கியப்படுத்தி எதிர்வரும் காலத்தில் மீண்டும் இந்த நாட்டில் ஒரு இனவாதமாகவோ அல்லது அரசியல் ரீதியிலோ சிக்கல் நிலைமை ஏற்படாத வண்ணம் ஒரு அரசியல் தீர்வை மேற்கொள்ளவேண்டும்என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம். பிரதமரிடம் இந்த விடயங்கள தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவ்வாறான தொரு மாற்றத்தையே விரும்புகின்றனர் என்பதை வெளிப்படுத்தி வருகின்றனர். கடந்த காலங்களில் செயற்பட்டதைப போல்அல்லாது இப்போது மாறுபட்ட வகையில் நாட்டுக்குள் நிரந்தர தீர்வை பெற்றுக்கொள்ள அவர்கள் விரும்புகின்றனர்.

ஆகவே பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என்ற நிலைப்பாடு இப்போது இரண்டு தரப்பிடமும் உள்ளது. ஆகவே இனிமேலும் இலங்கையில் பிரச்சினைகளை தீர்க்க சர்வதேச மன்றங்களில்போய் நிறகவேண்டிய தேவை ஏற்படாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**பிரதீபா பிரபா -2015**

**திரு. அ.பங்கையற்செல்வன்**

எமது நிறுவனத்தின் உபதலைவராக இருந்து நிறுவன வளர்ச்சியில் பல்துறைகளிலும் சேவையாற்றி கொண்டிருக்கின்ற திரு அ.பங்கையற்செல்வன் அவர்கள் "பிரதீபா பிரபா 2015" அதிபருக்கான நன்மதிப்பு விருதைப்பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். தங்கள் சேவையில் சிறந்து, மேலும் பல விருதுகளைப்பெற வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

நிர்வாகத்தினரும் உத்தியோகத்தர்களும்
கல்வி வளர்ச்சி அறக்கட்டளை
கிளிநொச்சி.

(சி-2409)

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா:60செவ் 1 இல்
உயரம்: 5'10'
தகைமை/தொழில்:BSC, PHD/
பொறியியலாளர் சிங்கப்பூர்
தொ.இ: B/5060

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 28
உயரம்: 5'6'
தகைமை/தொழில்:A/L/semigoverment
தொ.இ: B/5062

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 33செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/
சொந்ததொழில்
தொ.இ: B/5067

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 100செவ் 8 இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:BA/
சொந்ததொழில்
தொ.இ: B/5068

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 48செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/5086

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 24
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/5089

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 45செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5093

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 50
உயரம்: 5'4''
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5094

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 0212215434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு**

செ.மதுவந்தி-153, ஶ்ரீ.டனுசா-153, அ.சரண்ஜன்-154, சு.டிலைக்சனா-156, ஜெ.கீர்த்திகா-156, ல.லக்ஷிகா-157, சி.திவானா-157, யோ.சம்சிகன்-158, சி.விதுகீர்த்தனன்-158, கி.கிறிஸ் ரிகா-159, கு.ஷண்சிகா-162, து.சங்கீர்த்தணி-162, ஏ.வைஸ்ணவி-163, ர.கிஷாளினி- 165, பா.கிருதிகா-166, ந.பிரவீன்-167, ப.அபிலாசினி-167, சு.பிரசாந்-168, ச.கோபி தன்-168, ஜெ.மதுராங்கி-169, ச.சஜீவன்-171, சு.லிதுர்சன்-172 , கு.தனுசிகா-175, சி.மிதுசன்-176, எ.வினுசிகா-177, ந.ஜன்சிகா-178, இ.ரதுஷா-185.

**கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம்**

பா.ஆதித்தன்-164, க.யுதாலினி-159, சி.பிரணவி-158,அ.அம்ரிதா-158, ல.சதுசா லினி-156, ப.விதுநாலன்-152

**கிளி/ சிவநகர் அ.த.க.பாடசாலை**

சி.ஜனுாஸ்-168, ஶ்ரீ.பிரவீனா-153 (2-302)

**கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்**

தீ.சயந்தன்-170

**கிளி/ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை**

த.யசோதினி-153 (2-271)

**மு/விஸ்வநாதர் ஆரம்ப பாடசாலை**

நோ.துஷான்-161

(2)

## கல்வியில் கவனம் செலுத்தினால் இலட்சியத்தை அடைய முடியும்

### கிளிநொச்சி மாவட்டத்தில் 186 புள்ளிகளை பெற்று முதலாமிடம் வந்த லக்சிகா

(கிளிநொச்சி)



எனது பெற்றோரின் எதிர்பார்ப்புப் போல் எனது இலட்சியமும் ஒரு வைத்தியராக வேண்டும் என்று கிளிநொச்சி தர்மபுரம் இல.1 பாடசாலை மாணவி சிவரஞ்சன் லக்சிகா தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 186 புள்ளிகளைப் பெற்று கிளிநொச்சி மாவட்ட நிலையில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். 'தனது விடாமுயற்சி, தன்னம்பிக்கை, எதிர்கால குறிக்கோள்தொடர்பில்விபரிக்கையில்,

எனது அப்பாவின் பெயர் சிவரஞ்சன். எனது அப்பா ஓர் சாதாரண விவசாயி. எனது அம்மா வீட்டுப் பணியில் ஈடுபடுகின்றார்.

எனக்கு ஒரு தம்பி மட்டும் இருக்கின்றார். அப்பா, அம்மா இருவரின் வழிகாட்டலிலும் ஆசிரியர் உடைய அர்ப்பணிப்பும் அவர்கள் தருகின்ற பாடங்களை மீண்டும் படிப்பதும் அவர்கள் கற்பிக்கும் போது அதனை நன்றாக கேட்பதும் விளையாட்டில் சிறிது நேரம் ஈடுபட்டும் கூடியளவான நேரம் எனது கல்வியிலேயே கவனம் செலுத்தியதனால் கிளிநொச்சிமாவட்டத்தில் முதல் நிலை மாணவியாக தெரிவாகியுள்ளேன்.

என்னைப் போன்று எதிர்வரும் காலங்களில் கல்வி கற்கும் மாணவர்களும் கல்வியில் கூடிய கவனம் செலுத்தினால் தங்களுடைய இலட்சியத்தை அடைய முடியும்.

எனது அப்பா சாதாரண ஒரு விவசாயியாக இருந்தும் என்னை கற்பித்து மாவட்டத்தில் முதல் நிலை அடைய எதிர்பார்த்திருந்தார். அதே போன்றே அவரின் எதிர்பார்ப்பை நிறை வேற்றினேன். மேலும் தொடர்ந்து கல்வி கற்று எனது அப்பா எனது அம்மாவினுடைய எதிர்பார்ப்புப் போல் எனது இலட்சியமும் ஒரு வைத்தியராவதே அதனையும் நிறைவேற்றிக்காட்டுவேன் என உறுதியாக கூறினார். (2-271)

## பொறியியலாளராக வருவதே எனது எதிர்கால குறிக்கோளாகும்

### முல்லைத்தீவு மாவட்டத்தில் 186 புள்ளிகளைப்பெற்று முதலிடத்தைத் தனதாக்கிய மாணவி தர்சாளினி



எதிர்காலத்தில் பொறியியலாளராக வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பது எனது இலட்சியம் என தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ள தர்மகுலசிங்கம் தர்சாளினி தெரிவித்துள்ளார்.

மாணவியின் வெற்றி குறித்து கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, பாடசாலை அதிபரின் கல்வி வழிநடத்தல், வகுப்பாசிரியரின் கல்வி நடவடிக்கை, பெற்றோரின் அரவணைப்பு, ஆலோசனை ஆகியவை ஒருங்கே அமையப் பெற்றமையால் இப்பரீட்சையில் சாதனையை நிலை நாட்ட முடிந்துள்ளது.

அதிகாலையிலும் இரவு வேளைகளிலும் கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவேன். ஏனைய நேரங்களில் விளையாட்டில் பொழுதைச் செலவிடுவேன். எனது தந்தை ஒரு விவசாயி. தாய் மருத்துவமாது. எனது பெற்றோருக்கு நான் ஒரேயொரு வாரிசு. இதேபோன்ற க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) ஆகியவற்றில் திறமைச் சித்திகளைப் பெற்று எதிர்காலத்தில் பொறியியலாளராக வருவேன் என்று கூறினார். (2-302)

## விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு இன்று

(மன்னார்)

மாகாண குறித்து ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியம் - 2015 (PSDG ) இன் கீழ் மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு திட்டங்களினூடாக விவசாய உள்ளீடுகள் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உயிலங்குளம் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. அ.சிறிரங்கன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் உவர் நிலங்களில் நெல்லின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் உவர் நிலங்களில் நெற்செய்கையை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின் கீழ் At 362 வர்க்க 46 புசல் விதை நெல், '04 உமிகருக்கும் இயந்திரம், Attonic மற்றும் Wuxal என்பன 18 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கையை மேற்கொள்வதற்காக 18 பயனாளிகள் மாந்தை மற்றும் சிலாவத்துறை விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நெல் உற்பத்தியை அதிகரித்தல் எனும் திட்டத்தின் கீழ் நெல் நாற்று நடும் இயந்திரத்தின் மூலம் வரிசையில் நெல்லினை நடுகை செய்வதற்காக BG 360 வர்க்க 226 புசல் பதிவு செய்யப்பட்ட விதை நெல், 226 கிலோ கிராம் சிங்கல்பேற், 565 கிலோ கிராம் கீசறைற் மற்றும் 565 கிலோ கிராம் பொலித்தீனும், 148 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கையை மேற்கொள்வதற்காக 113 பயனாளிகள் ஆட்காட்டிவெளி, உயிலங்குளம், வஞ்சியன் குளம், நானாட்டான், இரணை இலுப்பைக்குளம் தேக்கம், முருங்கன், விடத்தல்தீவு, சிலாவத்துறை பி.பி.பொற்கேணி, மாந்தை, இலுப்பைக்கடவை, கொண்டச்சி மற்றும் பாலம்பிட்டி ஆகிய 14 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விவசாய இரசாயன பாவனையை குறைக்கும் நோக்குடன் சேதன நெற்செய்கையை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின் கீழ் 36 புசல் பாரம்பரிய விதை நெல் வர்க்கம், மற்றும் 60 லீற்றர் இலைப் போசணை பரல் 12 என்பனவும், 12 ஏக்கர் விஸ்தீரணத்தில் செய்கையை மேற்கொள்வதற்காக 12 பயனாளிகள் ஆட்காட்டி வெளி, நானாட்டான் மற்றும் இரணை இலுப்பைக்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மருத்துவ குணமுடையதும் போசணை மிக்கதுமான உணவினை உட்கொள்வதினை ஊக்குவித்தலுக்காக காளான் செய்கையை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின் கீழ் மர இறாக்கை, பொலிசீலர், பொலிபுரோப்பலீன், தொற்று நீக்கும் பரல் மற்றும் ஊடகத்தயாரிப்பிற்கு தேவையான உள்ளீடுகள் என்பன 04 பயனாளிகள் பி.பி.பொற்கேணி, நானாட்டான், மன்னார் மற்றும் வஞ்சியன்குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வெங்காய விற்பனையில் விலைத்தளும்பலை நீக்கி விவசாயிகள் இலாபத்தினை பெறும் நோக்குடன் வெங்காய சேமிப்புக் கட்டமைப்புக்களை ஊக்குவித்தல் எனும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 50 % மானியத் தொகைக்கான காசோலைகள் 6 பயனாளிகள் ஆட்காட்டிவெளி, நானாட்டான், பேசாலை, முருங்கன், இலுப்பைக்கடவை மற்றும் வஞ்சியன் குளம் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டு முழுவதும் மரக்கறியினை உற்பத்தி செய்யும் நோக்குடன் போகமற்ற காலங்களில் மரக்கறிச்செய்கை எனும் திட்டத்தின் கீழ் விதைப் பொதிகளை வழங்குவதற்காக 2 பயனாளிகள் மாந்தை மற்றும் மன்னார் விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பழங்களின் நுகர்வினை அதிகரிப்பதுடன் பழங்களின் ஏற்றுமதியினை அதிகரிக்கும் நோக்குடன் பழப்பயிர்ச் செய்கை விரிவாக்கம் எனும் திட்டத்தின் கீழ் கொய்யா மற்றும் பசன் கன்றுகள் விநியோகிப்பதற்காக அனைத்து விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் இருந்தும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்விற்கு அரச அதிகாரிகள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆதலால் இந்நிகழ்வில் விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அவர் கேட்டுள்ளார். (2)




## பேருந்தை கடத்திச் சென்று பாகங்களாக்கி இரும்புக்கு விற்றவருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை கடத்திச் சென்று பாகங்களாக்கி இரும்புக்கு விற்றவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஒகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வவுனியா, நெளுக்குளம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று காணாமற் போனதாக அதன் உரிமையாளர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. வவுனியா, பாரதிபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து குறித்த பேருந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு இரும்புக்காக விற்பனை செய்யப்பட்டது.

விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்து பேருந்தை கடத்திச் சென்று இரும்புக்கு விற்பனை செய்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த 7 ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றையதினம் குறித்த சந்தேகநபர் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கமைய 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, லீசிங் பிரச்சினை காரணமாக குறித்த பேருந்து இரும்புக்கு விற்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், தற்போது வாகன முறைப்பாட்டாளர் தலைமறைவாகியுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சனத் அபேயவர்த்தனவின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரி பிரியங்கர, பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதியொதுக்கீடு

## கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களின் பல்வேறுபட்ட அபி விருத்தி வேலைத்திட்டங்களுக்கு நிதியொதுக் கீடு செய்யப்பட்டுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபை செயலாளர் இ. கிருஷ்ணகுமார் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சமுர்த்தி அமைச்சின் நிதியுதவியுடன் திருநகர் தெற்கு மீனாட்சி அம்மன் வீதி புனரமைப்பிற்கு 3 மில்லியன் ரூபாவும் கண்ணன் கோவில் வீதி புனரமைப்பிற்கு 2 மில்லியன் ரூபாவும் அரசாங்க அதிபர் விடுதி வீதி புனரமைப்பிற்கு 2 மில்லியன் ரூபாவும் கண்டாவளை சிவபுரம் 11 ஆம் வீதி புனரமை ப்பிற்கு 5 மில்லியன் ரூபாவும் கண்டாவளை கல்லாறு பிரமந்தனாறு வீதி புனரமைப்பிற்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அத்துடன் குறித்தொதுக்கப்பட்ட மாகாண ஒதுக்கீட்டில் இருந்து ஜெயந்திநகர் திருநகர் இணைப்பு வீதி புனரமைப்பிற்கு 30 மில்லி யன் ரூபாவும் கண்டாவளை கோரக்கன்கட்டு 11 ஆம் வீதி புனரமைப்பிற்கு 4 மில்லியன் ரூபா வும் பாரதிபுரம்- மலையாளபுரம் இணைப்பு வீதி திருத்தத்திற்கு 2 மில்லியன் ரூபாவும் பாரதி வை.எம்.சி.ஏ. வீதி புனரமைப்பிற்கு 3 மில்லி யின் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மலையாளபுரம், ஆனைவிழுந் தான் ஆகிய கிராமங்களுக்கான குடிநீர் திட்டங் களுக்கு தலா 2 மில்லியன் ரூபாவும் வன் னேரிக்குளம் சுற்றுலா மையம் அமைப்பதற்கு 6 மில்லியன் ரூபாவும் பொன்னகர், இராம நாதபுரம் ஆகிய இடங்களில் பொது கிணறு கள் அமைப்பதற்கு தலா 6 இலட்சம் ரூபாவும் கிளிநொச்சி பொதுச் சந்தை பகுதியில் சூரிய மின்கலங்கள் அமைப்பதற்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஜெயந்திநகர் சந்தை அமைப்பத ற்கு 8 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவும் ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தவிர வடக்கு மாகாண முதலமை ச்சர் நிதியத்தில் இருந்து வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கான வீட்டுத் திட்டத்தின் கீழ் கோரக்கன் கட்டில் ஒரு வீடும் பாரதிபுரம் கிராமத்தில் ஒரு வீடும் அமைப் பதற்கு தலா 6 இலட்சம் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள் ளார். (2-277)










உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தில் தென்னைப்பயிர்ச்செய்கைச் சபையினால் கோவிந்தன் கடைச்சந்தி, திருவையாறு கிளிநொச்சியில் கடந்த 05.10.2015 இல் மாதிரி தென்னந் தோட்டத்தில் தென்னங்கன்று நடுகை செய்யப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்னங்கன்று நடுகை செய்யப்படும் இடத்திற்கு அழைத்து வரப்படுவதையும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்கா தென்னங்கன்று நடுவதையும் அருகில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் நிற்பதையும் பெருந்தோட்டத்துறை அமைச்சருடன் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் உரையாடுவதையும் அருகில் அமைச்சின் செயலாளர் பண்டாரநாயக்க, பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# வ.மா. தமிழ் இலக்கிய கலைவிழா இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வடமாகாண தமிழ் இலக்கிய கலைவிழா-2015 எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மறு நாள் சனிக்கிழமையும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பக் கூட்டம் நேற்று முற் பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவ ட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாய கம் தலைமையில் மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்படி விழாவை கிளி நொச்சியில் வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற் பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் பாரம்பரிய கலைகளை வெளிப்படுத்தும் ஊர்திப்பவனிகள், பாரம்பரிய கலை நிகழ்வு கள் என்பன நடத்தப்பட வேண்டும் என தீர்மா னம் எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வடக்கு மாகாண பண்பாட்ட லுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா உட்பட கிளிநொ ச்சி மாவட்ட பிரதேச செயலாளர்கள், கலைஞர் கள், பிரதேச செயலக பண்பாட்டலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(2-277)

# உத்தியோகத்தர் மீது இரு பெண்கள் தாக்குதல்

(கிளிநொச்சி)

கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கடமை யில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் மீது இரு பெண்கள் தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சி பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, வெளி நாட்டு வேலை வாய்ப்பு பணியக அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் நேற்று நண்பகல்வேளை சேவை பெறச் சென்ற இரு பெண்கள் அங்கு ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக திடீரென அபிவிருத்தி உத்தியோகத்தர் மீது தாக் குதலை மேற்கொண்டுள்ளனர். இவ்வேளை யில் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பணியா ளர்கள், பொதுமக்கள் ஆகியோர் சம்பவத்தை தடுத்தனர். இதனையடுத்து கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அவ்விட த்திற்கு விரைந்த பொலிஸார் இரு பெண்களை கைது செய்து விசாரணைக்காக பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றனர். (2-277)

# முகத்தை துணியால் மூடி கட்டியவாறு துணிகரத் திருட்டு

## சாம்பல் தோட்டத்தில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா சாம்பல் தோட்டத்தில் முகத்தை துணியால் மூடிக்கட்டியவாறு வீடு புகுந்த திருடர்கள் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதி யான நகைகளை திருடிச் சென்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வவு னியா, நெளுக்குளம் பகுதியில் நடைபெற்று ள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரி வித்ததாவது,

வவுனியா சாம்பல் தோட்டம் பகுதியில் வீடு ஒன்றினுள் புகுந்த 6 பேர் கொண்ட குழு கத்தி முனையில் வீட்டில் இருந்தவர்களை மிரட்டி அவர்களிடம் இருந்த ஒன்றரை இலட் சம் ரூபா பெறுமதியான நகைகளை திருடிச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த திருட்டில் ஈடுபட்டவர்கள், முக த்தை துணியினால் மூடிக் கட்டியிருந்ததுடன் கறுப்பு ஜக்கெட் அணிந்திருந்ததாக முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர் பான விசாரணைகளை தாம் மேற்கொண்டு வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்த னர். (2-250)

# மஞ்சள் கடவையில் பயணித்த ஆட்டோவை மோதியது பேருந்து

## இருவர் காயம்



(குருமன் காடு)

வவுனியா வில் சாரதி பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஆட்டோவை எதிரே வந்த பேருந்து மோதியதில் இருவர் காய மடைந்துநிலை யில் வவுனியா வைத்தியசாலையில் அனும திக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஏ-9 வீதி, சாந்தசோலை சந்தி யில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

சாரதி பயிற்சியில் ஆட்டோ ஈடுபட்டிருந்த வேளை, வவுனியாவில் இருந்து யாழ். நோக்கி பயணித்த பேருந்து அருகில் இருந்த தரிப்பிடத்தில் பயணிகளை ஏற்றுக் கொண் டிருந்தபோது பின்னால் வேகமாக சுற்றுலாப் பயணிகளுடன் வந்த பேருந்து வேகக்கட்டு ப்பாட்டை இழந்து மஞ்சள் கடவையில் பய ணித்த சாரதிப் பயிற்சி ஆட்டோவை மோதித் தள்ளியது.

இச்சம்பவத்தில் ஆட்டோவில் பயணித்த இருவர் காயமடைந்து சிகிச்சைக்காக வவு னியா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். (2-250)

# பற்றைகள் சூழ்ந்து காணப்படும் காணிகளை துப்புரவு செய்யுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சிவநகர் பாடசாலை வீதியின் மேற்குப் பக்கமாகவுள்ள பல காணிகளில் மக்கள் குடியேறாமலும் காணிகள் பற்றைகள் சூழ்ந்தும் காணப்படுகின்றன.

இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ள காணி களின் பகுதிகளில் அமைந்துள்ள வீதியால் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் பல் வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொள்வ தாக பெற்றோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

இக்காணிகளுக்கு அருகாமையில் குடி யிருக்கும் குடியிருப்பாளர்களின் கால்நடை களை வளர்க்க முடியாது கஷ்டமடைவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பற்றைகள் சூழ்ந்து காணப் படும் இக்காணிகளுக்குள் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதுடன் கசிப்பு வியாபாரமும் நடைபெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சிவன்வீதி நீவில், சிவன் சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும், மாணவர்களும் போக்குவரத்தின் போது இடர்பாடுகளை சந்திப்பதாகத் தெரிவிக்கின்ற னர். எனவே, கிராம அலுவலர், கிராம அபி விருத்தி உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி சங்கத்தினர், குடியிருப்பு அற்ற நிலையில் பற்றைகள் சூழ்ந்துள்ள காணிகள் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரினால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-254)

# மு/ நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் வடிகட்டிக்கு நீர்க்குழாய் பொருத்தப்பட்டது

(குருமன்காடு)

வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தினால் வவு னியா நெளுக்குளம் கலைமகள் வித்தியால யத்தின் குடிநீர் வடிகட்டிக்கு நீர்க்குழாய் பொரு த்தி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத்திட்டத்திற்கான பொருட்கள் அனைத்தும் வவுனியா தொழில்நுட்பக் கல் லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்தி னால் இலவசமாக வழங்கப்பட்டது.

தொழில்நுட்பக்கல்லூரியின் நீர்க்குழாய் பொருத்துதல் நிர்மாணத்தள மேற்பார்வையா ளர், கற்கைநெறி மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்கள் ஆகியோர் களினால் வேலைத்திட்டம் மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன்
# அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவிட்டோம்
## பிரதமர் ரணில் தெரிவிப்பு

தமிழ் தேசியக்கூட்டமைப்பு உள்ளிட்ட ஏனைய அரசியல் கட்சிகளுடன் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்காக ஏற்கனவே நாங்கள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து விட்டோம் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து தசாப்த காலமாக இலங்கையில் மொழி மற்றும் இனப்பிரச்சினை முக்கிய விவகாரங்களாக இருந்ததுடன் கடந்த தசாப்தத்தில் மதப்பிரச்சினையும் உருவெடுத்தது.

புதிய அரசியலமைப்பை உருவாக்குதல், மனித உரிமைகளை உறுதிப்படுத்துதல், நிறுவனக் கட்டமைப்பை பலப்படுத்துதல் என்பன எமது அரசியல் நோக்கங்களின் பிரதானமானவையாகக் காணப்படுகின்றன.

அத்துடன் தேசிய ஒற்றுமை மற்றும் மத, இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களுக்கு தீர்வுகளைத் தேடுவதே எமது முக்கியமான நோக்கமாக அமைந்துள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார். ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டின் பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம விசேட உரை ஒன்றை நிகழ்த்துகையி லேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-10)




# இலங்கை புலனாய்வு பிரிவே ரவிராஜை கொலை செய்தது!
## விசாரணையில் உறுதி

(கொழும்பு)

**நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரை இலங்கையின் புலனாய்வுப் பிரிவினரே படுகொலை செய்துள்ளமை விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.**



குற்றப்புலனாய்வுப் பிரிவின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் இது தொடர்பாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் படுகொலையின் மூளையாகச் செயற்பட்டவரான சரண் என்று அழைக்கப்படும் நபரை, சுவிட்சர்லாந்தில் இருந்து விசாரணைக்காக கொழும்புக்கு அழைத்து வருவதற்கு, அனைத்துலக பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

சந்தேக நபரான சரண், சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கிறார். அவருக்கு அங்கு நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படவில்லை.

இவரை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு கோருவதற்கு நீதிமன்ற உத்தரவு ஒன்று தேவை. அத்துடன் இதற்கு அனைத்துலக பொலிஸார் உதவியும் தேவைப்படுகிறது.

அதேவேளை, நடராஜா ரவிராஜ், மற்றும் பிரகீத் எக்னெலிகொட படுகொலைகள், புலனாய்வுப் பிரிவினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட, இராணுவத்தின் கேணல் தர அதிகாரி ஒருவர், ரவிராஜ் படுகொலையிலும் தொடர்புபட்டுள்ளார் என்பது விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது எனறும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், 2006ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 10 ஆம் நாள், கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தப்படுகொலை நடப்பதற்கு முதல நாளான, 2006 நவம்பர் 9 ஆம் நாள், வாகரையில், 45 பொதுமக்கள் குண்டுவீச்சில் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரவிராஜ் தலைமையில் கொழும்பிலுள்ள ஐ.நா.பணியகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவரது படுகொலை தொடர்பாக, இலங்கை கடற்படையைச் சேர்ந்த மூன்று பேரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஜனக பண்டார எம்.பி.மீது மேலும் இரண்டு கொலைக் குற்றச்சாட்டு

நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டாரவுக்கு எதிராக மேலும் இரண்டு கொலை குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வு பிரிவினரால், நபர் ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டு தொடர்பில் கைது செய்யப்பட்டு இதுவரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தம்புளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தென்னக்கோனவுக்கு எதிராக மேலும் இரண்டு நபர் கொலை தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவிடம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளது.

கடந்த 2000 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பொதுத் தேர்தல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் மாத்தளை, பல்லேபொல பிரதேசத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ரஞ்சித் அலுவிஹாரவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் சமிந்த டயஸ் என்பவர் அவ்விடத்திலே உயிரிழந்துள்ளார்.

இக் கொலைகள் இரண்டு தொடர்பில் அக் காலப்பகுதியில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு தீர்த்துக்கொள்ளப்பட்டாலும்,

உரிய முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் மீண்டும் விசாரணைகளை ஆரம்பித்து, உண்மை சம்பவத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு பிரிவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி லக்ஷ்மன் துல்வல என்பவர் ஆறு மாதங்கள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் உயிரிழந்துள்ளார். இரகசிய பொலிஸார் இதுவரையில் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில பல தகவல்கள் சேகரித்துள்ளனர்.

விசாரணைகளின் இறுதியில் ஜனக பண்டார தென்னக்கோன் உட்பட குழுவினரிடம் வாக்கு மூலம் ஒன்று பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(இ-10)

## நல்லிணக்கப் பணிகள் குறித்து இலங்கை மகிழ்ச்சி

இலங்கையின் நல்லிணக்கத்துக்காக ஆஸ்திரியா காட்டி வரும் அக்கறை குறித்து மகிழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது

தமது பணிக்காலம் முடிவடைந்து நாடு திரும்பும் தூதர் ஏ எல் ஏ அஸீஸ், ஆஸ்திரியாவின் ஜனாதிபதி ஹென்ஸ் பிஸ்சரை சந்தித்த போது இந்த மகிழ்ச்சி வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நல்லிணக்கம், அபிவிருத்தி மற்றும் தேசிய ஒற்றுமை என்பவை தொடர்பில் ஆஸ்திரியா தொடர்ந்தும் ஒத்துழைப்பை நல்கிவருகிறது.

இந்தநிலையில் இலங்கை அரசாங்கம் நல்லிணகத்தை ஏற்படுத்துவதற்காக உண்மையை கண்டறியும் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளதாகவும் தூதுவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் இலங்கையின் பாதிக்கப்பட்டோரின் மனக்காயங்கள் ஆறுவதற்கு தமது நாடு உதவும் என்று தெரிவித்தார்.

இதேவேளை ஆஸ்திரியாவுக்கும் கொழும்புக்கும் இடையில் எதிர்வரும் 27ஆம் திகதியில் இருந்து நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. (இ-10)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

யாழ்.வல்வெட்டித்துறை கம்பர் மலை பாரதி சனசமூக நிலைய ஏற்பாட்டில் கம்பர் மலை வல்வெட்டித்துறை வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை கம்பர் மலை வாழ் பொதுமக்கள் அனைவரும் கலந்து நிர்வாக சபையினை அமைதியான முறையில் தெரிவு செய்யுமாறு பாரதி சனசமூக நிலைய நிர்வாகம் கேட்டுள்ளது. (இ-5)

## ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள இருவரையும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு முதன்மை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அனுமதி வழங்கியது.

பிரதீப் மாஸ்டர் என்ற எட்வின் சில்வா கிருஸ்ணா கந்தராஜ், காஜன் மாமா என்று அழைக்கப்படும் கே.ரெங்கசாமி ஆகியோரை 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதவான் சி.ஐ.டிக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை பரராஜசிங்கத்தின் கொலையுடன் தொடர்புடைய மேலும் இருவர் சுவிட்சர்லாந்தில் இருப்பதால் அவர்களை கைது செய்ய இன்டர்போலின் உதவியை நாடவுள்ளதாக சி.ஐ.டி. நீதிமன்றத்தில் அறிவித்தது.

2005 ஆம் ஆண்டு டிசெம்பர் 25ஆம் திகதியன்று ஜோசப் பரராஜசிங்கம் செனட். மரியாள் தேவாலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். (இ-10)

# இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கான தலைமையைக் கனடா ஏற்க வேண்டும்

## தமிழ் கன்சவேட்டிவ் அமைப்புக் கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கான தலைமையை கனடா ஏற்க வேண்டும் என்ற கோரிக்கையை அந்நாட்டின் தமிழ் கன்சவேட்டிவ் அமைப்பு விடுத்துள்ளது.**

கன்சவேட்டிவ் கட்சியானது 2006ம் ஆண்டில் போரினால் பாதிப்புற்றவர்களிற்கான நிவாரணமாக 450 மில்லியன் டொலர்களை வழங்குவதாகக் (490 கோடி ரூபாய்கள்) குறிப்பிட்டிருந்தது.

எனினும் அப்போது போர் இடம்பெற்ற படியால் அது இயலாமல் போனது.

எனவே கனேடியப்பிரதமர் ஹாப்பரும் அவர் சார்ந்த அரசும் இந்தப் போர்க்குற்ற விசாரணை மற்றும் மீளிணக்கத்திற்கான முயற்சி, இடம்பெயர்ந்தோரை மீளக் குடியமர்த்தும் முயற்சி என்பனவற்றில் காத்திரமாகப் பங்களிக்க வேண்டுமென கனேடியத் தமிழ் கன்சவேட்டிவ் அமைப்பு கேட்டுக் கொண்டதுடன்,

அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகளவையின் மனிதவுரிமைக் கூட்டத தொடரில் "கலப்பு விசாரணை" தான் வேண்டுமென கனடா எடுத்துக் கொண்ட முடிவோடு பெல்ஜியம், அயர்லாந்து, நெதர்லாந்து, நோர்வே மற்றும் பிரான்ஸ் என்பன இணைந்து செயற்பட்டது நல்லதொரு முன்னுதாரணம் என்றும், அதனைத் தொடர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதோடு,

கடந்த 2013ல் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்ததன் மூலம் கனடா காத்திரமாகப் பதிவு செய்த புறக்கணிப்பை போன்ற நடவடிக்கைகளைத் தொடர வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டதோடு ஐக்கிய நாடுகளவையின் வேண்டுகோள்கள் பரிசீலிக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டது.

குறிப்பாக புலம்பெயர்ந்த தேசங்களில் கோவில்கள் தனிப்பட்ட வியாபாரங்களை விடுதலைப் புலிகள் வைத்திருந்தார்கள் எனவும் அவர்கள் இல்லாத காரணத்தால் அச் சொத்துக்களை ஈழத்தில் இன்னல்படும் அகதிகளின் நலன்களிற்காகச் செலவிடும் பொறிமுறையை அமைக்க,

மேற்குலக நாடுகள் உதவ வேண்டும் என்ற ஐக்கிய நாடுகளவையின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டுமெனவும் கனேடியத் தமிழ் கன்சவேட்டிவ் அமைப்பு தனது அறிக்கையில் கேட்டுள்ளது. (இ-10)

# தராதரம் பார்க்காமல் தண்டனை வழங்கப்படும்

## தலதா அத்துகோரள எச்சரிக்கை

வெளிநாடுகளுக்கு சுற்றுலா விசா மூலமாக ஆட்களை அனுப்புகின்றவர்கள் எவராக இருந்தாலும், அவர்களுக்கு பாரபட்சமின்றி தண்டனைகள் வழங்கப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

நேற்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் சுற்றுலா செல்வதாக விசாவினைப் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளிற்குச் சென்று அங்கு சட்ட விரோதமானமுறையில்வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டு தங்கியிருப்பதானது நாட்டின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார். (இ-10)

# அறிவித்தல்

**தேர்தல்கள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 60ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு தாபிக்கப்படவிருக்கும் சர்வஜன வாக்குரிமை மற்றும் ஜனநாயகம் தொடர்பான அரும்பொருட்காட்சிச்சாலை**

தேர்தல்கள் திணைக்களத்தின் 60 வருடப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெறவிருக்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் 1911 டிசெம்பர் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலிலிருந்து 2015.08.17 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் வரையான தேர்தல்களுடன் தொடர்புடைய பொருட்கள், காகிதாவணங்கள், புகைப்படங்கள், சட்டமுறையான அறிவித்தல்கள், பிரசார போஸ்ரர்கள் ஆகியவற்றை ஒன்று சேர்த்து அரும்பொருட்காட்சிச்சாலையொன்றை தாபிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல்களுடன் தொடர்புடைய தேர்தல் நடவடிக்கை உபகரணங்கள் அல்லது அவற்றின் மாதிரிகள், புகைப்படங்கள்,காகிதாவணங்கள் ஆகியவற்றின் மூலப்பிரதிகள் அல்லது இணைப்பிரதிகள் அல்லது நிழற்பிரதிகள் ஆகியன தன்னிடமிருக்கும் நிறுவனங்களிடமும் பிரஜைகளிடமும் அவற்றை தேர்தல்கள் திணைக்களத்திற்கு வழங்கியுதவுமாறு தயவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மேலும் தேர்தல்களின்போது பெற்றுக்கொண்ட அனுபவங்கள் அல்லது தேர்தல்கள் திணைக்களத்தில் கடமையாற்றிய அலுவலர்களின் விசேட அனுபவங்களை தயவுகூர்ந்து எமக்கு அறிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் 1985ஆம் ஆண்டிற்கு முன்னர் தேர்தல்கள் திணைக்களத்திலும் 1955ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த பாராளுமன்றத் தேர்தல்கள் திணைக்களத்தில்/ உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திணைக்களத்தில் கடமையாற்றியவர்கள் தொடர்பான தகவல்களையும் அறிவிக்குமாறு அவ்வாறு கடமையில் ஈடுபட்டிருந்த அனைவரிடமும் அவ்வாறான தகவல்களை அறிந்திருக்கும் வேறு ஆட்களிடமும் மேலும் தயவன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

| | |
|---|---|
| முகவரி:- | தேர்தல்கள் ஆணையாளர்,<br>தேர்தல்கள் செயலகம்,<br>இராஜகிரிய. |
| மின்னஞ்சல்முகவரி:- | comelesl@sltnet.lk |
| தொலைபேசி இலக்கம்:- | 011-2868441 42,43,44 |
| தொலைநகல் இலக்கம்:- | 011-2868445<br>011-2868368 |

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்,
தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய.

(C-2410)

## தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யாழ்.தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

கு.கனுஜா-164, சி.தர்மிகன் -163.

**யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

சி.ஜதுசன்-167, த.தட்சாயினி-162, ந.சிபிதா-154.

**யாழ்.மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

நி.கஜனன்-186, அ.சாம்பவி-175, சா.குணப்பிரதா-171, ர.பூவிழி-170, கெள.மகிழினி-166, பா.குயிலன்- 165, ச.கஜித்-164, சி.சிவானுஜா- 161, இ.சனோயினி-159, தே.பிரவீன்-157, சி.ஸ்ரெப்பிக்கா-156, வ.அபி-156, ம.டர்னிகா-156, நீ.ரோசானி-156, த.அபிராம்-155, த.லபியா-155, நா.கோகுலநாத்-154, த.ரிசானி-154, சி.ஜானுஜன்-154, சி.கிருபாலினி-154, சு.வைஷ்ணவி-153, ச.தர்ஜிதன்-153.

**யாழ்.ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை**

சு.தனுரா-172, தி.விதுஜா-169, ந.அலன்-164, ப.அகராயுதன்-164, இ.பிரசாந்தினி-162, ஜெ.சுவே தினி-156, ஜெ.தர்மிகன்-155.

**யாழ்.கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்**

ம.கிசாலினி-176, ஜெ.திவாகினி- 175, சி.சாம்பவி-174, ரெ.நிசானி-174, ஈ.நிசானா-168, ச.கர்சிகா-165, கோ.விண் ணகன்-158, ந.துஷாரன்-158, ச.ரேனுஜன்-158, தி.கிசா னா- 158, சு.பகிரதி-156

**யாழ்.இமையாணன் அ.த.க. வித்தியாலயம்**

இ.உதயபானு-172, வி.யசிந்தன்- 162, ற.கஜானி-162, இ.கவிநயா-159, வி.விசானுகா-155

**யாழ்.ஞானசாரியார் கல்லூரி**

ர.ஆரணி-177, தே. அபிர்ணா-159.

**யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

ரா. புவியழகி -176, ஈ.ருத்திகா-166, ரா.ரதீஸ்-164, மு.சுவஸ்திகா -159, ற.யதுர்ஷா -158, ப.யசோதரசர்மா-157, கி.தர்சிகன்-157, உ.தினேஷ்-154, ச.லேகன்-153, ற.ஷர்மினி-153.


அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com

# சீனாவில் ஏற்பட்ட மாபெரும் போக்குவரத்து நெரிசல்

(பீஜிங்)

சீனாவின் சுங்கச்சாவடி அருகே ஏற்பட்ட மாபெரும் போக்குவரத்து நெரிசலால் பல ஆயிரத்திற்கு மேற்பட்ட வாகன ஓட்டிகள் பாதிக்கப்பட்டனர்.

சீனாவில் தொடர் விடுமுறை காரணமாக பலரும் தங்களது குடும்பத்தினருடன் விடுமுறையை கழிக்க சென்றனர்.

இந்நிலையில் விடுமுறை முடிந்ததால் நகருக்கு திரும்புவதற்காக கடந்த 6ஆம் திகதி ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் தலைநகர் பீஜிங் அருகில் உள்ள ஜி 4 பீஜிங் ஹொங்காங் மாக நெடுஞ்சாலையில் குவிந்தனர்.

சுமார் 50 பாதைகளை உடைய மிக பெரிய சாலையான இதில் சமீபத்தில் சுங்கச்சாவடி ஒன்று அமைக்கப்பட்டது. அது சாலையை 50 பாதைகளில் இருந்து 20 ஆக குறைத்தது.

இந்நிலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் ஒரே நேரத்தில் குவிந்ததால் மாபெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதன் காரணமாக சாலையில் ஆயிரமாயிரம் வாகனங்கள் அணி வகுத்து நின்றன. இதன் காரணமாக பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகினர். (3-7)





# அகதிகளின் கடல் பயணங்களை கண்காணிக்க ஐ.ஒன்றியம் முடிவு

## சோபியா நடவடிக்கையில் 6 போர்க்கப்பல்கள்

**மத்திய தரைக்கடலில் அகதிகளை ஏற்றிவரும் படகுகளில் தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் ஆறு போர்க்கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

ஆட்கடத்தலை சமாளிக்க ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டிருக்கும் ஆபரேஷன் சோபியாவின் ஒரு பகுதியாக ஆறு போர்க்கப்பல்கள் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

ஆட்கடத்தல் பிரச்சினையை சமாளிக்கவும் கடலில் மூழ்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை குறைக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டுவரும் "சோபியா நடவடிக்கை"யின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டில் இதுவரை ஒரு லட்சத்து முப்பதாயிரத்துக்கும் அதிகமான குடியேறிகள் சிரியாவிலிருந்து வெளியேறி, லிபியா வழியாக கடலைக் கடந்து இத்தாலியை வந்தடைந்துள்ளனர்.

எந்தவித அச்சுறுத்தலையும் சமாளிக்க தாம் தயாராக இருப்பதாக இந்த சிறப்பு நடவடிக்கையின் துணைத் தளபதி ரியர் அட்மிரல் ஹெர்வ் ப்லஷான் பிபிசியிடம் தெரிவித்துள்ளார்.

ஆட்கடத்தல்காரர்களை லிபிய கடல்பரப்பில் துரத்திப் பிடிக்க ஐரோப்பிய ஒன்றியம் விரும்புகிறது. ஆனால் லிபியாவிடமிருந்தும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடமிருந்தும் அதற்கான அனுமதி இன்னமும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு கிடைக்கவில்லை. (3-7)






# அமெரிக்காவில் கனமழை 15 பேர் உயிரிழப்பு





(வோஷிங்டன்)


அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத அளவு கனமழை கொட்டித் தீர்த்து வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை பெய்ய தொடங்கிய மழையால் தெற்கு கரோலினா மாகாணம் வரலாறு காணாத பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

கனமழையினால் அங்கு உள்ள அணைகளில் வெள்ளப் பெருக்கேற்பட்டு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன. வீடுகளை இழந்து தவிக்கும் 800 இற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டு ள்ளனர்.கனமழை மற்றும் வெள்ளத்தில் சிக்கி இதுவரை தெற்கு கரோலினாவில் 13 பேரும். வடக்கு கரோலினாவில் 2 பேரும் பலியாகி இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (3-7)

# மரபணு கலங்கள் ஆராய்ச்சிக்காக மூவருக்கு வேதியியல் நோபல்பரிசு







(ஸ்டாக்ஹோம்)

வேதியியலுக்கான நோபல் பரிசு சுவீடன் விஞ்ஞானி டோமஸ் லிண்டால், அமெரிக்க விஞ்ஞானி பால் மாட்ரிச், துருக்கி அமெரிக்க விஞ்ஞானி அஜிஸ் சாங்கர் ஆகியோருக்கு கூட்டாக வழங்கப்படும் என நோபல் பரிசு குழு அறிவித்தது.

உயிரோடு இருக்கிற ஒரு கலம் எப்படி செயல்படுகிறது என்பதற்கான அடிப்படை அறிவை இவர்களது ஆராய்ச்சி வழங்கி இருப்பதாக நோபல் பரிசுக்குழு கூறி இருக்கிறது.

இந்த விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு, பல்வேறு விடயங்களுடன் புற்றுநோய்க்கு புதிய சிகிச்சைகள் அளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என தகவல்கள் கூறுகின்றன.

பழுதான மரபணுக்களை கலங்கள் எப்படி சரி செய்கின்றன என்பது தொடர்பாகவும் இந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கண்டறிந்திருக்கிறார்கள்என்பது குறிப்பிடத்தக்கது.


அமைதிக்கான நோபல் பரிசு நாளை வெளிக்கிழமையும், பொருளாதார நோபல் பரிசு 12ஆம் திகதி திங்கட்கிழமையும் அறிவிக்கப்படவுள்ளன. (3-7)

# மருத்துவமனை மீது தாக்குதல் மன்னிப்பு கோரினார் ஒபாமா

(நியூயோர்க்)

ஆப்கானிஸ்தானில் வடக்கே குண்டூஸ் நகரில் உள்ள மருத்துவமனை மீது நடத்தப்பட்ட விமான தாக்குதலில் 22 பேர் பலியானார்கள்.இந்த தாக்குதலை அமெரிக்கா தலைமையிலானகூட்டுப்படையை சேர்ந்த விமானத்தால் நடத்தப்பட்டது. நேற்று குண்டூஸ் நகரில் உள்ள மருத்துவமனை மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் தவறுதலாக நடந்துவிட்ட சம்பவம் என்று ஆப்கானுக்கான அமெரிக்க ஜெனரல் ஜோன் எப் காம்ப்பெல் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தாக்குதல் நடத்தப்பட்ட மருத்துவமனையில் பணியாற்றி 'எல்லைகளற்ற மருத்துவர் குழு' என்ற தொண்டு நிறுவனத்தின் இயக்குனரிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்காக மன்னிப்பு கோரியுள்ளார்.



மேலும் தாக்குதலில் இறந்து போனவர்களுக்கு தன்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ள அவர் வருங்காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்துவதாகவும் ஒபாமா உறுதி அளித்துள்ளார். (3-7)

# ஐ.நா பொதுச்சபையின் முன்னாள் தலைவர் அமெரிக்காவில் கைது !


(நியூயோர்க்)

## பான் கீ மூன் அதிர்ச்சி

### அமெரிக்காவில் ஊழல் வழக்கில் ஐ.நா. சபையின் முன்னாள் தலைவர் ஜான் ஆஷே கைது செய்யப்படடுள்ளார்.

ஆன்டிகுவா-பர்புடாநாட்டுக்கான ஐ.நா. தூதராக இருந்தவர் ஜான ஆஷே (வயது 61). இவர் 2013-14 காலகட்டத்தில். ஐ.நா. பொதுச்சபையின் தலைவர் பதவி வகித்தார். இவர் மீது மிகப் பெரிய ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இவர். சீனாவை சேர்ந்த தொழில் அதிபர்கள், ரியல் எஸ்டேட் அதிபர் லேப் செங் உள்ளிட்டவர்களிடம் இருந்து இலஞ்சமாக 1.3 மில் லியன் டொலர் (சுமார் ரூ.8 கோடியே 45 லட்சம்) பெற்றுள்ளார் என்பதே அந்த குற்றச்சாட்டு.

சீனாவில் உள்ள மக்காவ் பகுதியில் ஐ.நா. சபையின் நிதி உதவியுடன் கூடிய பல கோடி மதிப்பிலான மாநாட்டு மையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று கூறுகிற கோப்பினை ஐ.நா. பொதுச்செயலாளர் பான்



கீ மூனிடம் அளிப்பது உள்ளிட்ட பல்வேறு செயல்களை தொழில் அதிபர்களுக்கு செய்து தருவதற்காக இந்த இலஞ்சப்பணம் வழங்கப் பட்டுள்ளது.

அதுவும் அவர் ஐ.நா. பொதுச்சபை தலைவர் பதவியை ஏற்பதற்கு முன்பாக ஐ.நா.வுக்கான ஆன்டிகுவா -பர்புடா நாட்டின் தூதராக பணியாற்றிய காலகட்டத்தில் இருந்தே இலஞ்சம் வாங்கி வந்துள்ளார்.

இது தொடர்பாக முதல்கட்ட விசாரணை நடத்தப்பட்டு. அமெரிக்காவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து ஜான் ஆஷே நேற்று முன்தினம் கைது செய்யப் பட்டார். இது உலக அரங்கில் அதிர வலைகளை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.நா. சபை பொதுச்செயலாளர் பான் கீ மூன் இது குறித்து கடும் அதிர்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்த ஊழல் வழக்கில் ஜான் ஆஷேயுடன் ஐ.நா.வுக்கான டொமினிக்கன் குடியரசின் துணைத்தூதர் பிரான்சிஸ் லாரன்ஸோ, லேப் செங், ஜெப் யின், ஷிவெய் யான், ஹெய்திஹாங் பியாவோ ஆகியோரும் சிக்கி உள்ளனர். அனைவரும் கைது செய்யப்பட்டுவிட்டனர். (3-7)

# கண்ணாடிப் பாலத்தில் கீறல் பார்வையாளர்களுக்கு தடை



சீனாவின் ஹெனான் மாகாணத்தில் ஜாங்ஜியாஜீ பகுதியில் யூண்டா மலைபகுதியில் இரண்டு மலைகளுக்கிடையே உலகிலேயே மிக நீளமான. உயரமான கண்ணாடி நடை பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அதிகமான பார்வையாளர்களால் கண்ணாடி பாதை அடுக்குகளில் ஒன்றில் கீறல் ஏற்பட்டு உள்ளது. இதனால் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.தற்போது கண்ணாடி பாலம் மூடப்பட்டுள்ளது.

## ஜெயா சொத்து குவிப்பு மேன்முறையீட்டு வழக்கை விசாரிக்க மேலும் ஒரு வழக்கறிஞர் நியமனம்


முதலமைச்சர் ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராக கர்நாடக அரசு சார்பில் கூடுதல் வழக்கறிஞராக துஷ்யந்த் தவே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சொத்து குவிப்பு வழக்கில் தமிழக முதல்வர் ஜெயலலிதா. அவரது தோழி சசிகலா. சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு சிறைத்தண்டனை விதித்து பெங்களூர் தனி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதை எதிர்த்து ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேர் சார்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. வழக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில் அரசு சிறப்பு வழக்கறிஞராக பவானிசிங் நியமனம்செல்லாது என்று அறிவிக்கப் பட்டது தெரிந்ததே. (3-7)



இந்திய விமானப்படையின் 83வது ஆண்டு தினத்தை முன்னிட்டு பிரதமர் மோடி விமானப்படைக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். அதில், மிகப்பெரும்துணிவுடன் விமானப்படையினர் நாட்டுக்கு சேவை ஆற்றிவருவதாகவும், வான் எல்லை மற்றும் பேரழிவு போன்ற தருணங்களில் முதன்மையாக இருந்து நாட்டுக்கு சேவை புரிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# அமிதாப்பச்சனை 4 கி.மீ விரட்டிச் சென்ற காட்டுப்புலி



பொலிவுட் நடிகர் அமிதாப் பச்சனை புலியொன்று 4 கிலோமீற்றர் தூரம் விரட்டி வந்துள்ளது. அமிதாப் பச்சனே இந்தப் படத்தை பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

மும்பை நகரின் மேற்கு பகுதியில் உள்ள போரிவிலியில் சஞ்சய் காந்தி வனச் சரணாலயம் உள்ளது. இங்கு நடந்த புலிகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க, பொலிவுட் நட்சத்திரம் அமிதாப்பச்சன் சென்றுள்ளார்.

அந்த சமயத்தில் ஒரு புலி வீதியில் நின்றுள்ளது. அமிதாபச்சன் சென்ற வாகனத்தை பார்த்த அந்த புலி, சுமார் 4 கிலோ மீற்றர் தொலைவுக்கு வாகனத்தை விரட்டிய படி பின்னால் சென்றுள்ளது. இதனை புகைப்படமாக எடுத்து அமிதாப்பச்சன், அதனை தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

"மும்பை நகருக்குள் இது போன்ற ஒரு வனத்தை பார்க்க முடிகிறது. ஒரு புலி எனக்கு துணை கொடுக்கிறது" என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். நடிகர் அமிதாபச்சனை, புலிகளை காப்பதற்கான தூதுவராக மகாராஷ்ட்ர அரசு நியமித்துள்ளது. (3-7)

# 1450 கி.மீ தூரத்தில் கடலிலிருந்து ஐ.எஸ். மீது குறி வைத்தது ரஷ்யா

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக ரஷ்யா கடல்மார்க்கமாக நடத்திய தாக்குதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே தொடர் தாக்குதல்கள் காரணமாக ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு ஆதரவு பெருகியுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலை ரஷ்யா கடந்த வாரம் தொடங்கியது. பல்வேறு நாடுகளும் ரஷ்யா ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு பதிலாக அப்பாவி பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டின. எனினும் ரஷ்யா தனது தாக்குதலை தொடர்ந்து நடத்தி வருகின்றது.

இந்நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலை மீது கடல் மார்க்கமாக நடத்திய தாக்குதல் குறித்து ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சொய்கு தொலைக்காட்சியில் தெரிவித்துள்ளார்.

மேலும் தாக்குதல் தொடர்பான வீடியோவையும் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

ஐ.எஸ் தீவிரவாதிகளின் நிலைகள் மீது 1450கி.மீற்றர்கள் தொலைவில் உள்ள காஸ்பியன் கடலில் இருந்து போர் கப்பல்கள் மூலமாக இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.எஸ். தீவிரவாதிகளின் 11 நிலைகளை குறிவைத்து நான்கு போர் கப்பல்களில் இருந்து மொத்தம் 26முறை இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த தாக்குதலில் பொது மக்கள் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்யாவின் வரவு சிரிய அரசுக்கு புது தெம்பை அளித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. மேலும் இந்த தாக்குதல்களின் மூலம் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு திடீரென ஆதரவு பெருகியுள்ளது. முன்னதாக தாக்குதல் நடைபெற்ற அதேவேளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தனது 63 வது பிறந்த நாளை முன்னிட்டு ஹொக்கி போட்டியில் கலந்து கொண்டு விளையாடிக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# ரஷ்யாவுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது - அமெரிக்கா திட்டவட்டம்

சிரிய தீவிரவாதிகள் மீது வான்வழி தாக்குதல் நடத்திவரும் ரஷ்யாவுக்கு ஒத்துழைப்பு கொடுக்க முடியாது என அமெரிக்கா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

சிரியாவில் தாக்குதல் நடத்தி வரும் நேட்டோ நாடுகளின் போர் விமானங்களுடன் மோதல் ஏற்படாமல தவிர்ப்பது பற்றி பேச்சு நடத்த தயார் என்ற அமெரிக்காவின் கோரிக்கையை பரிசீலித்து வருவதாக ரஷ்யா பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் அமெரிக்கா இதனை மறுத்துள்ளது.

இது பற்றி அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் ஆஷ்டன் கார்ட்டர் கூறுகையில் " சிரியாவில் ரஷ்யாவுடன் இணைந்து செயல்படுவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ரஷ்யா மிகவும் தவறான வகையில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தாமல் தவறான இடங்கள் மீது தாக்குதல் நடத்திவருகிறது. ரஷ்யாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படாதவரையில் அவர்களுடன் இணைந்து செயற்பட வாய்ப்பு இல்லை" எனத் தெரிவித்தார்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் அரசாங்கத்துக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ். குழு மீது ரஷ்யா வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. ஜனாதிபதி அசாத் எதிர்த்து போராடும் கிளர்ச்சி படையினருக்கு நேட்டோ நாடுகள் ஆதரவளித்து வருவது குறிப்பிடத்தக்கது. (3-7)

# தமிழ் சினிமா வரலாறு

## 23 "ராஜமுக்தி" அதிர்ச்சி தோல்வி

...பாகவதர் குரல் எப்பொழுதும் போல் இனிமையாக ஒலித்தது மட்டுமல்ல, முன்பைவிட மெருகேறி இருந்தது.

பாகவதர் தனியாகப் பாடிய உனையல்லால் ஒரு துரும்பும் அசையுமோ, மானிட ஜென்மம் ஆகிய பாடல்களும், எம்.எல். வசந்தகுமாரியுடன் இணைந்து பாடிய இங்கும் அங்கும் எங்கும் இன்பமே என்ற பாடலும் சூப்பர்ஹிட்.

**தோல்வி**

பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே 09.10.1948 அன்று ரிலீஸ் ஆன ராஜமுக்தி, அதிர்ச்சி தோல்வியைத் தழுவியது.

இதற்கு முன் வெளிவந்த பாகவதர் படங்களில் பாடல்களில் பாடல்கள் மட்டுமின்றி கதை, வசனம், நடிப்பு, டைரக்ஷன், எடிட்டிங், ஒலிப்பதிவு முதலான சகல அம்சங்களும் சிறப்பாக அமைந்திருந்தன.

ராஜமுக்தி எல்லா அம்சங்களிலும் பின்தங்கியிருந்தது. முக்கியமாக கதை நன்றாக இல்லை.

போயும் போயும் இந்தக் கதை தானா கிடைத்தது என்று ரசிகர்கள் எண்ணினார்கள்.

என்.எஸ்.கிருஷ்ணன் நகைச்சுவை இருந்தாலாவது படம் ஓரளவு தப்பித்திருக்கும். பாகவதரின் பாடல்கள் தவிர வேறு எதுவும் சிறப்பாக அமையாததால் ரசிகர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்தனர்.

எனினும், சிறை மீண்ட பிறகு பாகவதர் நடித்த படத்தை ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்ற ஆவல் மக்களிடம் இருந்ததால் படம் 10,15 வாரங்கள் ஓடின.

110 வாரங்கள் ஓடிய ஹரிதாஸ் எங்கே? 10 வாரங்கள் ஓடிய ராஜமுக்தி எங்கே?

படம் வெளி வருவதற்கு முன்பே விநியோகஸ்தர்கள் வாங்கிக்கொண்டு விட்டதால் பாகவதர் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படவில்லை.


**அமரகவி**

திரைப்படத்துறையில் முதன்முதலா



மீசையுடன் பாகவதர் தோன்றிய ஒரே படம் சியாமளா

கத் தோல்வியை சந்தித்த பாகவதர் சோர்ந்து போனார். என்றாலும் துவண்டு போய்விடவில்லை.



பிரபல ஆர்ட் டைரக்டரும் நியூடோன் ஸ்டூடியோவின் முக்கிய பங்குதாரருமான எப்.நாகூரின் டைரக்ஷனிலும் தயாரிப்பிலும் உருவான அமரகவியில் நடித்தார்.

இதில் பாகவதருடன் டி.ஆர். ராஜகுமாரியும், பி.எஸ்.சரோஜாவும் இணைந்து நடித்தனர். ராஜமுக்தியில் இடம்பெறாத என்.எஸ். கிருஷ்ணனும், டி.ஏ.மதுரமும் இதில் நடித்தனர். கே.ஏ.தங்கவேலு இந்தப் படத்தில் அறிமுகமானார்.

இசை அமைப்பை ஜி.ராதநாதன் கவனித்தார். அமரகவி மூலம்தான் கதை, வசனம் ஆசிரியராகவும், பாடல் ஆசிரியராகவும் கவிஞர் சுரதா அறிமுகமானார். பாகவதரின் பாடல்கள் நன்றாக இருந்தன. படமும் நன்றாக இருந்தது. எனினும் சுமாரான வெற்றியைத்தான் பெற்றது.

பாகவதரின் அடுத்த படம் சியாமளா. எஸ்.வரலட்சுமி கதாநாயகியாக நடித்த தெலுங்குப்படத்தில் கதாநாயகன் சம்பந்தப்பட்ட காட்சிகளை நீக்கிவிட்டு பாகவதரை நடிக்க வைத்தனர்.

இந்தப்படத்தில் பாகவதரின் மிகச் சிறந்த பாடலான ராஜன் மகராஜன் பாடல் இடம்பெற்றது. மற்ற பாடல்களும் இனிமையாக ஒலித்தன.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 291**

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...மிகச் சில தியான அடிப்படையிலான மதங்களான புத்தமதம் மற்றும் சூஃபி போன்ற மதங்கள் மட்டுமே நன்றியுணர்வை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

இந்த மதங்களைப் பின்பற்றுபவர்கள் மிகச் சிலராகவே இருப்பினும் அவர்களது தரம் மிகவும் உயர்வாக இருக்கிறது.

பாருங்கள், பிரார்த்தனையில் ஒன்றும் தவறு கிடையாது. ஆனால் பிரார்த்தனையில் கேட்பதிலேயே சிக்கிக் கொண்டு விடுவதில்தான் பிரச்சினை ஆரம்பமாகிறது.

பிரார்த்தனை என்பது தியானத்திற்குள் - நன்றியுணர்வே பிரார்த்தனையாகவும் உங்கள் இருப்புத் தன்மையே ஆனந்தமாகவும் ஆகிவிடும் தியானத்திற்குள்- நுழையும் குதிபலகையாக உபயோகப்படுத்த வேண்டும்!

உங்கள் நன்றியுணர்வைக் காட்டுவது ஒரு சமூகப் பழக்கமாக இருக்கலாம்; அது எவ்வாறு தியானமாக முடியும்? என்று நீங்கள் எண்ணலாம்.

ஆனால் உண்மையிலேயே நீங்கள் நன்றியுணர்வுடன் இருக்க ஆரம்பிக்கும்பொழுது நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை புரிந்துகொள்வீர்கள்.

நீங்கள் நன்றியுணர்வுடன் இருக்க ஆரம்பிக்கும் பொழுது உங்கள் வாழ்க்கையின் மதிப்பைப் புரிந்து கொள்வீர்கள்.



நான் சொல்கிறேன்... உங்களுக்குத் தேவையானவற்றை அளிப்பதற்கும் கவனித்துக் கொள்வதற்கும் நேரடிப் பொறுப்பிலுள்ளவர்களை மட்டும் தான் நீங்கள் அறிவீர்கள்.

ஆனால் இந்த எல்லாச் சமயங்களிலும் உங்களுக்கு உதவி புரியும் பாதுகாப்பளிக்கும் கவனித்துக்கொள்ளும் பிரபஞ்ச இருப்புத் தன்மையைப் பற்றியோ பிரபஞ்ச சக்தியைப் பற்றியோ நீங்கள் அறியக்கூட மாட்டீர்கள்.

ஆனால் நீங்கள் எப்பொழுதுமே உங்களுக்கு எது கொடுக்கப்பட்டிருப்பினும் அது உங்கள் தகுதியாலோ அல்லது எதேச்சையாக நிகழ்ந்ததென்றோதான் எண்ணுகிறீர்கள்.

உங்களை 'கவனித்துக்கொள்ளும் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் கண்ணுக்குத் தெரியாத கைகளை நீங்கள் காணவும் உணரவும் ஆரம்பித்த பிறகே பிரபஞ்ச இருப்புத் தன்மை நீங்கள் இங்கு இருக்க வேண்டும் என்று விரும்புகிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

அப்பொழுதுதான் நீங்கள் பிரபஞ்ச இருப்புத் தன்மை தொடர்ந்து உங்கள் மீது பொழிந்து கொண்டே இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

நீங்கள் உயிருடன் இருக்கிறீர்கள் என்ற உண்மை, பிரபஞ்ச இருப்புத் தன்மை நீங்கள் இங்கிருப்பதை விரும்புகிறது என்பதையும் அது உங்களை கவனித்துக்கொள்கிறது என்பதையும் காண்பிக்கப் போதுமானது.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# முகாமிலுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்து



**(கொழும்பு) — திருச்சி, செய்யாறு சிறப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் அனைத்து ஈழத் தமிழர்களையும் விடுதலை செய்யுமாறு தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் பண்ருட்டி தி.வேல்முருகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருச்சி, செய்யாறு ஆகிய சிறப்பு முகாம்களில் பல ஆண்டுகாலம் அடைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர் ஈழத் தமிழரகள்.

இவர்கள் அனைவரையும் விடுதலை செய்து பொதுமுகாம்களில் உள்ள உறவினர்களுடன் சேர்ந்து வாழ தமிழக அரசு உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையில் இறுதி யுத்தம் நிகழ்த்தப்பட்டு ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்ட நிலையில் சர்வதேச சமூகத்திடம் தமிழினம் நீதி கோரி போராடி வருகிறது.

இந்த நிலையில் தமிழக சட்டமன்றத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழினத்துக்கு ஆறுதலும் நம்பிக்கையும் பாதுகாப்பையும் தரக் கூடிய வகையில்,

இலங்கையில் நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை, இலங்கை நிகழ்த்திய போர்க் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை தேவை, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், தமிழீழத்துக்கான பொதுவாக் கெடுப்பு நடத்த வேண்டும் ஆகிய தீர்மாணங்களை தமிழக சட்டமன்றத்தில் தமிழக முதல்வர் முன் மொழிந்து அனைத்து கட்சியினர் ஆதரவுடன் நிறைவேற்றியதற்காக உலகத் தமிழினம் நன்றி தெரிவித்தது.

அதேபோல் ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் அண்மையில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்க்க வேண்டும்.

இலங்கை மீதான போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை நடத்த இந்தியாவே தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்ற மற்றொரு, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தையும் தமிழக முதல்வர் முன்மொழிந்து தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றியதற்கு உலகத் தமிழினமே இருகரம் கூப்பி நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்த இலங்கைக்கு ஆதர வான தீர்மானத்தை இந்தியா ஆதரித்ததற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து,

இந்தியாவின் நடவடிக்கை "ஆறாத மனப்புண்ணை ஏற்படுத்தியுள்ளதாக" வேதனை தெரிவித்து தமிழக முதல்வர் பிரதமருக்கு கடிதம் அனுப்பியதற்கும் உலகத் தமிழினம் நெஞ்சார்ந்த நன்றியை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

இந்த நிலையில் தமிழகத்தின் திருச்சி, செய்யாறு சிறப்பு முகாம்களில எந்த ஒரு விசாரணையும் இன்றி பல ஆண்டுகளாக சிறைகளில் வாடி வரும் ஈழத் தமிழ் உறவுகளை விடுதலை செய்து அவர்கள் தங்களது உறவுகளுடன்பொது முகாம்களில் வசிப்பதற்கான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும்.

ஈழத் தமிழ் உறவுகளை விடுதலை செய்யும் அதிகாரம் தமிழக அரசுக்கு இருக்கிறது. ஆகையால் தாயுள்ளத்துடன் இந்த உறவுகளை தமிழக முதல்வர் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

# மரணதண்டனை தீர்மானம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது

ஐக்கிய நாடுகள் சபை கேட்டுக் கொண்டமைக்கு இணங்க மரண தண்டனை நிறைவேற்றல் தீர்மானத்தை அரசாங்கம் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

விரைவில் நாட்டில் மரண தண்டனை நிறைவேற்றம் அமுலுக்கு வரப்போகிறது என்ற தகவல்கள் வெளியான நிலையிலேயே இந்த அறிவிப்பை அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கையின்பேரில் 102 நாடுகள் மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்தியுள்ளன.

அண்மையில் பாப்பாண்டவரும் மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்துமாறு கோரியிருந்தார் என்று அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

## கடந்த 10 மாத காலத்தில் மட்டும் 21,381 டெங்கு நோயாளர்கள்

இந்த ஆண்டின் கடந்த 10 மாத காலப்பகுதியில் 21,381 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் 50 வீதத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

• கொழும்பு மாவட்டத்தில் 6848 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 2973 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறைந்த டெங்கு நோயாளர்கள் அம்பாறை மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

டெங்கு நுளம்பு பரவும் வகையில் காணப்படும் இடங்களை சுத்திகரிக்கும் நடவடிக்கைகளை வழமை போல் மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை வடக்கு மாகாணத்திலும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் மழைக் காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு நோய் அபாயம் குறித்து பொதுமக்களை விழிப்புடன் இருக்குமாறும் டெங்கு நுளம்பு பெருகும் சூழலை பேணுவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறையினர் அறிவித்துள்ளனர். (இ-10)

# விமல் வீரவன்ச,உதய கம்மன்பிலவை முன்னணியிலிருந்து துரத்த முயற்சி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இருந்து தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவை நீக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை முன்வைப்பதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பிரதி அமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம,

முன்னணியில் செயற்படுகின்ற இக் குழுவினர் முன்னணிக்கு எதிராக செயற்படுகின்றார்கள்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உலக நாடுகளுக்கு முன் எங்கள் நாட்டினை கௌரவப்படுத்தியுள்ளார்.

ஆனால் முன்னணியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளில் உள்ளவர்களை ஆட்டோவில் அழைத்து செல்வதற்கேனும் அவர்களுக்கு ஆதரவாக மக்கள் இல்லை.

வீரவன்ச, கம்மன்பில ஆகியோர் இதனை தவறு என்று கூறுகின்றார்கள், இது ஒரு காட்டிக்கொடுப்பென்று கூறுகின்றார்கள். இவர்கள் கூறுவதனை போன்று எங்கள் நாட்டினை அநாதையாக்க முடியாது.

இவர்களை முன்னணியில் இருந்து நீக்குமாறு நான் ஜனாதிபதியிடம் கோரவுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

# இன்று ஒரு தகவல்

## மரங்கள்–நமது வரங்கள்

வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்று அரசு விளம்பரப் படுத்துகிறது. முதலில் வீடு கொடு.பிறகு மரத்தை நாங்களே வளர்ப்போம் என்று புதுக்கவிதை அதனைக் கேலி செய்கிறது. உண்மையில் அரசும் சரி மக்களும் சரி மரங்களின் அருமையை உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மரத்தைத் தரு என்பது பழைய தமிழ்ப் பழக்கம். நிழல் தரும், மழை தரும், காய் தரும், கனி தரும்,காற்றும் தரும் காய்ந்து விழுந்தாலும் விறகாகத் தன்னையே தரும். இப்படித் தருவதால் அதன் பெயர் தரு. கேட்டதை எல்லாம் தருவது தேவலோகத்தின் கற்பகதரு என்ற கற்பனையின் காரணம் இது தான்.

தாவரங்களுக்கும் உயிர் உண்டு என்று விஞ்ஞானம் கூறும் முன்பே மெய்ஞ்ஞானம் அதை வாழ்க்கை ஆக்கியது. சங்க இலக்கியத்தில் தாவரங்கள் நமதுகுடும்ப உறுப்பி னர்கள். நற்றிணையில் விளையாடு ஆயமொடு என்று தொடங்கும் பாடலில் ஓர் உண்மை தெரிகிறது.

தலைவன்–தலைவி–தனிமை மூன்றும் இணைந்த நல்ல காலம். அளவற்ற ஆவலோடு அருகிருக்கும் தலைவியை அணைக்க வருகிறான் தலைவன். உள்ளத்தால் வரவேற்று உடலால் எதிர்த்து நாணம் பொங்க எதிரே நின்ற பெரிய புன்னை மரத்தை சுட்டிக்காட்டினாள் தலைவி. மரத்தில் இருந்து யாரும் பார்க்கிறார்களா? என்று ஆராய்ந்தான் தலைவன். இல்லை என்று உறுதி செய்து கொண்டு இன்னும் நெருங்கினான். நாணம் பெருக மறுபடியும் மரத்தைக் காட்டினாள் தலைவி. மரத்திலிருந்து யாரும் பார்க்க வில்லை என்றான் தலைவன். மரம் பார்க்கிறதே என்றாள் தலைவி!

அத்தோடு நிறுத்தவில்லை. அவள் என் அக்காள் என்று விபரமாக விளக்கினாள். இந்த தலைவியின் தாய் சிறு வயதில் தோழியர் கூடி புன்னை விதைகளை மண்ணில் ஒளித்து விளை யாடி மகிழ்ந்தாள். வீடு திரும்பியவள் புன்னையை மறந்தாள். அதுவோ முளை விட்டுச் செடியாகி மண்ணின் மடியில் கிடந்த படி வானத்தை ரசித்து இலை யாட்டியது. அந்தப் புன்னைச் செடியை அடையாளம் கண்ட அன்னை தனது முதல் படைப்பா கக் கருதி நீர் வார்த்தாள். தனக்குக் கிடைத்த நெய்யும் பாலும் பெய்து வளர்த்தாள். பின்னர் திருமணமாகி இந்தத் தலைவி யைப் பெற்றாள். வளர்ந்து செழித்த புன்னையைக் காட்டி இவள் உன் சகோதரி என்று அறிமுகம் செய்தாள். அன்னை உணர்த்திய புன்னையின் பெருமையால் தாவர வர்க்கத்தை தன் வர்க்கமாகக் கருதினாள் தலைவி. தண்ணீர் விட்டாள் மரம் வாடினால் கண்ணீர் விட்டாள்.

அந்தப் புன்னை மர அக்காவின் முன்னர் காதலன் அணைப்பது அவளுக்கு நாணம் தருகிறது.கணவனே ஆனாலும் அக்கா முன்னால் அணைப்பது தங்கைக்கு வெட்கம் தராதா? தாவரங் கள் நமது உறவினர்கள். இல்லை யென்றால் துளசி என்றும் வேம்பு என்றும் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பெயர் வைப்போமா?

நமது முன்னோர்கள், அரசாங்கத்தோடு மரங்களை இணைத்தனர். பண்டைய அரசர்கள் ஒவ்வொருவருக்கும் காவல் மரம் என்று ஒன்று உண்டு.அந்த இன மரத்தை அந்த மண் மக்கள் வெட்டுவது இல்லை. அது ராஜ துரோகம். மருது பாண்டியர் வரலாற்றில் பெரிய மருது,சின்ன மருது என்று மருதமரங்கள் கொண்டாடப்பட்டதைப் பலரும் அறி யலாம்.

அரசனை விடவும் ஆண்டவனுக்கே மரத்தை அர்ப்பணம் செய்தது அதிநுட்பமானது. கடம்பு முருகனுக்கு உரியது. வேம்பு மாரியன்னைக்கு உரியது.பராசக்தி கதம்பவன வாசினி. கற்பகம் என்ற தருவின் பெயர் கற்பகாம்பிகைக்கு உண்டு.மேலும் மயிலைக் கோயிலுக்குப் புன்னை மரம் ஸ்தலவிருட்சம்.ஒவ்வொரு கோயிலிலும் எது ஸ்தல விருட் சமோ அந்த இன மரத்தை ஊரிலே யாருமே வெட்டக்கூடாது.

மேலை நாட்டு அம்மணி ஒருவர் ரசிகமணி டி.கே.சி. அவர்களுடன் உரையாடிய போது நடந்த ஒரு நிகழ்ச்சி. மேலைநாட்டார், கீழை நாட்டாரை விட பண்பாடு,கலா சாரத்தில் முதிர்ந்தவர் என்பது அம்மையார் அபிப்பிரா யம்.இந்தியர்களைக் கேலி செய்து விட்டு, மனிதனை மனிதன் நேசிப்பதில் என்ன பெருமை இருக்கிறது. நீங்கள் மனிதர்களை நேசிக்க மட்டுமே கற்று இருக்கிறீர்கள். தாவரங்களையும் நாங்கள் நேசிக்கிறோம் தெரியுமோ என்றார்.

அத்தனை பெரிய மீசைக்கு மேலேயும் சிரிப்பு வெளியே தெரியும்படி ரசிகமணி,அம்மணி...நீங்கள் மரங்களை நேசிக்கிறீர்கள். நாங்களோ அவற்றைப் பூசிக்கிறோம் என்ற பொருளில் Of course you love trees...Where as We Worship it என்றாராம். வேப்ப மரத்துக்கு மஞ்சளும் குங்குமமும் வைத்துப் பூசிக்காத கிராமம் உண்டா?

வெட்டுவதையே தொழிலாகக் கொண்ட வேடுவர்களே மரங்களை வெட்டாத போது மற்றவர்கள் வெட்டலாமா!அசோகவனத்தில் மரங்கள் பரப்பிய கருணை நிழலில் சீதைசிறையிருந்தாள் என்பதைக் கேள்விப்பட்ட பிறகும் மரங்களை வெட்டலாமா? மாதங்களில் நான் மார்கழி என்ற கண்ணபிரான் மரங்களில் நான் அரச மரம் என்றதை மறக்கலாமா?

போதி மரத்தடியில் புத்தர்ஞானம் பெற்றார்.புளிய மரத் தடியில் நம்மாழ்வார் ஞானம் தந்தார். அரச மரத்தடியில் அமர் ந்தபடி திருமந்திரம் செய்தார் திருமூலர். குருந்த மரத்தடியில் தான் மணிவாசகர் குருவைக் கண்டார். உலகுக்கே நிழல் கொடுத்த ஞானிகளுக்கு நிழல் கொடுத்த பெருமை மரங்களுக்கு உண்டு. எந்த மரத்தையும் வெட்டாதீர்கள்...அது எந்த ஞானிக்காகக் காத்திருக்கிறதோயாருக்குத் தெரியும்!

# ஐ.நா.விசாரணை அறிக்கையின் விளக்கங்களும் குறிப்புக்களும்

(05.09.2015 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி....)

**பரிந்துரைகள்.**

இந்த அறிக்கையிலே 39 பரிந்துரைகள் உள்ளன. அவற்றுள் 33 பரிந்துரைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் ஆறு பரிந்துரைகள் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கும் அதன் அங்கத்துவ நாடுகளுக்குமாகும்.

இந்தப் பரிந்துரைகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது. நிறுவன சீர்திருத்தம், நீதி உண்மை/அறிவதற்கான உரிமை மற்றும் திருத்தியமைப்புக்கள்.

**நிறுவன சீர்திருத்தங்கள்**

நிறுவன சீர்த்திருத்தத்தின் கீழான பரிந்துரைகளுள் பல,மக்களுக்கு அரசாங்கம் ஏற்கனவே வாக்குப் பண்ணியுள்ளவைகளை நிறைவேற்றும்படிக்கானவைகளாகவே உள்ளன. முதலிலே 19ம் சீர்திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட சட்டமன்றப் பேரவையை இயங்கும்படி செய்ய வேண்டும். இரண்டாவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவை வலுவூட்டும்படியாக சட்டம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும் எனும் பரிந்துரை.

அறிக்கையானது இராணுவத்திலே சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. இராணுவத்தின் சகல கிளைகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் சித்திரவதைகள், கற்பழிப்பு, பாலியல் வன்முறைகள் மற்றும் இதர மனித உரிமை மீறல்கள் தடைசெய்யப்பட்டுள்ளன எனும் தெளிவான பகிரங்க அறிவுறுத்தலை அரசாங்கம் விடுக்கவேண்டும் என அது கேட்டுள்ளது. அப்படியான குற்றச் செயல்களை யாராவது செய்தால், அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். மேலும் மனித உரிமை மீறல்களிலே ஈடுபட்டுள்ள நபர்களைப் பணி நீக்கும் ஒரு உபாய திட்டத்தை அரசாங்கம் வகுக்கவேண்டும் எனவும் அது கேட்டுள்ளது.

துணை இராணுவக் குழுக்களை இனங்கண்டு அவற்றின் ஆயுதக்களைவுக்கு உடனடியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதும் அது விடுத்துள்ள மேலதிக பரிந்துரைகளுக்குள் அடங்கும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அதன் ஒழுங்குவிதிகளையும் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் அதன்மூலம் இலங்கையின் தேசிய பாதுகாப்பு வரைவமைப்பானது சர்வதேசச் சட்டத்துக்கு ஒத்துப்போவதாய் இருக்கவேண்டும் எனவும் இலங்கை அரசாங்கத்திடம் அறிக்கை மேலும் கேட்டுக்கொண்டுள்ளது. இறுதியாக அரசாங்கம் தனியார் நிலங்களை மீளளிக்கவேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது.

இந்தப் பரிந்துரைகளுள் அநேகமானவை, இலங்கையும் ஆதரவு தெரிவித்து மனித உரிமைகள் பேரவையிலே ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**நீதிக்கான உரிமை**

அறிக்கையின் பிரதான பரிந்துரையானது இலங்கை ஒரு கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் எனும் பரிந்துரையாகும். இலங்கையிலே முழுமையான உள்ளூர் பொறிமுறை நீதியை பெற்றுத்தராது என்பதை அறிக்கை கூறுகிறது. கலப்பு நீதிமன்றம் என்றால் சர்வதேச நீதிபதிகள், வழக்குத் தாக்கல் செய்வோர், சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் போன்றோர் உள்ளடங்கலாகச் சர்வதேசப் பணியாளர்களையும் அரசாங்கம் பணிக்கமர்த்தும்படி ஊக்குவிக்கிறது. இது தான் இலங்கை ஏற்றுக்கொள்வதற்கு மிகவும் கடினமான பரிந்துரையாகும். ஆயினும் தற்போது அது ஆதரித்த தீர்மானத்திலே இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சட்டச்சீர்திருத்தம் பற்றிய பல பரிந்துரைகளை அறிக்கை செய்துள்ளது. முதலிலே அரசாங்கம் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சி கொடுப்பவர் பாதுகாப்புச் சட்டத்தை மீளாய்வு செய்யும்படி பரிந்துரைக்கிறது. இரண்டாவதாக யுத்தக் குற்றச்செயல்களையும் மனுக் குலத்துக்கு எதிரான குற்றச்செயல்களையும் இன அழிப்பையும் திணிக்கப்பட்ட காணாமற் போகப் பண்ணுதல்களையும் குற்றச்செயல்களாக்கும் சட்டமூலத்தை இயற்றும்படிக்கான பரிந்துரையாகும். இதைச் செய்யும்போது, இதிலே சம்பந்தப்பட்ட சிரேஷ்ட அதிகாரிகளும் குடிமக்கள் தலைவர்களும் பொறுப்புக் கூறச் செய்வதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஊக்குவிக்கப்படுகின்றது.

மேலும் ஏற்கனவே உள்ள பல வழக்குகளை அரசாங்கம் மீளாய்வு செய்து கொள்ளும்படியும் அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது. குறிப்பாக, காணாமற் போனோர் பற்றிய விசாரணைக்குழுவினாலும், காணாமற் போன நபர்கள் பற்றிய விசாரணைக்குழுவினாலும், காணாமற் போன நபர்கள் பற்றிய வலைய மற்றும் அகில இலங்கை ஆணைக்குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல வழக்குகளையும் மீளாய்வு செய்யும் படியாக அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் தடுத்து வைத்துள்ளோர் பற்றிய வழக்குகளை மீளாய்வு செய்து அவர்களை விடுவிக்கவோ அல்லது உடனடியாக அவர்களை நீதிமன்றத்திலே முற்படுத்தவோ வேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



**உண்மைக்கான உரிமை**

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமக்கு என்ன நடந்தது எனும் உண்மையை அறியும் உரிமையுள்ளது என்பதை சர்வதேச சட்டம் இனங்கண்டுள்ளது. இந்த உரிமைக்கு அனுசரணை வழங்கும்படியாக, அறிக்கை பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. அவற்றுள் அநேகமானவை காணாமற்போயுள்ளவர்கள் எங்கே என்பது தொடர்பானவையாகும்.

இலங்கை அரசியல்வாதிகளினதும் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களினதும் கோரிக்கைகளுக்கு இசைவாக, காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, இராணுவ விசாரணை மன்றம், பொதுமக்கள் கொலைகள் தொடர்பான பல அறிக்கைகள் போன்ற முன்னைய பல விசாரணை ஆணைக்குழுக்கள் வழங்கியுள்ள ஆனாலும் பதிப்பிக்கப்படாத அறிக்கைகளை அரசாங்கம் பதிப்பிக்க வேண்டும் என்பதுவும் ஒரு பரிந்துரையாகும்.

இந்த அறிக்கையானது தடுக்கப்பட்டுள்ள நபர்கள் பற்றிய ஒரு மத்திய தரவுத் தளத்தில் உள்ள தகவல்களின் நம்பகத்தன்மையானது சுயாதினமாகச் சரிபார்த்துக் கொள்ளப்படல் வேண்டும். தடுப்புக் காவலிலே தடுத்து வைக்கப்பட்டிருந்த தமது உறவுகள் எங்கே என்பதை நபர்கள் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். மேலும் தடுப்புக் காவல் மையங்கள் பற்றிய ஒரு வர்த்தமானி அறிக்கையை அரசாங்கம் பதிப்பிக்கும்படியும் அறிக்கை கோருகின்றது.

**திருத்தியமைப்புக்கள் தொடர்பான உரிமை**

மனித உரிமை மீறல்களாலும் துஷ்பிரயோகங்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட தீமையைத் திருத்தியமைப்பதை திருத்தியமைப்புக்கள் பணி உள்ளடக்கியது. அவை பண நஷ்ட ஈடு, சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் அடையாள நடவடிக்கைகள் போன்றவற்றையும் உள்ளடக்கியது. அரசாங்கம் ஒரு தேசிய திருத்தியமைப்புக்கள் கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கைக்கு வேண்டியதான பாதீட்டையும் அரசாங்கமே வழங்க வேண்டும் எனவும் அறிக்கை பரிந்துரை செய்கிறது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள, சமூக ஆதரவுக்கான வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தியாக்கும்படியாக அரசிடம் அறிக்கை பரிந்துரை செய்கிறது. மேலும் இடம்பெயர்ந்த மக்கள் கூட்டத்தினருக்கு நிலைநிற்கும் தீர்வினை அரசாங்கம் கண்டுகொள்ளும்படிக்கான பல பரிந்துரைகளை இந்த அறிக்கை கொண்டதாகவும் அறிக்கை பரிந்துரை செய்கிறது.

**முடிவு**

இந்த அறிக்கையானது நேர்மையானதாயும் நடுநிலையானதாயும், பாதிக்கப்பட்டோர் விடுத்த பல கோரிக்கைகள் பற்றிய அதன் பல பரிந்துரைகளையும் உள்ளடக்கியது. இதிலே ஊக்கம் தரும் ஒரு விடயம்.

எதுவெனில், இலங்கையின் ஆதரவுடன் மனித உரிமை பேரவை ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமையும் இலங்கையை அதன் பரிந்துரைகளை அமுல்படுத்தும்படியும் கோரியுள்ளமையும் கலப்பு நீதிமன்றத்தின் தேவைகளை சுட்டிக்காட்டுவதாயும் வெறுமனே இலங்கை சட்டத்தில் மாத்திரமின்றி சர்வதேச சட்டத்தையும் பிரயோகிக்கும்படிக்கும் உள்ளன. இந்த அறிக்கையும் தீர்மானமும் பாதிக்கப்பட்டோருக்கான நீதிக்கான போராட்டத்திலே ஒரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது.

(முற்றும்)

# ஜெனீவாவில் வெற்றி பெற்ற அமெரிக்க இராஜதந்திரம்

...இலங்கையில் நடக்கும் ஒவ்வொரு விடயத்தையும், இந்தியா தனது நாட்டின் நலனில் அது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை வைத்தே முடிவுகளை எடுக்கிறது.

ஆனாலும், இம்முறை தீர்மான விடயத்தில், உள்நாட்டு விசாரணைக்கப்பால் நகர்த்தப்பட்டுள்ள தீர்மானத்தை இந்தியா எதிர்க்கவும் முடியாத- அதேவேளை, வெளிப்படையாக ஆதரிக்கவும் முடியாத நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. சீனாவும் கூட இதனை எதிர்க்கவோ, வாக்கெடுப்பு நடத்தவோ கோரவில்லை.

இலங்கை அரசாங்கம், தீர்மானத்தை ஏற்றுக் கொண்டதால், அதனுடன் இணங்கிச் செல்வதால் மட்டும் சீனா அவ்வாறு நடந்து கொண்டதெனக் கூற முடியாது.

கடந்த காலங்களில், சம்பந்தப்பட்ட நாடுகள் இணங்கியிருந்தாலும், பிற உறுப்பு நாடுகளின் கோரிக்கைகளுக்கு அமைய தீர்மானங்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருக்கின்றன.

ஆனால், இம்முறை, இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உலகம் அங்கீகரித்திருப்பதையும், அதற்கு ஆதரவளிப்பதையும் கருத்தில் கொண்டு சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் வாக்கெடுப்பைக் கோராமல் இருந்துவிட்டன.

இதேபோன்றதொரு தீர்மானம், ஐ.நா பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்பட்டிருந்தால், அப்போதும் இந்த நாடுகள் இவ்வாறு செயற்பட்டிருக்கும் என்று கருத முடியாது.

அங்கு ரஷ்யா, சீனாவுக்கு வீட்டோ அதிகாரம் உள்ளது. அதை வைத்து தீர்மானத்தை இந்த நாடுகள் நிச்சயம் தடுத்திருக்கும்.

ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எந்த நாட்டுக்கும் வீட்டோ அதிகாரம் கிடையாது, எனவே, தாம் எதிர்த்தாலும், தீர்மானம் நிறைவேறும் என்பதை, சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் உணர்ந்திருந்தன.

இங்கும் வீட்டோ அதிகாரம் இந்த நாடுகளுக்கு இருந்திருந்தால், இலங்கை ஒரு போதும், இத்தகைய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்திருக்காது என்பதும் உறுதி.

எது எப்பியோ, தமிழர் தரப்பும், மனித உரிமை அமைப்புகளும் முழுமையாகத் திருப்தி கொள்ளும் அளவுக்கு இல்லாவிட்டாலும், உள்ளக விசாரணைக்கு அப்பாற்பட்ட ஒரு முன்னேற்றகரமான விசாரணைக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அடித்தளம் இட்டிருக்கிறது அமெரிக்கா.

இந்த தீர்மானம் மிகவும் வலுவானது என்று கூற முடியாவிட்டாலும், இதனை வைத்து, தமிழ் மக்களுக்கு உச்சப் பயனைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகளைத் தேட முனையலாம்.

அதேவேளை, இலங்கைக்கு இந்த தீர்மானத்தின் மூலம், 18 மாதங்கள் நிம்மதியாக மூச்சு விடும் காலஅவகாசம் கிடைத்திருக்கிறது. அதற்குள்ளாக, நம்பகமான விசாரணைகள், காத்திரமான நடவடிக்கைகளின் மூலம், நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் இலங்கை இருக்கிறது.

நாட்டின் அடிப்படைச் சட்டக் கட்டமைப்புகளை வைத்தே, இந்த தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.

அதனை எப்படி அரசாங்கம் சாதிக்கப் போகிறது என்பது தான் அடுத்துள்ள கேள்வியாக இருக்கிறது.

இப்போதைக்கு அமெரிக்காவின் இராஜதந்திரம் ஜெனீவாவில் வெற்றி பெற்றிருந்தாலும், அது இறுதியான வெற்றியை அளிக்குமா என்பது இலங்கையின் கையில்தான் இருக்கிறது.


-ஹரிகரன்- (முற்றும்)

# அரசு நீண்ட நாட்கள் நிலைத்திருக்காது!

## வாசுதேவ எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

**நாட்டு மக்களை ஏமாற்றி பொய்யான உறுதி மொழிகளை வழங்கி ஆட்சியைப் பிடித்த இந்த அரசாங்கம் நீண்ட நாட்கள் நிலைத்திருக்காது. மக்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டங்களை ஆரம்பிப்பார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாத த்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இந்தியாவில் தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு ஒரு வீதம் உள்ளூர் உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

அத்துடன் வறுமையில் வாழும் மக்களுக்கு சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இதனைத்தான் இங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்.

வெளிநாடுகளில் பாண் ஒரு இறாத்தலின் விலை 400 ரூபாவாகும். "பிரெட் டோக்கிலும்" இங்கு மேற்கண்ட விலையில்தான் பாண் விற்பனை செய்யப்படுகிறது.

எனவே நெல்லுக்கு நியாயமான விலை கொடுத்து வாங்க வேண்டும், விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அத்துடன் அரிசி மா மூலம் பாண் தயாரிக்கும் முறையை அறிமுகப்படுத்தி நாட்டில் அரிசிமா பொருட்களை மக்களின்மத்தியில் கொண்டு செலல வேண்டும்.

அதேவேளை மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா மானிய விலையில் வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்க வேண்டும்.

விவசாயிகள் நெல்லை விற்பனை செய்து கொள்ள முடியாது பரிதவிக்கின்றனர். ஆனால் நெல் கொள்வனவு செய்யும் முதலாளிமார் செல்வந்தர்களாக மாறுகின்றனர்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் நெல்லுக்கு, தேயிலைக்கு, இறப்பருக்கு கட்டுப்பாட்டு விலை கொடுத்து விற்கப்பட்டது.

ஆனால் இந்த அரசாங்கம் தேயிலைக்கும் இறப்பருககும் சிறந்த விலை கொடுப்பதாக கூறி மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஆட்சியை பிடித்தார்கள்.

இந்த ஆட்சிக்கு எதிராக மக்களின் போராட்டங்கள் வெடிக்கும். இந்த ஆட்சி தொடர்ந்தும் நிலைத்திருக்க முடியாத நிலை ஏற்படும் என்றார். (இ-10)

## ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பில் 7 இலங்கை முஸ்லிம்கள்

சிரியாவிருந்து இயங்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். இஸ்லாம் தீவிரவாத அமைப்பில் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம்கள் 7 பேர் இணைந்து செயறபடுவதாக தகவலகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு இணைந்து செயற்படுபவர்கள், கொழும்பு மற்றும் கண்டி பிரதேசங்களைச் சேரந்தவர்கள் எனவும் சுமார் 20 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் அத்தகவல் சுட்டிக்காட்டியுள்ளது. இதேவேளை, இலங்கையைச சேர்ந்த ஒருவர், ஐ.எஸ். ஐ.எஸ்.அமைப்பில் சேர்ந்து உயிரிழந்திருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 160 | 160 |
| தக்காளி | 50 | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 50 |
| கோவா | 50 | 60 | 60 | 60 |
| கரட் | 80 | 90 | 80 | 70 |
| பூசணி | 40 | 40 | 50 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 80 | 90 | 100 | 250 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 80 | 100 | 70 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 30 | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 80 | 50 |
| போஞ்சி | 140 | 170 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 240 | 200 | 300 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | — | — | - |
| வெங்காயப்பூ | 200 | 170 | 200 | 200 |
| முள்ளங்கி | 40 | 60 | 80 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 512

**மோகன்ராஜ்**



இழந்தவர்களுக்குத்தான் தெரியும் தாயின் அருமை.
அன்னையின் அருமை மனிதனின் மறுபக்கம்


**குருபரன்**





**கமல்**





**வீனா செந்தில்**




**லூசியஸ்**




**பிரணவன் விசுனா**



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆட்சியாளர்களுக்கு ஆன்ம பரிசோதனை

## த இந்து ஆசிரியர் தலையங்கம்

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்தும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுவிட்டது. இது எதிர் பார்க்கப்பட்டதுதான்.

சர்வதேசங்களின் முடிவானது, அடிப்படையில் அந்தந்த நாடுகளின் ராஜீய நலன்களையும் கணக்குகளையுமே பிரதானமாகக் கொண்டு எடுக்கப்படுபவையே என்பது மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் அரசியல் தலைமையும் இராணுவத் தலைமையும் செயற்பட்ட விதம் தொடர்பாகத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்து சர்வதேச விசாரணைக்காகக் குரல் கொடுத்துவந்தாலும், இந்தக் கோரிக்கையை இலங்கை அரசும் பிரதான அரசியல் கட்சிகளும் கடுமையாக எதிர்த்தே வந்தன.

மகிந்த ராஜபக்ஷ அரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, இலங்கையின் இரு பிரதான கட்சிகளும் ஒருமித்த குரலோடு பேசும் சூழலில், எது இப்போதைக்கு ஓரளவேனும் சாத்தியமோ, அதையே முடிவாக முன்மொழிந்திருக்கின்றது சர்வதேசச் சமூகம்.

போர்க்குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம். இலங்கையின் ஒப்புதல் பெற்று, வாக்கெடுப்பில் இலங்கையையும் கலந்துகொள்ள வைத்த பிறகே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

போரினாலும் மனித உரிமைச் செயல்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிலும் குறிப்பாக உள்நாட்டுப் போரின் இறுதிப் பகுதியில் நடந்த அக்கிரமங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் பாதகங்களைச் செய்ய உத்தரவிட்டவர்கள் முதற்கொண்டு அதைச் செய்தவர்கள் வரையில் அனைவரும் அவரவர் தவறுகளுக்கு ஏற்பத் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும். சிறுபான்மை இனத்தவருக்கு அனைத்து அரசியல் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்.

அதிகாரப்பகிர்வு நடந்தேற வேண்டும்.

அரசு நிர்வாக அமைப்பே பாரபட்சமற்ற ஆட்சியை வழங்கும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனும் சர்வதேசத்தின் விருப்பங்களின் தொனி தீர்மானத்தில் ஒலிக்கிறது.

போருக்கு மிகப்பெரிய விலை கொடுத்த தமிழ்ச் சமூகத்துக்கு இது பெரும் ஏமாற்றம் தரக்கூடியது என்றாலும், இந்தத் தீர்மானப்படி ஒரு நியாயமான விசாரணை நடப்பதேகூட அத்தனை சாதாரணமான காரியம் இல்லை என்பதுதான் இலங்கையின் கள யதார்த்தம்.

அதேசமயம், ஒரு புதிய யுகத்துக்குள் நுழைந்திருக்கும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு, சிறுபான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை வென்றெடுக்க நிச்சயம் இது ஒரு நல்ல வாய்ப்பு.

மனித உரிமைகள் சட்டத்தை மீறியதான விசாரணை என்பது, விசாரணைக்குப் பிறகு இரு இனக் குழுக்களும் சமரசமாகப் போவதற்கு நல்லதொரு வாய்ப்பு.

நடந்த உண்மைகளை இருதரப்பும் அறியவும், இனி இப்படியொரு மோதல்கள் நிகழாத வண்ணம் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவும் இந்த விசாரணை வழி வகுக்கக்கூடும். அத்துடன் அரசியல் தீர்வு ஏற்படவும் இது உதவும்.

இலங்கை ஆட்சியாளர்கள் நியாயமான ஒரு விசாரணைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அனைவரின் நம்பிக்கையையும் பெறத்தக்க விதத்தில் விசாரணை நீதிபதியும், சட்டத்தரணிகளும் நியமிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அச்சமோ, தயக்கமோ இல்லாமல் தங்களுடைய புகார்களை முன்வந்து கூறி, சட்டப்படி பரிகாரம் தேடத்தக்க வகையில் விசாரணை நடைமுறைகள் அமைய வேண்டும்.

தம்முடைய நாட்டின் எல்லாச் சமூகங்களையும் சமமாகவே பாவிக்கிறது என்றால், இந்த விசாரணையை ஓர் ஆன்ம பரிசோதனையாக இலங்கை அரசு கருத வேண்டும் என அந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-10)

# பெறுபேறுகள்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் யாழ். சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்களான ஆ.விசாகன்-178, சி.சாருகா-178, ச.கிருசன்-176, த.அருணன்-174, சி.நிலக்சன்-173, பா.சேதுராம்-171, ரா.அபிராம்-170 அ.நர்த்தகி-169, கோ.திலக்சிதா-1 69 க.டோஜிகா-167, பி.அபிராம்-166, சி.மோகனவாணி-166, ர.டிலக்சன்-165, தி.கர்சனா-164, ம.மதுரா- 163, நி.வினோசா- 162, சி.திதோஜனன்-161, சு.ஆர்த்திகா-161, நி.சானு யன்- 160, ந.கவினயா-160, பா.சதுர்சன்-159, க.சிவசன் 159, ம.அஜனிகா-159, ஞா.லவீசன்-156. ஜெ.ஜெரோந்தனா-156, மு.ரக்சனா-154, மு.ஆகீஸ் -153, ஜெ.சியாமளன்-153 ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். (இ-29)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களமும் தொண்டைமானாறு வெளிக்கள நிலையமும் இணைந்து நடத்தும் பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடமாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு அண்மையில் நடத்திய கணித திறனாய்வுப் பரீட்சையில் பங்கு பற்றி சித்தியடைந்தவர்களுக்கான பரிசில்களே இன்றைய தினம் வழங்கப்படவுள்ளன.

பேராசிரியர் திருமதி.எஸ். குகநாதன் தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை வடக்கு மாகாண கல்வி அமைச்சின்செயலாளர் ஆர்.ரவீந்திரன் வழங்கவுள்ளதுடன் வாழ்த்துரையினை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய் வேந்திரராஜா வழங்கவுள்ளார்.

பரிசில் பெறுவோர் விபரம் வருமாறு, 1ஆம் இடம் ஆர்.டி. ஜே.பவுள் ஜான்சன் (யாழ்.சென் பற்றிக்ஸ் கல் லூரி), 2 ஆம் இடம் பி.கனிமாருதன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), 3 ஆம் இடம் பி.மீசானந் (யாழ். இந்துக்கல்லூரி) ஆகியோர் முதல் மூன்று இடங்களுக்குரிய பரிசில்களை பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேலும்விசேடசித்திகளைப் பெற்ற மாணவர்களான ரி.தக்சன் (யாழ். இந்துக்கல்லூரி) கே.ராகுலன் (யாழ். ஹாட்லிக் கல்லூரி), எஸ்.கீர்த்திகா (வவுனியா இறம்பைக்குளம் மத்தியமகாவித்தியாலயம்), பி.சாருஜன் (யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி), வி.சானின் (யாழ். கரணவாய் மகா வித்தியாலயம்), என்.முகுந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), பி.துஜிதா (யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை) ஆகியோருக்கும் இதன் போது பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (இ-5)

# வடமாகாணத்தில் தமிழ் பொலிஸார் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு

வடமாகாணத்தில் தமிழ் பொலிஸார் ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு நாளை 10 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. கே.ஜெயலத் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

இலங்கையில் 6 ஆயிரம் பொலிஸாருக்கான வெற்றிடம் காணப்படுகின்றது. இந் நிலையில் வட மாகாணத்தில் 1500 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இந் நிலையில் இவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளை 10 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியிலும் 11 ஆம் திகதி வவுனியா காமினி வித்தியாலயத்திலும் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ராஜேந்திர சோழனிடம் தோற்றுப்போன சிங்கள மன்னன்!

07



ராஜேந்திர சோழன் முன்னால், கைதியாக சிங்கள மன்னன் மகிந்தன்

....அதுமட்டுமின்றி, 100 ஆண்டுகளுக்கு முன்3னதாக சிங்கள அரசனிடம் பாண்டிய மன்னன் பாதுகாப்பாகக் கொடுத்து வைத்திருந்த மணிமகுடத்தையும் ராஜேந்திர சோழன் கைப்பற்றினான்.

### சிறையில் மகிந்தன்

போரில் தோற்றுப்போன மகிந்தன் சோழ வீரர்களால் சிறைப்பிடிக்கப் பட்டு ராஜேந்திர சோழன் முன்பாக நிறுத்தப்பட்டான்.

ராஜேந்திரசோழன் தமிழ்நாட்டுக்குத் திரும்பியபோது மகிந்தனும் கொண்டு செல்லப்பட்டான். அங்கு சோழ நாட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான். 12 ஆண்டு காலம் சிறையில் இருந்த மகிந்தன் சிறையிலேயே இறந்துபோனான்.



தஞ்சைப் பெரிய கோவில் அருகே உள்ள ராஜராஜசோழன் சிலை

மேற்கண்ட தகவல்கள் திருவாலங்காட்டு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. ராஜேந்திர சோழன் வெற்றியைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று கொழும்பு நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் இன்னும் உள்ளது.

மகிந்தனை ராஜேந்திர சோழன் முறியடித்தது பற்றி, சிங்களவர்களின் வரலாற்று நூலான சூளவம்சத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மகிந்தனின் மகன்

ராஜேந்திர சோழனால் சிறை பிடிக்கப்பட்ட மகிந்தனுக்கு காசிபவன் என்ற மகன் இருந்தான்.

போர் நடந்தபோது அவனுக்கு வயது 12. அவனைச் சிங்களவர்கள் ரகசியமாக வளர்த்து வந்தனர்.

சோழநாட்டு சிறையில் மகிந்தன் இறந்தபிறகு, காசிபனைத் தங்கள் மன்னனாக சிங்களவர்கள் அறிவித்தனர். சோழர்களை எதிர்க்க அவன் பெரும் படை திரட்டினான்.

இதை அறிந்த ராஜேந்திர சோழன், தன் மகன் இராசாதிராஜன் தலைமையில் ஒரு படையை அனுப்பினான்! கி.பி. 1041 இல் நடைபெற்ற இந்தப் போரில் காசிபவன் மாண்டான். சிங்களப் படை தோற்றுப் போய் சிதறி ஓடிற்று.

அதனபின், கீர்த்தி என்ற சிங்கள மன்னன் சோழர்களுடன் போர் புரிந்து தோற்றுப் போனான். அதனால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாமல் அவன் தற்கொலை செய்து கொண்டான்.

### பராக்கிரமபாண்டியன்

பிற்காலத்தில் சோழர்கள் புகழ் மங்கி பாண்டியர்களின் கை ஓங்கியது. அந்தக் கால கட்டத்தில் பாண்டியர்களும் இலங்கை மீது படையெடுத்தனர்.

கி.பி.1255 ஆம் ஆண்டு பட்டத்திற்கு வந்த ஜடாவர்மன் வீரபாண்டியன், இலங்கை மீதுபடையெடுத்து வெற்றி கண்டதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

தென்காசியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி நடத்திய அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422-61) இலங்கை மீது படையெடுத்துச் சிங்களரை பல முறை வென்றதாகக் கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.

பிற்காலத்தில் விஜயநகர அரசர்களும் இலங்கையில் போரிட்டுச் சிங்களரை வெற்றி கொண்டுள்ளனர்.

(தொடரும்)

# வரலாறு என்பது ஆண்டுகளில் அல்ல சாதனைகளின் பதிவுகளில் தங்கியுள்ளது

இலங்கையின் வட கல்விப் புலத்தில் நீண்ட கல்வி வரலாற்றுப் பாரம்பரியத்தினை கொண்டமைந்து 200ஆவது ஆண்டு நிறைவினைக் காணும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசியப் பாடசாலையின்) அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அவர்களின் நேர்காணல் வரலாற்றுப் பாரம்பரியத்துடன் கண்ணோட்டமாக இணைக்கப்படுகின்றது.

**நேர்காணல் :- எஸ்.ரி.குமரன்**




**மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன்**

**கேள்வி-** யாழ்ப்பாணம் மத் திய கல்லூரியின் அதிபராக வருவதற்குதங்களிடத்தே ஆர்வத்தை ஏற்படுத்திய காரணி யாது?

**விடை -** வரலாற்றுப் பரசித்தி பெற்ற பாடசாலை புனிதர்கள், கல்வியியலாளர்கள் பலரை உருவாக்கி அழகுபார்த்த பாடசாலை. இக் கல்லூரியின் அதிபராகநான் இருப்பது என்னுடைய பூர்வ ஜென்மபலன் என்று நினைக்கின்றேன்.

பேர்சிவல், லிஞ்ச்போன்ற புகழ் பெற்றவர்கள் அலங்கரித்த ஆசனத்தில் நான் இருப்பதை இட்டு பெருமையடைகின்றேன்.

கல்வி கற்ற பண்பாட்டு சமூகத்தின் உயிர் நாடியாகவும் யாழ்ப்பாணத்தின் இதயமாகவும் யாழ் நகரை அண்டிய வகையில் பௌதீகவளச் செழிப்புடன் வரலாற்றுச் சான்றுடன் விளங்குகின்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக இருப்பதையிட்டு சந்தோஷமடைகின்றேன்.

இருப்பினும் உயர்ந்த நிலையில் இருந்த பாடசாலை நாட்டு சூழ்நிலை காரணமாக சற்றுபின்னடைந்தநிலையில் காணப்பட்டது. இக் கல்லூரியை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வந்து உயர்நிலை வளர்ச்சியை அடையச் செய்ய வேண்டும் என்ற பெரு ஆவலுடன் இக்கல்லூரியின் அதிபராக பொறுப்பினை ஏற்றுக் கொண்டேன்.

**கேள்வி -** 200 ஆவது ஆண்டின் அதிபராக இருக்கின்ற உங்களது அண்மைக்கால கல்லூரி வளர்ச்சி தொடர்பாக கூறுங்கள்?

**விடை-** நான் கல்லூரி அதிபராக பொறுப்பேற்றபோது கல்லூரியின் பௌதீக வளத்தினை அழகுபடுத்தி கற்றலுக்கான கவின் நிலை அழகினை ஏற்படுத்த வேண்டும் என விரும்பினேன். இவ் எண் ணம் உடனடியாக கிடைத்த வாய்ப்புக்கள் மூலம் நிறைவேற்றப்பட்டது.

அதிபராக பொறுப்பேற்று நான்கு மாதத்தில் வேலைகள் முடிக்கப்படாதிருந்த நீச்சல் தடாகம் நாட்டின் கௌரவ முன்னாள் ஜனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

பழைய மாணவர்களின் பெருந்தொகை நிதியுடன் மை தானம் புனரமைக்கப்பட்டது. பூர்த்தி ஆக்கப்படாதிருந்த விஞ்ஞான அலகுகட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டன. கல்லூரியின் தேவையற்ற பௌதிக வளம் நீக்கப்பட்டு திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு பாடசாலை புதுப்பொலிவு பெற்றது.

நீண்ட வரலாற்று பாரம்பரியம் கொண்ட எமது கல்லூரிக்கு குறை யாக,கலையரங்கு ஒன்று இல்லாதிருந்தது.

அக் குறைபாட்டினைநீக்கும் வகையில் கல்லூரிக்கு அண்மையில் உள்ள நிலப் பரப்பு 2 கோடி ரூபாயில் கொள்வனவு செய்யப்பட்டு 65 மில்லியன் ரூபாய் செலவில் நவீன முறையில் 1300 பேர் அமர்ந்திருந்து பார்க்கக் கூடிய நவீன கலையரங்கு 200 ஆவது நினைவு மண்டபமாக அமைக்கப்பட்டு 2016 ஓகஸ்ட் முதலாம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

இக்கலையரங்கிற்கான முழு நிதியினையும் தந்தை செல்வாநிதியம் வழங்குகின்றமை சிறப்பம் சமாகும். இந்நிதியத்திற்கு கல்லூரி சமூகம் சார்பில் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இம் மண்டபத்திற்கான இருக்கை, ஒளி, ஒலி வசதிகளை பழைய மாணவர்களது அனுசரணையுடன் செய்யவுள்ளேன்.

கல்வித்துறை வளர்ச்சியில் தேவையானபாடங்களுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர் பெறப்பட்டு ஆசிரியர் பற்றாக் குறை போக்கப்பட்டு பெருந்தொகையான ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளார்கள். சிறந்த ஆசிரியர் ஆளணியுடன் கற்பித்தல் செயற்பாடு இடம் பெற்று வருகின்றது.

மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தினைஉயர்த்தும் வகையில் பழைய மாணவர்களின் நிதி அனுசரணையுடன் மாணவர்களிற்கான மேலதிக வகுப்புக்கள் 'சின்' எனும் செயற்றிட்டம் மூலம் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் மாணவர்களுக்கு அவர்களது திறன்களுக்கு ஏற்ப மேலதிக வகுப்புக்கள் கல்வி அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மைக் காலத்தில் மாணவர்களின் கல்விப் பெறுபேறு உயர் வளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளது. புலமைப்பரிசில் சித்தி யடையும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மருத்துவபீடம் பொறியியில், வணிக, கலைத்துறைக்கு அதிகளவான மாணவர்கள் அனுமதியை பெற்றுள்ளார்கள்.

விளையாட்டுத்துறை மீண்டும் எனது காலத்தில் புத்துயிர் பெற்று வளர்ச்சி யடைந்துள்ளது. மெய்வல்லுநர் போட்டியில் எமது பாடசாலை வடமாகாணத்தில் முதலாமிடத்தினைப் பெற்றுள்ளது.

உதைபந்தாட்டம், கூடைபந்தாட்டம், துடுப்பாட்டம், உள்ளக விளையாட்டுகள் தேசியமட்டம் வரைசென்று மாணவர்கள் வெற்றியை கல்லூரிக்கு பெற்றுத் தந்துள்ளார்கள்.

எமது வீரர் 16 வயதுக்குட்பட்ட தேசிய உதைபந்தாட்ட அணியில் இடம் பிடித்துள்ளார். பளுதூக்கல் போட்டியில் எமது வீரர் தெரிவு செய்யப்பட்டு பொதுநலவாய நாடுகள் போட்டியில் பங்குபற்றுகின்றனர். ஒலிம்பிக் சாதனையாளர் எதிர்வீரசிங்கத்துடன் ஆரம்பித்த விளையாட்டுத்துறை வளர்ச்சி என்று உயர் நிலைநோக்கி வளர்ச்சி யடைந்துள்ளது.

நடன நாடகத்துறை தேசிய மட்டம் வரைசென்று 10 இற்கு மேற்பட்டவிருதுகளினை பெற்று சாதனை படைத்துள்ளது. மன்றங்களின் செயற்பாடுகள் புதிய புத்தெழுச்சிபெற்றுள்ளன.

கடல் சாரணிய அணி, கடல் மாணவர் படையணி முதன் முதலாகஆரம்பிக்கப்பட்டது. பாடசாலை மட்டத்திலானதமிழ் சங்கம் எமது கல்லூரியில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு மிகப்பிரமாண்டமான இயல், இசை, நாடகவிழாவை நடத்தியுள்ளது.

மாணவர் விடுதி மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு "றிக் கோல்"எனும் அதே பெயரில் இலங்கையின் மலையகம் உட்பட பல பாகங்களிலும் இருந்து மாணவர்கள் உள்வாங்கப்பட்டு சிறப்புடன் இயங்குகின்றது.

**கேள்வி -** 200ஆவது ஆண்டு மத்தியின் நடைபவனியூடாககல்விச்சமூகத்திற்கு சொல்லவிரும்புவது?

**விடை-** மத்திய கல்லூரி 200 ஆவது ஆண்டு காலவரலாற்றுப் பாரம்பரியத்துடன் பல்வேறு துறைக்ளை அறிமுகம் செய்துபல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்று வரலாற்றுப் பாரம்பாரியத்தினை கொண்ட பாடசாலையாக விளங்குகின்றது. மீண்டும் பல்துறைவளர்ச்சியை நோக்கிசென்று கொண்டிருக்கின்றது. எமது கல்லூரியின் சாதனைகள்,வரலாற்றுத் தடங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவதாக நடைபவனி அமைகின்றது.

இந் நடைபவனி ஊடாக புதிய மாணவர்கள் எமது பாடசாலையை நாடிவருகின்ற சூழல் உருவாக்கப்படும்.

**கேள்வி -** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக உங்களது எதிர்கால செயற்பாடுகளை குறிப்பிடுக?

**விடை -** எதிர்காலத்தில் நீச்சல் தாடகம் புனரமைக்கப்பட்டு இயங்கு நிலை பெறவுள்ளது.

இதற்கு கல்வியமைச்சு, விளையாட்டுத் துறையமைச்சு உதவவுள்ளன. எமது கல்லூரி வடமாகாணத்தின் விளையாட்டுப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனூடாக அனைத்துவிளையாட்டுத்துறைகளும் வளர்ச்சிபெறவுள்ளன.

200ஆவது ஆண்டினை எட்டிய வகையில் 100 மணித்தியால விளையாட்டுப் பயிற்சியில் மாணவர்கள் ஏதாவது ஒரு விளையாட்டுப் பயிற்சிபெற வேண்டும் எனும் செயற்றிட்டத்திற்கு ஏற்பதிறன் வாய்ந்த மாணவர்கள் ஒவ்வொரு விளையாட்டுத் துறையிலும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதன் மூலம் எதிர்காலத்தில் விளையாட்டுத் துறையில் மேலும் சாதனைகள் எமது கல்லூரி படைக்கவுள்ளது

**கேள்வி -** 200 ஆவது ஆண்டினைகொண்டாடும் பாடசாலையின் அதிபராக இருப்பதையிட்டு உங்களுடைய மனப்பதிவுயாது?

**விடை -** வரலாறு என்பது ஆண்டுகளின் எண்ணிக்கையில் அல்ல. அதுசாதனைகளின் எண்ணிக்கையில் தங்கியுள்ளது. வரலாற்றுபடிப்பினைகளின் ஊடாக பெறுகின்ற அனுபவம் போற்றுதற்குரியது. எமது கல்லூரி பல பதிவுகளை சாதனைகளாக்கி கொண்டிருக்கின்றது. 200ஆவது ஆண்டினைக்கொண்டாடக் கூடிய தகுதியினைப் பெற்றிருக்கின்றது.

இக்காலத்தில் கற்கின்ற மாணவர்கள், கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அதிஷ்டசாலிகள். வரலாற்றில் தங்களை உட்பதித்துக் கொள்கின்றார்கள். ஆரம்பப்பிரிவு புலமைப்பரிசில் சித்திவீதம் அதிகரிப்பு கார்ணமாக பெற்றோர் எமது கல்லூரியை தேடிவந்து மாணவர்களை இணைத்துக் கொள்கின்றார்கள். பழைய மாணவர்கள் ஒத்துழைப்பால் ஆரம்பப்பிரிவு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது.

200ஆவது ஆண்டினை நாம் கொண்டாடுவதையிட்டு கல்வியமைச்சுபாடசாலையின் பௌதீகவளஅபிவிருத்திக்காக 28 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்துடன் 20 இலட்சம் ரூபா செலவில் அதிநவீனவசதிகளைக் கொண்ட கழிப்பறைக் கூடம் ஒன்றினைஅமைத்துத் தரவுள்ளது.

**கேள்வி -** அதிபர் சேவையில் வெள்ளிவிழாவினை பூர்த்தி செய்துள்ளநீங்கள் உங்களுடைய நிர்வாகஅனுபவம் ஊடாக கல்விப் புலத்திற்கு சொல்ல விரும்புவதுயாது?

**விடை -** அதிபர் சேவையில் நீண்ட அனுபவத்தை பெற்றுள்ளேன். கல்லூரி முன்னேற்றத்திற்கு ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் மூவரின் முழுமையான இணைவு அவசியமாகும்.

அதனூடாகவே முழுமையான வெற்றியை அடைந்து கொள்ளமுடியும். நிர்வாக அனுபவத்தில் ஏனைய நிர்வாக தலைமைத்துவத்துடன் பாடசாலை நிர்வாகத் தலைமைத்துவத்தினைஒப்பிடமுடியாது. பங்குபற்றல் தலைமைத்துவத்தினுடாகவெற்றியை அடையலாம்.

ஜனநாயக பண்பான தலைமைத்துவத்துடன் சிறந்த வெற்றியை பெறலாம் என்பது எனது அனுபவ உண்மை. சர்வாதிகாரதலைமைத்துவத்தின் ஊடாகஎதனையும் சாதிக்கமுடியாது. ஜனநாயகத்தன்மை, மகிழ்ச்சியான பாடசாலை, பங்குபற்றல் முகாமைத்துவம் போன்றவற்றின் மூலம் பாடசாலையின் இலக்கினை அடைந்துகொள்ளமுடியும்.




# கரடி தலையில் தர்பூசணி

"நரியாரே! அந்த தர்பூசணி என்ன விலை?

"அதுவா! இருபது ரூபாய். கரடியாரே நீங்கதான் ரொம்ப சிக்கனம் பார்ப்பவ ராச்சே. தர்பூசணி வாங்க வந்திருக்கீ ங்க" எனக் கேட்டது நரி.

"புதுசா ஒரு சட்டம் வந்திருக்கே, அது உங்களுக்குத் தெரியாதா?" என பதிலுக்கு கேள்விக் கேட்டது கரடி.

" என்ன சட்டம்? தினமும் தர்பூசணி வாங்கணும்னா?" எனக் கேலியாகக் கேட்டது நரி.

"அட! இல்லை நரியாரே! வாகனம் ஓட்டுறவங்க கட்டாயமா தலைக்கவசம் போடணுமாம்" என்றது கரடி.

"ஓ! அந்தச் சட்டமா? நல்ல சட்டம் தானே. அப்போதானே விபத்துகள் குறையும்" என்றது நரி.

"அது சரி, உங்ககிட்ட வண்டி இல்லை. நீங்க ஈஸியா சொல்லிட்டிங்க. என்கிட்ட வண்டி இருக்கே" என அலுத் துக் கொண்டது கரடி.

"சரி கரடியாரே... தலைக்கவசம் வாங்கிட்டீங்களா, இல்லியா?"

"அதற்குத்தான் இங்கே வந்திருக் கேன்" என்றது கரடி. "என்னது! தலைக் கவசம் வாங்க பழக்கடைக்கு வந்திருக்கீ ங்க, என்ன கரடியாரே அடிக்குற வெயி ல்ல மூளை குழம்பி போய்டுச்சா?" எனக் கேலி பேசியது நரி.

"கோபப்படாதீங்க நரியாரே! நான் வண்டி ஓட்டுறதே வாரத்துக்கு ஒரு முறையோ. இருமுறையோதான். அதுக்காக 700, 800 நூறு ரூபா கொடுத்து தலைக்கவசம் வாங்க ணுமா? அதான் இந்த தர்பூச்ணியை வாங்க வந்தேன்" என்றது கரடி.

"கரடியாரே! நீங்க சொல்றது எனக் குப் புரியவே இல்லை. கொஞ்சம் புரியும்படிதான் சொல்லுங்களேன்" எனக் கேட்டது நரி.



"புரியும்படியே சொல்றேன். நான் வாங்குற இந்த தர்பூசணியை நல்லா சுத்தம் செஞ்சிட்டு தலைக்கவசமாக பயன்படுத்தப்போறேன். வண்டி ஓட்டு றப்ப தலையில மாட்டிக்குவேன். மீதி நாள்ல ஃபிரிட்ஜில வைச்சிடுவேன்.

(தொடரும்)




❖1003 - லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரை யிறங்கி, அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.
❖1604 - சுப்பர்நோவா 1604 பால் வெளியில் கண்டு பிடிக்கப்பட்டது.
❖1760 - ஏழாண்டுப் போர்: ரஷ்யா பேர்லின் நரைப் பிடித்தது.
❖1771 - டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கரையில் மூழ்கியது.
❖1799 - லூட்டின் என்ற கப்பல் நெதர்லாந்தில் 240 பேருடனும் +1,200,000 பெருமதியான பொருட்களுடனும் மூழ்கியது.
❖1804 - டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.
❖1806 -பிரஷ்யா பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.
❖1820 - கயாக்கில் ஸ்பெயினிடமிருந்து விடுதலையை அறிவித்தது.
❖1831 - கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்பொடீ ஸ்ட்றியா படுகொலை செய்யப்பட்டார்.
❖1835 - கொழும்பு ரோயல் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டது.
❖1888 - வோஷிங்டன் நினைவுச் சின்னம், அக் காலத்தில் உலகின் உயரமான கட்டடம், வோஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார்வை க்குத் திறக்கப்பட்டது.
❖1910 - மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற் கொண்ட பின்னர் வ. வே. சு. ஐயர் புதுச் சேரி திரும்பினார்.
❖1963 - வடகிழக்கு இத்தாலியில் இடம்பெற்ற நிலச்சரிவில் 2,000 பேர் கொல்லப்பட்டனர்.
❖1967 - சே குவேரா பொலிவியாவில் கைது செய் யப்பட்ட அடுத்த நாள் புரட்சியைத் தூண்டி னார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப் பட்டார்.
❖1970 - கம்போடியாவில் கெமர் குடியரசு அறிவிக் கப்பட்டது.
❖1981 - பிரான்சில் மரணதண்டனை நிறுத்தப்பட்டது.
❖2001 - இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.
❖2004 - ஆப்கானிஸ்தானில் முதற்தடவையாக ஜன நாயகத் தேர்தல் இடம்பெற்றது.

**பிறப்புக்கள்**


❖1879 - மேக்ஸ் வோன் உலோ, செருமானிய இயற் பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1960)
❖1897 - எம். பக்தவத்சலம், தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (இ. 1987)
❖1909 - வ. நல்லையா, இலங்கை கல்விமான், அரசி யல்வாதி
❖1924 - இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலை வர். (இ.1957)
❖1940 - ஜான் லெனன், ஆங்கிலப் பாடகர், இசை யமைப்பாளர் (இ. 1980)
❖1945 - விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ. 1988)
❖1966 - டேவிட் கேமரன், ஆங்கிலேய அரசியல்வாதி, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்
❖1968 - டிராய் டேவிஸ், அமெரிக்கக் குற்றவாளி (இ. 2011)
❖1968 - அன்புமணி ராமதாஸ், தமிழக அரசியல் வாதி

**இறப்புகள**

❖1943 - பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1865)
❖1958 - பன்னிரண்டாம் பயஸ் (திருத்தந்தை) (பி. 1876)
❖1967 - சே குவேரா, ஆர்ஜென்டீனிய கெரில்லாத் தலைவர், (பி. 1928)
❖1987 - வில்லியம் பாரி மர்பி, அமெரிக்க மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)
❖1995 - அலெக் டக்ளஸ் - ஹோம், ஐக்கிய இராச்சி யத்தின் பிரதமர் (பி. 1903)
❖2003 - ஏ. ரி. பொன்னுத்துரை, இலங்கைத் தமிழ் நாடகக் கலைஞர் (பி. 1928)

**சிறப்பு நாள்**

❖உலக அஞ்சல் நாள்




## உலக அஞ்சல் நாள்

இன்று இ-மெயில், இணையதளம், பேக்ஸ், மொபைல் என்று நவீன தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம். பேஸ்புக், டுவீட்டர், வாட்ஸ் அப் போன்ற சமூக வலைதளங்களின் வரவால் உலகம் சுருங்கிவிட்டது. இதன் காரணமாக உலகம் முழுவதும் நேரடி யாகவே (லைவ்) கருத்துக்கள், புகைப்படங்கள், வீடியோ, ஆடியோ பரிமாறப்படுகிறது. ஆனால் அன்று இத்தகைய வசதி கிடையாது. ஒரு தகவலை மற்றவருக்கு தெரிவிக்க வேண்டுமெனில் தபால் மூலமே தெரிவிக்கப்பட்டது.

தபால் துறையின் மகத்துவம் பற்றி, இன்றைய தலைமுறையி னர் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போது தபால் எழுதும் பழக்கம் இல்லாததால், சுயமாக எழுதும் பழக்கமும் இளைஞர்களிடம் குறைந்து வருகிறது. இருப்பினும் இன்றும் இலட்சக்கணக்கான மக்களின் தினசரி வாழ் க்கையில் தபால்துறை ஏதாவது ஒரு வழியில் முக்கிய பங்கு வகிக்கிறது. அலுவல் ரீதியான கடிதங்கள் உள்ளிட்டவற்றைக் கொண்டு சேர்க்கும் பொறுப்பு இன்றும் தபால் துறை வசமே உள்ளது.

உலக தபால் அமைப்பு 1874 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து தலை நகர் பெர்ன் நகரில் தொடங்கப்பட்டது. 1969 இல் இதை நினைவு படுத்தும் விதமாக ஒக்டோபர் 9 ஆம் திகதி உலக தபால் தினமாக அறிவிக்கப்பட்டது. உலக தபால் அமைப்பில், இந்தியா உள்ளிட்ட 150 நாடுகள் உள்ளன. தபால் துறையின் சேவைகளை பாராட்டும் விதமாகவும், தபால் துறையின் திட்டங்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்து வதற்காகவும் ஒக்டோபர் 9 ஆம் தேதி, உலக தபால் நாள் கடைப்பிடிக் கப்படுகிறது. இந்தியாவில் தபால் வாரமாக (ஒக்டோபர் 9- 15) கடைப் பிடிக்கப்படுகிறது.

இந்திய தபால் துறை 1764 இல் தொடங்கப்பட்டது. சுதந்திரம் பெற்ற தொடக்கத்தில் 23 ஆயிரம் தபால் நிலையங்கள் மட்டுமே இருந்தன. தற்போது நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 55 ஆயிரத்து 333 தபால் நிலையங்கள் செயற்படுகின்றன. இதில் 89 சதவீதம் கிராமங்களில் உள்ளன. 12 ஆயிரம் தபால் நிலையங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

புத்திசாலித்தனத்திற்கு எல்லை உண்டு. முட்டாள் தனத்திற்கு எல்லையே இல்லை

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மக்களை மாயைக்குள் வீழ்த்தும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள்

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.

பாராளுமன்றத்தில் பதாகைகளைத் தாங்கியவாறு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நடத்திய போராட்டத்தால் பாராளுமன்றத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

கலப்பு நீதிமன்றுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு எனும் போது பொது மக்களுக்கு எதுவுமே புரியாத நிலை ஏற்படவே செய்யும்.

ஏனெனில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு தமிழர். அதேநேரம் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலப்பு நீதிமன்றத்திற்கு எதிர்ப்பு என்றும் சொல்லப்படுகிறது. ஆக, இலங்கைப் பாராளுமன்றத்தில் அரசு, எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்ற வேறுபட்ட மூன்று நிலையினர் இருப்பது புரிகிறது.

எதுவாயினும் கலப்பு நீதிமன்றத்திற்கு பாராளுமன்றத்தில் எதிர்ப்பு என்பது அதிர்ச்சிக்குரிய விடயம்.

ஏனெனில் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் கலப்பு நீதிமன்றம் என்ற விடயம் கைவிடப்பட்டதாகவே கருதப்பட வேண்டும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றம் என்பது எந்த இடத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

இருந்தும் கலப்பு நீதிமன்றம் எனக் கூறி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழப்பம் நடத்துவது போர்க்குற்றம் தொடர்பில் எந்த விசாரணையும் நடத்தக் கூடாது என்பதாலாகும்.

எனவே போர்க்குற்றம் தொடர்பில் எத்தகைய விசாரணைகள் இடம்பெறுவதையும் தடுக்கின்ற நோக்கில், கலப்பு நீதிமன்ற விசாரணை இடம்பெறப் போவது போல எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரு மாயையை ஏற்படுத்த முற்பட்டுள்ளனர்.

கலப்பு நீதிமன்றத்தின் ஊடாகவே போர்க்குற்ற விசாரணை இடம்பெறப் போவதாக பாராளுமன்றத்தில் தெரிவிப்பதன் மூலம் சாதாரண சிங்கள மக்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தி மீண்டும் வன்முறையை தோற்றுவிப்பதே போராட்டம் நடத்திய எதிர்க்கட்சி உறுப்பினர்களின் திட்டம்.

உண்மையில் கலப்பு நீதிமன்ற விசாரணையை கூட ஐ.நா உருவாக்கவில்லை என்று தமிழ் அரசியல் தலைமைகள் கூக்குரல் போட்டிருந்தால் கலப்பு நீதிமன்றம் என்றவாறான ஒரு திசை திருப்பத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்களால் செய்ய முடியாது போயிருக்கும்.

மாறாக உள்ளக விசாரணையும் நடத்தக் கூடாது என்ற கோஷத்தை மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பியிருப்பர்.

இது இலங்கையின் பெரும்பான்மை இனம் சார்ந்தவர்களின் மனநிலை எவ்வாறு உள்ளது என்பதை சர்வதேசத்திற்கு அறிவித்திருக்கும்.

பரவாயில்லை கலப்பு நீதிமன்றத்திற்கு எதிப்பு என்பது உள்ளக விசாரணையையும் பலவீனப்படுத்துவதற்கானது என்பது தெரிந்ததே.

இங்குதான் இலங்கை அரசு ஐ.நாவில் ஒரு வடிவமும் இலங்கையில் இன்னொரு வடிவமும் எடுத்துள்ளமையை உணர முடியும்.

ஆக, கலப்பு நீதிமன்ற விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் போராட்டத்திற்கு அரசின் ஆசீர்வாதம் நிறையவே உண்டு.

# யாழ்.பொதுநூலகம் எரிப்பு; சிங்கள அதிகாரி வாக்குமூலம்

### ஜே.வி.பி. ஆவணமாக வெளியீடு

யாழ்.பொதுசன நூலகம் ஐக்கிய தேசிய கட்சியினரால் எதிர்க்கப்பட்டதை நேரடியாக பார்த்த சிங்கள அதிகாரியின் வாக்குமூலம்யாழ்.பொது நூலகத்தில் ஆவணமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கறறுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட இந்த வாக்கு மூலத்தினை மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர விமல் ரத்னாயக்க கையளித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் சோசலிச இளைஞர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சே குவேரா நினைவை முன்னிட்டு ஒரு தொகுதி நூல்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ் பொது சன நூலகத்தில் நடைபெற்றபோது நூல்கள் மற்றும் எல்.எல்.ஆர்.சியின் அறிக்கை என்பவற்றை கையளித்து உரையாற்றிய அவர் தெரிவிக்கையில்,

உலகின் அர்ப்பணிப்பாளர் சே குவேராவின் நினைவு கடந்த 8 வருடங்களாக தென்னிலங்கையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த வருடம் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுகின்றோம். அதற்கமைய ஒரு தொகுதி நூல்களை யாழ்.நூலகத்திற்கு அன்பளிப்பு செய்ய முடிவெடுத்தோம். உலகில் நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக போராடிய சே குவேரா அறிவாளி-மருத்துவர்-குழந்தைகளின் நலனுக்காக பாடுபட்டவர் தனது நித்திரையை குறைத்து புத்தகத்தை அதிகம் படித்தவர்.

81இல் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட வடு இன்னும் ஆறவில்லை. அந்த வடுவை மனக்கவலையை ஒரு வகையில் தணிப்பதற்காக இந்த புத்தக அன்பளிப்பு நிகழ்கின்றது. அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியினரால் மத்திய கல்லூரியில் தங்கியிருந்து நூலகத்தை காடையர்களைக் கொண்டு எரிக்கப்பட நிகழ்வை நேரடியாக பார்த்த சிங்கள அதிகாரி ஒருவருடைய எல்.எல். ஆர்சிக்கு சாட்சியமளிக்கப்பட்ட அறிக்கையை உங்களிற்காக கொண்டு வந்திருக்கின்றேன். காரணம் நூலக எரிப்பை சிலர் வேறு விதமாக திரிவுபடுத்த பார்க்கின்றனர். அதோடு தேசிய இனங்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றது.

இவை களையப்பட்டு சகல மக்களும் ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் வாழும் நிலை உருவாக்கப் பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4,51)

## சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்க்க விசேட நீதிமன்றச் செயற்பாடுகள் அவசியம்

### டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விசேட நீதிமன்றச் செயற்பாடுகள் அவசியம் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணையில் அதி உச்சபட்ச தண்டனையான மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்ட வாதப் பிரதிவாதங்களின்போது பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய நாளில் எமது எதிர்காலச் சந்ததியினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் ஒளிமயமான எதிர்காலம் தொடர்பாக ஆக்கபூர்வமாக ஆராயப் பட வேண்டும். துரதிஷ்டவசமாக எமது நாட்டில் சிறுவர்கள் மற்றும் இளம்பரா யத்தினர் மீதான வன்முறைகள் அதிகரித்து வந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சிறுவர்கள் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் நாகரீகச் சமூகத்தை தலைகுனியச்செய்வதாகவே நடைபெறுகின்றது. யுத்தம் நடந்த காலப் பகுதியில் வீட்டைவிட்டு வெளியில் செல்கின்ற ஒருவர் மீண்டும் வீடு வந்து சேரும்வரை குடும்பத்தினர் அச்சத்துடனேயே இருந்தனர்.

அந்த யுகம் இப்போது இல்லை என்றபோதும், இப்போது பெண்கள் மற்றும் சிறுவர்களின் சுதந்திரமான நடமாட அச்சத்தைக் கொடுப்பதாக மாறியுள்ளது. நாட்டு மக்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய அண்மைய சம்பவங்களான, புங்குடுதீவு மாணவி வித்தியா மீதான பாலியல் வன்கொடுமையும், கொலையும், கிளிநொச்சியில் மூன்று வயதுச் சிறுமியை சிறுவன் ஒருவன் கடத்தி, கொலை செய்தமையும், வவுனியா தோனிக்கல்லில் சிறுவன் ஒருவன் தனது சகோதரனையே கொலை செய்ததும், கொட்டதெனிய சிறுமி சேயா வீடு புகுந்து கடத்தப்பட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செயப்பட்டதும், அத்துருகிரிய வில்பத்து வயதுச் சிறுவன் ரவிந்தை அவரது தகப்பன் மீதான கோபத்துக்காக படுகொலை செய்யப்பட்டது போன்ற சம்பவங்கள் குறிப்பிடக் கூடியவையாகும்.

சிறுவர்கள் மீதான வன்முறைகள், பாலியல் தொல்லைகள் என்பன பெரும்பாலும், குடும்ப அங்கத்தவர்களாலும், குடும்பங்களோடு நெருக்கமான உறவைக் கொண்டிருப்பவர்களாலுமே இடம்பெறுவதாக சமூக அமைப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஆகவேதான் சிறுவர்க்ள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் முதலில் பெற்றோர்கள் மிகுந்த கவனமாக இருக்கவேண்டும் என்றும் சமூக அக்கறையாளர்களும், பொலிஸ் மற்றும் சிறுவர் நலன் சார்ந்த அமைப்புக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை தீவிரமாக முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்த விரும்புகின்றேன் என அவர் தெரிவித்தார். (இ-10)




### இனிய பதில் கூறுங்கள்

★ ஒருவர் தர்மம் செய்கிறாரென்றால், அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட நல்லெண்ணத்தின் காரணமே.

★ ஒருவர் கஞ்சத்தனம் செய்கிறார் என்றால் அவர் அல்லாஹ்வின் மீது கொண்ட தவறான எண்ணத்தின் காரணமேயாகும்.

★ வாழ்நாளெல்லாம் கஞ்சனாக இருந்து விட்டு மரணவேளையில் கொடை வள்ளலாக மாறும் மனிதனைப் பார்த்து இறைவன் கோபம் அடைகின்றான்.

★ நீங்கள் ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளாதீர். ஒருவர் மீது ஒருவர் துவேசம் கொள்ளாதீர்.

★ எவரிடமும் உங்கள் தேவைகளை மறைமுகமாகச் சொல்லிக் கேளுங்கள். ஏனென்றால் ஒவ்வொன்றிற்கும் பொறாமைப்படுபவன் இருந்து கொண்டே இருக்கிறான்.

★ வசதி இல்லாதவன் உங்களிடம் ஏதேனும் கேட்டால் கொஞ்சமேனும் கொடுத்து அனுப்புங்கள் அல்லது இனிய வார்த்தைகளால் பதில் சொல்லுங்கள்.

★ கஞ்சத்தனத்தைப் பற்றி பயந்து கொள்ளுங்கள். ஏனென்றால் உங்கள் முன்னோர்கள் கஞ்சத்தனத்தின் காரணமாகத் தான் அழிந்து போனார்கள்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருங்கிய நட்பை நிலை நிறுத்துவது எப்படி?

நெருங்கிய நட்பை முறிப்பது எது?

❖ அகந்தை அல்லது ஒரு கருத்தில் விடாப்பிடியாக நிற்பது
❖ ஆசை
❖ நெருங்கிய உறவு நினைத்தபடி இருப்பதாகக் கொள்வது
❖ தன்னிடமோ மற்றவரிடமோ குறைகளைக் கண்டுபிடிப்பது
❖ எதிர்பார்ப்புகள்
❖ உணர்ச்சியற்று இருப்பது அல்லது அதிகமாக உணர்ச்சி வயப்படுவது
❖ **விவேகம்** அல்லது **வைராக்கியம்** இல்லாமல் இருப்பது
❖ தீர்ப்புகள் (விடயங்களை- மனிதர்களை எடை போடுகிறது)
❖ முணுமுணுப்பது அல்லது நன்றியுணர்வின்மை

**நெருங்கிய நட்பை எப்படி நீங்கள் நிலை நிறுத்துவீர்கள்?**

எல்லையற்ற பரம்பொருளில் கரைந்து விடுங்கள். அதுவே நெருங்கிய நட்பை நிலைப்படுத்தும். பரம்பொருளில் கரைவது உங்களை நிகழ்காலத்திற்குக் கொண்டு வருகிறது. நிகழ்வுகளைக் கடந்து அப்பால் செல்கிறீர்கள்.

நிகழ்வுகளுக்கு அப்பால் பார்வையைச் செலுத்துங்கள், பரம்பொருளில் கரைந்து விடுங்கள். நிகழ்காலத்தில் நிலை பெறுங்கள்.

**நெருங்கிய நட்பை நிலைநிறுத்த இதுவேவழி.**


சத்சங்கத்தில் நீங்கள் கலந்து கொள்வதால் உங்களுக்கு அதிகமாக எதுவும் கிடைக்கப்போவதில்லை. ஆனால் நீங்கள் கலந்து கொள்ளாது போனால் இழப்பு மிக அதிகம். நீங்கள் எங்கு இருக்கின்றீர்களோ, என்னவாக இருக்கின்றீர்களோ, அதாவது உங்களுடைய நிலையை நிலை நிறுத்திக் கொள்ள வாரந்தோறும் சத்சங்கத்தில் நீங்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.

இனி இந்தப் பயிற்சியைச் செய்யுங்கள்

ஒவ்வொருநாளும் யாருமில்லை என்றாலும் தனியாக நீங்கள் ஒருவரே சத்சங்கம் செய்யுங்கள். யாருடனும் எவருடனும் திறமையாக ஒரு பத்து நிமிடங்களுக்கு ஞானத்தைப் பற்றிப் பேசுங்கள். உங்களுக்கு வம்பு பேசும் பழக்கம் உள்ளதென்றால் இரண்டு வாரங்களுக்கு குறிப்பாக சத்சங்கத்திற்கு வராதவர்களிடம் ஞானத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

“எல்லாமே நிலையற்றது. எல்லாமே மாறிக் கொண்டிருக்கிறது” என்று சொல்லுங்கள். உலகின் மாறும் தன்மை பற்றிப் பேசுங்கள்.






மாதனை விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் இறுதிப் போட்டியில் சில பதிவுகள்...

## மாகாண ரீதியிலான கரப்பந்து சிவப்பிரகாச வித்தி சம்பியன்

தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் 13 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான அணிகளுக்கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம் சம்பியனாகியது.

கடந்த சனிக்கிழமை அல்வாய் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் மோதியது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தின் முதல் இரண்டு செற்களையும் கைப்பற்றிய சிவப்பிரகாச அணி மாகாண மட்ட சம்பியனாகியது. (க)

## முரளி கிண்ணத்தின் இன்றைய போட்டிகள்

2015 ஆம் ஆண்டுக்கான நடப்பு வருடத்திற்கான முரளி கிண்ணத் தொடரில் இன்று நடைபெறவுள்ள போட்டி விபரங்கள் வருமாறு.

யாழ்.சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.40 மணி வரை டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியும் மொனராகல இணைந்த பாடசாலை அணிகளும் பிற்பகல் 1.40-4.50 மணிவரை யாழ்.இணைந்த பாடசாலைகளும் மொனராகல இணைந்த பாடசாலைகளும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.40 மணிவரை மேல்நாட்டு இணைந்த பாடசாலைகளும் திருகோணமலை மட்டக்களப்பு இணைந்த பாடசாலைகளும் பிற்பகல் 1.40 தொடக்கம் 4.50 வரை யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியும் டெபறவெவ மத்தியும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 12.40 மணிவரை கிளிநொச்சி முல்லைத்தீவு இணைந்த பாடசாலைகளும்சுவதேச இணைந்த பாடசாலைகளும் பிற்பகல் 1.40 தொடக்கம் 4.50 வரை கொழும்பு ஆனந்தாக் கல்லூரியும் வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரியும் முல்லைத்தீவில்காலை 9.30 மணி தொடக்கம 12.40 மணிவரை பி.டி.எஸ்.குலரத்தின கல்லூரியும் தர்மராஜ கல்லூரியும் பிற்பகல் 1.40 தொடக்கம் 4.50 மணிவரை றிஃமண்ட் கல்லூரியிலும்மன்னார்வவுனியா இணைந்த கல்லூரியிலும் மாங்குளத்தில் (பெண்கள்) காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11.20 வரை அநுராதபுரம் சக்தி மகளிரிரும் பதுளை மகளிரும் முற்பகல் 11.40-2 மணி வரை பொலனறுவை மகளிரும் பெண்கள் இணைந்த பாடசாலையிலும் பிற்பகல் 2.40 தொடக்கம் 5 மணி வரை மாத்தளை மகளிரும் வடக்கு கிழக்கு இணைந்த மகளிரும் விளையாடவுள்ளன. (க)

## ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கோட்டங்களுக்கிடையில் நடைபெற்ற மென்பந்து,உதைபந்தாட்ட போட்டிகள்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயத்தின் பருத்தித்துறை கோட்டம் மற்றும் கரவெட்டிக் கோட்டங்களுக்கிடையிலான உதைபந்து மற்றும் மென்பந்து போடடிகள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் இரவீந்திரன் அதிபர் கிருஷ்ணகுமார் மற்றும் ஆசிரிய ஆலோசகர் இராஜசீலன் முன்னிலையில் நடைபெற்றது. உதைபந்தில் பருத்தித்துறை கோட்டம் 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மென்பந்தாட்டம் சமநிலையில் முடிவுற்றது. (க)



## சென்.மேரிஸ், றோயல் இறுதியாட்டத்துக்கு தகுதி

அராலி ஏ.எல்.விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்.வலிகாமம் வடமராட்சி பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தி வரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் சென்.மேரிஸ். றோயல் அணிகள் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

இந்தத் தொடரில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதிபெற்றது. (க)

## மைக்கல் உதைபந்து தொடர் ஊரெழு றோயல் வெற்றி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக



கழகம் மோதியது.

இதில் 2:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

## நேரடி இணக்கப்பாடு...

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் சரணடைந்த போது, கொலை செய்யப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. குறிப்பாக வெள்ளைக்கொடி ஏந்தி வந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பிரதானமாக குற்றம்சுமத்தப்படுகிறது. இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இலங்கைக்கான நோர்வே தூதுவராக கடமையாற்றிய டோர் ஹாட்ரெமிடம் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட முடியும்.

**சரணடைய முயற்சி**

2009ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி ஹாட்ரெம், பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள எனது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வந்தார். புலிகள் சரணடைய விரும்புவதாக கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தம்மைத் தொடர்பு கொண்டு, சரணடைய விரும்புவதாக கூறினார் என ஹாட்ரெம் குறிப்பிட்டார்.

புலித்தேவனும் சில உறுப்பினர்களும் அவர்களது குடும்பங்களும் சரணடைய விரும்புவதாக புலித்தேவன் கூறினார் என்ற தகவலை ஹட்ரெம் என்னிடம் பரிமாறிக் கொண்டார். புலித்தேவனுடன், ஹாட்ரெம் தொலைபேசி ஊடாக தொடர்புகளைப் பேணி வந்தார். எவ்வாறெனினும், சரணடைவதற்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியவில்லை. யார் சரணடைய விரும்புகின்றார்கள் என்பது பற்றிய ஆள் அடையாள விபரங்களை புலித்தேவனைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள ஹாட்ரெமினால் முடியாமல் போய்விட்டது.

**ஆள் அடையாள உறுதிப்பாடு தேவை**

ஆள் அடையாளத்தை உறுதி செய்து சரணடையச் செய்ய வேண்டும் என்பதே என்னுடைய தீர்மானம். புலித்தேவனை தொடர்பு கொள்ள முடியவில்லை என ஹட்ரெம் குறுஞ் செய்தியொன்றை தமக்கு அனுப்பி வைத்திருந்தார். இதனால் சரணடையும் முயற்சி தோல்வியடைந்தது. சில மணித்தியாலங்களின் பின்னர் விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இறுதி முயற்சியை மேற்கொண்டனர்.

உண்மையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சரணடைவதாகக் கூறி எம்மீது இறுதித் தாக்குதல் ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்தனர். விடுதலைப் புலிகளின் முக்கியமான உறுப்பினர்கள் சரணடைய முயற்சித்த விவகாரம் தொடர்பில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அப்போதைய இலங்கைக் கிளைத் தலைவர் போல் கெஸ்டெல்லா விடமும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

சரணடைவதற்காக, முன்னரங்கப் பகுதிகளின் பாதுகாப்பு கட்டமைப்புக்களை தளர்த்துவோம் என தமிழீழ விடுதலைப் புலிகள் கருதினர். அமெரிக்காவின் இலங்கைத் தூதரகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கேபிள் தகல்வலகளின் அடிப்படையில் விக்கிலீக்சும் இந்த விடயம் பற்றிய தகவல்களை வெளியிட்டிருந்தது. புலிகள் சரணடைவது தொடர்பில் இலங்கையுடன் தொடர்புகளைப் பேணிய வெளிநாட்டு தரப்புக்கள் பற்றிய அனைத்து விபரங்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது.

இலங்கை யுத்தம் தொடர்பிலான பல்வேறு தகவல்களை விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது. விக்கிலீக்ஸ் தகவல்களை விசாரணை செய்யும் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளுமா என்பது கேள்விக்குறியே.

**பசிலுடன் தொடர்பு**

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி, ஹாட்ரெம், பசில் ராஜபக்‌ஷவிற்கு குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதில் வன்னி கிழக்கு களமுனையில் பொது மக்கள் சிக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்காது தடுத்து வைத்திருப்பதாகவும் ஹாட்ரெம், பசிலுக்கு அறிவித்திருந்தார். புலிகள், சிக்கியுள்ள பொதுமக்களை தற்போதைக்கு விடுவிப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை எனவும் அது வருத்தமளிப்பதாகவும் ஹாட்ரெம் கையொப்பமிட்டு பசிலுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்களை புலிகள் பணயமாக வைத்திருந்த போது யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணிய சர்வதேச சமூகத்தின் எவரும், பொதுமக்களை விடுவிப்பதற்காக குரல் கொடுக்கவில்லை. பொதுமக்களை விடுதலை செய்யுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எந்தவொரு சர்வதேச தரப்பும் கோரவில்லை.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில், யுத்த காலத்தில் இலங்கையில் கடமையாற்றிய ஐக்கிய நாடுகள் அமைப்பு அதிகாரிகள் சாட்சியமளிக்க முடியும். பொதுமக்களை விடுதலை செய்ய முயற்சித்த தமிழ் பேசும் ஐக்கிய நாடுகள் உத்தியோகத்தர்களை புலிகள் சிறைபிடித்தனர் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## தொண்டராசிரியர்...

கடந்த 2001ஆம் ஆண்டு முதல் தாம் தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றி வரும் நிலையில், தமக்கு நிரந்திர நியமனம் வழங்கக் கோரியே இந்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். அது தொடர்பில் மேலும் கல்வி அமைச்சர் தெரிவிக்கையில்,

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சரவையில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுப்பதாக மத்திய கல்வி அமைச்சருடன் இது தொடர்பில் பேசப்பட்ட போது உறுதி அளித்துள்ளார்.

எனவே ஆறு மாத காலத்திற்குள் நியமனம் வழங்கப்படும் என தான் எதிர்பார்ப்பதாக கல்வி அமைச்சர் தெரிவித்தார். அதனை அடுத்து போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தினை கைவிட்டனர். மேலும் யுத்தத்தின் போது பல கஷ்டங்களை எதிர்நோக்கிய தாம் இப்போதும் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றோம் எனவே விரைவாக நியமனத்தை வழங்கு மாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-4)

## தமிழ் அரசியல்....

என எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச அளவிலும் பேசப்பட்டு வருகின்றது. ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளரின் கவனமும் இந்த விடயம் குறித்து திரும்பியிருக்கும் நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களின் விவகாரத்தில் அரசாங்கம் ஏன் காலதாமதம் செய்கிறது?

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே அவர்களை விடுவிப்பதற்கு இதுவே சிறந்த தருணம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## பிரதிப் பொலிஸ் மா...

கப்படலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது வாள் வெட்டு, கோஸ்டி மோதல்கள் போன்றவை அதிகரித்துள்ள நிலையிலும் பொலிஸார் இவற்றை கட்டுப்படுத்தாத நிலையே காணப்படுகின்றது. யாழ்.மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கு தொடர்பில் பொது மக்கள் மத்தியில் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலேயே இவருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்படுள்ளது.

இதேவேளை காங்கேசன்துறையில் இராணுவம் மேற்கொண்ட இரும்பு கடத்தலை முறியடித்து அதில் ஈடுபட்ட இராணுவத்தினை கைது செய்ய முயன்ற போது அரசியல் தலையீடுகளினால் கொழும்பிற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட இந்திரன் இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என கூறப்படுகின்றது. (செ-12)

## சில்லில் நசியுண்டு...

உயிரிழந்தார் என பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். பளை, சின்னத்தாளையடியைச் சேர்ந்த க.செல்வகுமார் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள இவரது சடலத்தினை உறவினரிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-12)

## அதிபர் சேவை...

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் இன்று வெள்ளிக்கிழமை நிறைவு பெறுவதால் அடுத்தநாள் பரீட்சைக்குத் தோற்றுவதில் சிரமங்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே இப்பரீட்சைத் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு 11 ஆயிரத்து 522 தமிழ் மூல ஆசிரியர்களும், 8 ஆயிரத்து 983 சிங்கள மொழி மூல ஆசிரியர்களும் விண்ணப்பித்து இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## மாவட்ட இணைப்பாளரை...

சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய அணி தேசிய அரசமைத்து ஆட்சியில் உள்ளது.

இவ் அரசு மாவட்ட ரீதியாக தனது அபிவிருத்தி வேலைத் திட்டங்களினை முன்னெடுப்பதற்கு மாவட்ட அமைச்சர்களினை நியமனம் செய்து வருகின்றது.

இதனடிப்படையில் வடக்கிலும் இவ் மாவட்ட அமைச்சர்களினை நியமனம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு மத்தியினால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சரினால் அதிகார பகிர்வுக்கு இடையூறாக அமையும் என சுட்டிக்காட்டியே ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மத்தியால் மாவட்ட அமைச்சர் நியமனம் செய்யப்பட்டால் அரச அதிகாரிகள் மாகாண சபைக்கு கட்டுப்படாமல் அந்த அமைச்சருக்கே கட்டுப்படவேண்டிய நிலையேற்படும்.

மத்தியின் செயற்பாடுகள் மாகாண சபையின் அனுமதியின்றி ஆலோசனையின்றி மாகாணத்திற்குள் திணிக்கப்படும். ஏற்கெனவே சொற்ப அதிகாரங்கள் கொண்ட மாகாண சபையின் அதிகாரங்கள் மேலும் மேலும் இவ் மாவட்ட அமைச்சர்கள் மூலம் பலவீனமாக்கப்படும் என கூறப்படுகிறது.

மாவட்ட அமைச்சரினை இணைப்பாளராக கோரும் இக் கடிதத்தினை வட மாகாண சபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இணைந்து ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாக அறிய முடிகின்றது. (எ-4)

## நடைபாதை வியாபாரம் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முனீஸ்வரர் வீதியில் உள்ள நடைபாதை வியாபார நிலையங்கள் நேற்றிரவு யாழ்.மாநகர சபை அதிகாரிகளால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது உரிமம் மற்றும் சட்டமீறல்கள் காரணமாக சுமார் 25 நடைபாதை வியாபார நிலையங்களுக்கு சீல் வைக்கப்பட்டது.

நேற்றிரவு யாழ்.மாநகர சபை அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை தொடர்பில் யாழ்.மாநகர சபை ஆணையாளரை நடைபாதை வியாபாரிகள் இன்று சந்திப்பர் என்றும் தெரியவருகிறது. (ந)


**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் வண்ணை பெருமாள் கோயிலுக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:-** (இ)

**0718513913, 0776284391**



வலம்புரி

021 221 7603, 021 567 1532



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

(கி-2420)



கிளி/கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் **திரு.இராசதுரை சாந்தகுமார்** அவர்கள் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் சிறந்த ஆசிரியருக்கான "பிரதீபா பிரபா" நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையையிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**கிளி/கிளிநொச்சி**
**மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை)**



**அன்பொளி கல்வியகம்**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

2015 தரம் 5 இல் எமது கல்வியகத்தில் கல்வி கற்ற மாணவர்களில் அகில இலங்கை ரீதியில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்மை பெற்ற மாணவர்களையும் அவர்களோடு சித்தியெய்திய 400க்கும் மேற்பட்ட ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



**ப.வசீகரன் - 192**
மா. நிலை - 1



**சி.துளசிகன் - 191**
மா. நிலை - 2



**ர.திலக்சன் - 188**
மா. நிலை - 5



**மு.சஞ்சயன் - 186**
மா. நிலை - 9



**ஸ்ரீ.கஜலக்ஷன் - 186**
மா. நிலை - 9

**ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின்**

2016 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன

| **ஞாயிற்றுக்கிழமை** | **சனிக்கிழமை** |
| --- | --- |
| யாழ்ப்பாணத்தில் | சாவகச்சேரியில் |
| **அன்பொளி கல்வியகம்** | **அன்பொளி கல்வி நிலையம்** |
| யாழ்.இந்துக் கல்லூரி வீதி, | தபாற்கந்தோர் வீதி, |
| யாழ்ப்பாணம். (C-2414) | சாவகச்சேரி. |

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டிடுவோம்.

இயக்குநர்கள்

## நாடாளுமன்றில்...

மாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்ற அதிகாரிகளிடம் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஷ கடந்த 6ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு சென்றிருந்த போதே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்றத்தில் தனியான அறைகள் ஒதுக்கப்படும் சம்பிரதாயம் இல்லை என அதிகாரிகள் அவருக்கு தெரியப்படுத்தினர்.

எனினும் தான் முன்னாள் ஜனாதிபதி என்பதால், தனது நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்றத்தில் அலுவலக அறையொன்று ஒதுக்கப்பட வேண்டும் என மகிந்த ராஜபக்ஷ வாதிட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஆகியோருக்கு தவிர எதிர்க்கட்சியின் அங்கம் வகிக்கும் எவருக்கும் நாடாளுமன்றத்தில் அலுவலக அறைகள் ஒதுக்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதியாக இருந்தாலும் அவர் தற்போது சாதாரணமான நாடாளுமன்ற உறுப்பினர் மாத்திரமே.

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளை முடக்கும் நோக்கிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளவே மகிந்த தனியான அலுவலகம் ஒன்றை கோருகிறார் எனவும் அந்த அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## விசாரணைக்...

சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் நேற்று 09 பேரும் வரவில்லை என்றாலும் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட சிலர் சென்றதாக குறிப்பிட்டுள்ளார்.

ரக்னா லங்கா நிறுவனத்தின் நடவடிக்கை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணை நடவடிக்கைகள் இறுதி கட்டத்தையடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-12)

## பிரதமர் ரணில்...

பிரதமர் இலங்கை வந்தடைந்துள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் பிரதமர் ரணில விக்ரமசிங்க மற்றும் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் இணைந்து கூட்டு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

2016ஆம் ஆண்டின் முதல் பாதியில் இருந்து பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் இரு தரப்பு கலந்துரையாடல் மேற்கொள்வதற்கு இலங்கை மற்றும் ஜப்பான் இணக்கம் வெளியிட்டதாக கூட்டு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது கட்ட கட்டுமாண நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பது தொடர்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. (எ-11)

## புலி உறுப்...

அநுராதபுர விசேட உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதிபதி ஸ்வர்ணா கேமாதிபுதி வழக்கை பிறிதொரு தினத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இரண்டு பேருக்கும் எதிர்வரும் நவம்பர் 02-ம் திகதி வரையில் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார். (எ-11)

## இலங்கைக்கு...

ரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கும் டெஸ்மன் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழுவின் உறுப்பினராக இவர் கடந்த ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஆயுதக்கப்பல்...

விஜேகுணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், விசாரணை முடியும் வரை இந்தக் கப்பல் காலி துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

இக்கப்பல் கைப்பற்றப்பட்ட போது உக்ரேனியர் ஒருவரே அதற்குப் பொறுப்பாக இருந்துள்ளார்.

ஆனால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் இலங்கையர் ஒருவரே கப்டன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, இந்த ஆயுதக் கப்பல் கைப்பற்றப்பட்டதை உறுதிப்படுத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இது குறித்த விசாரணைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருவ[illegible] தெரிவித்தார். (எ-11)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26 - 07 - 1977



உதிர்வு
21 - 09 - 2014

திதி:09.10.2015

அமரர் தம்புத்துரை விஜயேந்திரன் BA (Hons), MA
(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கரவெட்டி.)

அவசரமாய் எம்மை விட்டுப் பிரிந்த அப்பாவே!
ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த வாழ்வு ஏனோ முடிந்து போனது.
உதவியென்றால் உங்கள் கரம் அரவணைக்கும் என்ற உண்மை
உறங்கிப் போனதோ மற்றவன் எப்படியும் வாழட்டும் என்று
எப்போதும் இருந்ததில்லை நீங்கள். இப்படி வாழுங்கள் என்று
இதமாய் அறிவுரை சொல்வீர்கள்.
ஓராண்டு உங்களைப் பிரிந்து வாழும்
எமக்கு எங்கேயப்பா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில் ஆறாத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.

இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

C-2408

கொடுக்கிளாய்,
உடுத்துறை.

இங்ஙனம்
மனைவி, மகன்மார் மற்றும் குடும்பத்தினர்



SIKARAM
Any Visa to Any Country

School of Hospitality &ENGLISH

உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்

புதிய பிரிவு ஆரம்பம் 15-10-2015, வியாழன் 10 மணி

Business & Hotel Management
Certificate – Diploma – Bachelors Degree

Leading to University of Sunderland UK

கற்கைநெறிக் காலத்தில் ரூ.15,000 வரை வருமானம்
SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA VISAS

with ENGLISH
Beginner's Level
Advanced Learners
IELTS Preparatory

MONEY BACK 100% GUARANTEE
3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
(C-2418)

இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு

077 36 16 798, 021 222 0011

இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



வேலையாட்கள் தேவை

ஸ்ரான்லி வீதியில் புதிதாக திறக்கப்படவுள்ள குளிர்பான நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- முகாமையாளர் (மும்மொழியும் சரளமாக பேசக்கூடியவர்)
- மேற்பார்வையாளர்
- Supplier
- Tea Maker
- Receptionist
- சமையல் உதவியாளர்
- Bill Clerk
- Cleaners (சுத்திகரிப்பாளர்)
- சிற்றுண்டித் தயாரிப்பாளர்

(C-2412)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் பேசித் தீர்க்கப்படும் (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)

11.10.2015 ஞாயிற்றுக்கிழமை 213, ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தி எனும் முகவரிக்கு காலை 9.00 மணி முதல் 2.00 மணிவரை சமுகம் தரவும். தகுதியானவர்கள் உடனேயே தெரிவு செய்யப்படுவர்.

தொடர்புகளுக்கு - 077 998 5970



சைப்பிரஸ் (ஐரோப்பா) மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பு

| வேலை | COUNTRY | வெற்றிடம் | SALARY |
|---|---|---|---|
| HEAVY VEHICLE DRIVER | சவுதி அரேபியா | 05 | 45,000 ரூபா |
| ELECTRICIAN | சவுதி அரேபியா | 07 | 55,000 ரூபா |
| CARPENTERS | சவுதி அரேபியா | 05 | 55,000 ரூபா |
| MASON | சவுதி அரேபியா | 15 | 55,000 ரூபா |
| STEEL FIXER | சவுதி அரேபியா | 15 | 55,000 ரூபா |
| AC- TECHNICIANS | சவுதி அரேபியா | 06 | 63,000 ரூபா |
| PLUMBER | சவுதி அரேபியா | 06 | 55,000 ரூபா |

| வேலை | COUNTRY | வெற்றிடம் | SALARY |
|---|---|---|---|
| CIVIL ENGINEER (DIPLOMA) | சவுதி அரேபியா | 05 | 130,000 ரூபா |
| MECHANICAL ENGINEER | சவுதி அரேபியா | 05 | 130,000 ரூபா |
| COOK -(சமையல்) | சவுதி அரேபியா | 01 | 60,000 ரூபா |
| HELPER -(சமையல் உதவியாளர்) | சவுதி அரேபியா | 01 | 45,000 ரூபா |
| CASHIER -(காசாளர்) | சவுதி அரேபியா | 10 | 50,000 ரூபா |
| WELDER -(வெல்டர்) | சவுதி அரேபியா | 02 | 74,000 ரூபா |
| CLEANER - (கிளீனர்) | சவுதி அரேபியா | 35 | 35,000 ரூபா |

| வேலை | COUNTRY | வெற்றிடம் | SALARY |
|---|---|---|---|
| FARM LABOURERS (தோட்ட வேலையாளர்) | சைப்பிரஸ் | 50 | 130,000 ரூபா |
| CARE TAKER(முதியோர் பராமரிப்பாளர்) | சைப்பிரஸ் | 25 | 130,000 ரூபா |
| COOK -(சமையற்காரர்) | சைப்பிரஸ் | 01 | 60,000 ரூபா |



MANTEK ENTERPRISES
V2 TRAVELS & TOURS

நேர்முகத்தேர்வு : 11-10-2015

கட்டாயமாக சுயவிபரக்கோவை(CV)மற்றும் தகமைச்சான்றிதழ்களின் நிழல்பிரதிகளுடன்(photo copy)வரவும். காலை 10 மணி முதல் மாலை 4 மணிவரை(ஞாயிற்றுக்கிழமை)

தொடர்புகளுக்கு: 0768226243
49A,சப்பல் லேன்,யாழ்ப்பாணம்.
(C-2419)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.